வெளியீடு எண். 158.

குருபாதம்

# அபிராமி அந்தாதி

598

விருத்தியுரையுடன்

ஆசிரியர்

## ஸ்ரீ அபிராமிபட்டர்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

உரு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுள்ளப்பாங்கின்படி

திருக்கடவூர்

ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது.

1948.

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகம்

# பதிப்புரை

தெய்வத்தமிழ்ப் பாடல்களே சிந்தையை யுருக்கித் தூய்மை வழங்குவன. அமைதியை அளிப்பன. பாடிய கவிஞன் அடைந்த பேறுகளை எக்காலத்தும் யாரும் பெறச் செய்வன. அத்தகைய உயிர்க் கவிதைகளில் அபிராமி அந்தாதியும் ஒன்று. அந்தாதியைப் படிக்கின்ற இடத்திலும் ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி யுறைபவளாகிய அபிராமியின் விளக்கமும் நீங்காது என்பது அனுபவம்.

இதனையியற்றியவர் திருக்கடவூர் அபிராமி பட்டர். இவரை உய்வித்ததும் உயிர்ப்பித்ததும் காண்பித்ததும் களிப்பித்ததும் எல்லாம் இந்தப் பாடல்களே. இம்மை மறுமை இன்பத்தை வேண்டுவார் பாராயணஞ்செய்து, அபிராமிபட்டரைப்போலவே இன்றும் பயன் எய்திவருகின்றனர். **மனக் கோயிலில் மன்னிய தெய்வத் தமிழ்ப்பா பயன் தராதொழியுமா?** ஆதலால் தமிழ் உலகம் பயின்று பயன் எய்துமாக.

**ச. தண்டபாணி**

# முகவுரை

அந்தாதியென்பது தொண்ணூற்றாறு வகையான பிரபந்தங்களில் ஒன்று. ஒரு பாட்டின் இறுதி அடுத்த பாட்டின் முதலாக வந்து, இறுதியும் முதலும் மண்டலித்து நூறு கட்டளைக்கலித்துறையால் யாக்கப்பெற்று முடிவது. திருகடவூரிற் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அபிராமியின்மீது பாடப்பெற்றமையான் அபிராமியந்தாதி என்று பெயர்பெற்றது.

இந்நூல் திருவாசகம்போல அன்புச்சுவை ததும்பப் பாடப்பெற்றது. இதனுட் பலவிடங்களில் திருவாசகக் கருத்தை மட்டுமன்றிச் சொற்றொடர்களையுங்கூடக் காணலாம். திருமந்திரம், தேவாரம் முதலியவற்றின் கருத்துக்களும் ஆங்காங்கே மிளிர்கின்றன.

இந்நூலாசிரியர் பரம சைவ சித்தாந்தி என்பது சக்தியைமட்டுந் தியானிக்காமல், சக்தனையும் சேர்த்துத் தியானப்பொருளாகக் கொண்டமையானும், 'கறைக்கண்டனுக்கு மூத்தவளே' 'சத்தி தழைக்குஞ் சிவமும்' என்பது முதலிய சொற்றொடர்களால் சிவசத்தி சம்பந்தத்தை விளக்குவதாலும்,

ஆட்கொண்ட முறையை யறிவிக்கும்போது 'வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்டாய்' என்பதனானும் அறியலாம்.

இந்நூலுக்கு முதன்முதல் உரையெழுதிப் பதிப்பித்தவர்கள் யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சைவ பாநு ஸ்ரீமத் ஆறுமுகநாவலரவர்களது வழிவழி மாணாக்கரும், அடியேனுடைய ஆசிரியப்பெருந்தகை யாருமான மட்டுவில் **ம. க. வேற்பிள்ளையவர்கள்.** அவ்வுரை, நூலின் உட்கருத்தினையும், சாத்திர அமைதியினையும் எடுத்து விளக்கிச்செல்கின்றது. அதனைப் பெரும்பாலும் ஒட்டியே அடியேனால் இவ்வுரை ஒருவாறு எழுதப்பெற்றது.

இவ்வுரை பாடற்கொளுவும், கருத்துரையும், பொழிப்புரையும், விசேடவுரையும், பாடவுரையுமாகப் பகுக்கப்பெற்று இயங்குகின்றது. இப்பதிப்பில் சில மூலபாடங்களும் திருத்தம்பெற்றுள்ளன. உண்மையான சிறந்த மூலபாடங் காண்பதற்குத் துணையாயிருந்த ஏடுகள் ஐந்து. ஒன்று தருமையாதீனத்துப் புத்தகசாலைப் பிரதி. மற்ற மூன்று தஞ்சை சரஸ்வதிமால் புத்தகசாலைப் பிரதிகள். மற்றொன்று தருமையாதீன வித்துவான் சைவ எல்லப்ப நாவலர் வீட்டுப்பிரதி. இவ்வைந்தையும் வைத்து ஒப்புநோக்கிச் சில பாடங்கள் குறிக்கப்பெற்றன.

அவை:—

| செய்யுள். | பழம்பதிப்பு. | திருத்தியபாடம். |
| --- | --- | --- |
| 1 | விழுத்துணையே | விழித்துணையே |
| 12 | உன்னைநயந்தோரவையத்து | உன்னைநயந்தோரைவையத்து |
| 19 | ஞானத்தெளிநின்றதென்ன | ஞானத்திருநின்றதென்ன |
| பயன் | அங்குசபாசாங்குசமுங் கரும்புமங்கை | அங்கையிற்பாசாங்குசமுங் கருப்புவில்லும் |

இங்ஙனமாக, இப்பதிப்பு தருமபுர ஆதீனம் 25-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி யருட் செங்கோல் செலுத்திவருகின்ற **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** திருவுளப்பாங்கின்வண்ணம் திருக்கடவூர் தேவஸ்தான வெளியீடாக வருகின்றது.

உரைக்கண்ணுள்ள குற்றம் பொறுத்துக் குணம்பெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.



நூலாசிரியர்:-

# அபிராமிபட்டர்

சோழவளநாட்டில், சரித்திரத்திலும் சாத்திரத்திலும் சமய நிலையிலும் விளக்கம்பெற்ற திருக்கடவூரிலே, அந்தணர்மரபிலே அபிராமிபட்டர் அவதரித்தார். இவருடைய முன்னோர்கள் அபிராமி அமுதகடேசப் பெருமானிடத்து நீங்காத அன்பு பூண்டவர்கள். ஆதலால் இவருக்கும் அபிராமி பட்டர் என்றே பெயர்சூட்டினார்கள். இவரும் தம் குலதெய்வமாகிய தேவியினிடத்து முறுகிய அன்பு கொண்டு தியானயோகத்துத் திளைத்துவந்தார். பராகாசவெளியில் பராசத்தியைச் செவ்வொளியாகக்கண்டு சிவானந்தத்தேன் பருகித் தன்வசமற்றுத் தாய்வசமான சேயானார்.

இந்நிலை உலகியலில் ஊடாடும் ஊரினர்க்குத் தெரியுமா? பாம்பறியும் பாம்பின்கால். சிற்றம்பலப் பித்தேறிய மணிவாசகனாரைப் பித்தனென்ற உலகந்தானே! ஆதலால் உடன் உறையும் அந்தணர்கள் பலரும் "சத்தியுபாசகர்; ஊனுங் கள்ளும் உண்டு திரியும் பித்தர்" என்றெல்லாம் வாய்க்கு வந்தவாறு சொல்லித்திரிந்தனர். இந்த ஏச்சும் பேச்சும் சிவானந்தப் பெருவாரிதியிலே திளைக்கும்

அவர் காதிலே ஏறுமா? புலன்கடந்த பெருவெளியிலே பொருந்தியவருக்குப் புகழ் ஏது? இகழ் ஏது? எல்லாம் ஒன்றுதானே!

இவருடைய அறிவுநிலைக்காட்சி, "பார்க்குந் திசைதொறுந் திரிபுரையாள் திருமேனியைக் கண்டது. உமையும் உமையொருபாகருங் கூடிய உருவமாகக்கண்டது" இவ்வாறு அம்மையும் அப்பருமாகக் காணுங்காட்சி, சித்தாந்தச் செல்வராகிய அப்பர் ஐயாற்றிற்கண்ட காட்சியல்லவா? அக்காட்சியே இவர்க்கும் சித்திப்பதாயிற்று.

இவர் இவ்வாறு அம்மையின் அருள்வெள்ளத்து மூழ்கிவருங்காலத்து ஒருநாள் தஞ்சையையாண்ட சரபோசிமன்னன் தையமாவாசைக்குக் கடலாடக் காவிரிப்பூம்பட்டினம் வந்தான். கடவூர் நாதரைத் தரிசிக்க எண்ணித் திருக்கோயிலிற் புகுந்தான். அம்மையின் சந்நிதியில், சின்னஞ்சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும், பென்னம்பெரிய முலையும், முத்தாரமு, பிச்சிமொய்த்த கன்னங்கரிய குழலும், கண்மூன்றும் கருத்தில் வைத்துத் தன்னந்தனியிருந்து 'நினைவின்றி யாண்டுகொண்ட எளிவந்த கருணைக்கு வியந்து, ஆனந்தத்தேன் அருந்தி, அறிவு மயங்கியிருந்தார். அம்மையின் அருளொளி அவர் மேனி முழுதும் வீசிக்கொண்டிருந்தது. வீறுகொண்ட மன்னன்மனமும் கனிந்து,

கரைந்து, இத்தகைய பெரியாரோடு அளவளாவ வேண்டும். இவர் உரைகள்யாவும் உய்தி காட்டும் மந்திரங்களல்லவா! என்று எண்ணினன். அருகில் இருந்த அந்தணர்களைநோக்கி, வேந்தனையும் துரும் பாக எண்ணி வீற்றிருக்கும் இவ்விரக்தர் யார்? என்று வினவினன். அற்றம்பார்த்திருந்த அந்தணர் கள் "இவர் வாமமார்க்கத்தவர்; மதுமயக்கால் மயங்கி இருக்கின்றார்" என்றனர். மன்னன் அதனை நம்பாது அவர் முகஒளி அகத்தைப் பிணிக்க ஏதாவது பேச்சுப்பெறுதல் வேண்டும் என்ற விருப் பால் 'ஐயா! இன்று என்னதிதி? எவ்வளவுநாழிகை இருக்கிறது' என்று கேட்டான். அபிராமிதேவியின் மதிமுகத்தை மனத்தில் கண்டு, ஒளியில் ஆனந்திக் கின்ற பட்டருடைய காதில் அரைகுறையாகப் பட்டது. பட்டர், மனத்தைப் பரத்திலேவைத்து இன்று சுத்த பூர்ணிமையாயிற்றே என்றார். ஒளி கண்ட அவர் மனம் பூர்ணிமையையும், இருள்கண்ட அரசர் மனம் இருளையுமே கண்டிருப்பன ஆதலால் தேவியின் முகசந்திரனைக்கண்டு கூறிய அவர் வார்த்தையை அவன்கண்டானா? அப்படியா! அந்தணர்கள் சொன்னது உண்மை தான் என்று எண்ணிச்சென்றான்.

அரசன் செல்கின்ற ஆடம்பரஓசையால் பட்டர் மனம் திரிபுரையோக நிலையிலிருந்து சிறிது பிறிந் தது. சிந்தனை, உலகியலை நோக்கிற்று. உண்மை உணர்ந்தது. என்ன சொல்லிவிட்டோம் என்ற

இரக்கம் எழுந்தது. அப்போது அரசன் 'பட்டரே' மயக்கமா? இன்று பூர்ணிமை இல்லையாயின், அரச ஆணை உம்மை நன்னெறிப்படுத்தவருத்தும். அறிக என்று சினந்து சென்றான். பட்டர் இனி என் செய்வது? 'எல்லாம் அவள்செயல்' என்று எண்ணி "உதிக்கின்ற" என்று தொடங்கி அம்மையைத் தோத்தரிக்க ஆரம்பித்தார். அம்மையோ செந் தமிழ் வழிந்தொழுகும் திருச்செவியள். ஆதலால் தமிழ்விருப்பு கருணையைத் தாமதிக்கச்செய்தது. பாட்டும் 78 ஆயிற்று. காலமும் மாலையாயிற்று. உலகம் இருண்டு வருகிறது. பரபரந்தபட்டர் மனத்தில் தெளிநின்ற ஞானத்திரு பிறந்தது. அதனால் எழுந்த 79-ம் பாடல் "விழிக்கே அருளுண்டு" என்பது. இப்பாடல்கேட்ட தேவி தனது தோட்டினைக்கழற்றி வானமண்டலத்து வீசி, நிலவொளி உண்டாக்கி, யோகநித்திரையில் இருக்கும் பட்டரை எழுப்பி, "பார்; சுத்த பூர்ணிமையை" என்றாள். பட்டர் கண்டு அம்மையின் கருணைத் திறத்தை வியந்து நின்றார். அம்மை "அன்பனே! குறையையும் நிறைவித்து, முதலும் கடையும் கூட்டி முடித்து, இப்பாமாலையை எமக்குச் சூட்டுக" என்று ஆணைதந்தனள். பட்டர் ஆணைவழிநின்று இதனைப்பாடி முடித்தனர்.

அரசன், மதியொளிகண்டு, அடியார் பெருமை அறியாத தம்மதியிருள்நீங்கிப் பட்டரை அவமதித்த தம் மதியீனத்திற்கு வருந்தி, ஓடிவந்து, திருவடி

களில் வீழ்ந்து, வணங்கி மன்னிப்புவேண்டினன். காணிக்கையாகக் காணி கைக்கொள்ள வேண்டினன். பொருள்விருப்பற்ற பட்டர் செம்பொருள் விரும்பிய பட்டர் "நிலம் புலத்தை அழிக்கும்; பொருள் மருளை அளிக்கும். வேண்டாம் " என்று மறுத்தார். அரசன் தங்கள் சந்ததிக்காகவாவது ஏதாவது ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று குறையிரந்தான். பட்டர்விருப்பப்படி வேலிக்குக் குறுணிகளமான்யமாகச் சூரிய சந்திரன் உள்ளவரை எல்லாம் கொடுத்துவர ஆணைதந்து, தஞ்சை சென்றான். இதற்குரிய உரிமைச் செப்புப்பட்டயம் ஒன்று பட்டர் சந்ததியாரிடம் இன்றும் இருக்கிறது.

இவர் செய்த வேறு நூல்கள்:—

திருக்கடவூர்த் தல விநாயகரான கள்ளவாரணப்பிள்ளையார் பதிகம், அபிராமி பதிகம், அமுதகடேசர் பதிகம் ஆகிய இவைகளும் இவரியற்றியனவே. அன்றியும், இவர் சந்ததியார்கள் **காலசம்மாரப் பின் முடுகுவெண்பா** என்ற நூலையும் இவர் இயற்றியதாகக் கூறுகிறார்கள். இரண்டொருபாடலும் சொல்லுகின்றார்கள். அவற்றை ஆராய்ந்தபோது தருமபுர ஆதீன வித்துவானக விளங்கிய இராதாநல்லூர்ச் சைவ எல்லப்ப நாவலர் ஏட்டுப்பிரதி ஒன்றன் இறுதியில் "அபிராமிபட்டர் செய்தருளிய காலசம்மாரப் பின்முடுகு வெண்பா முகிந்தது" என்ற குறிப்புக் காணப்பெற்றது.

ஆனால் அந்த ஏடு அபூர்த்தியாகவும் உதிர்ந்த பல ஏடுகளைக் கோத்ததாகவும் இருந்தது. அதிலிருந்து ஒன்பது பாடல்களே கிடைத்தன. ஆனால், அந்நூல் 30 பாடல்களை யுடையதென்று தெரிகிறது. இப் பாடல்கள் ஒன்பதும் தனிப் பாடற்றிரட்டில் பல புலவர்கள் பாடிய பகுதியில் பெயரறியா வரிசையில் சேர்க்கப்பெற்றுள்ளன. அவைகளும் பழம் பாடற் பாதுகாப்புக்காக இங்குத் தரப்படுகின்றன. அவை வருமாறு:—

அன்றயன்மால் காணா அடிமுடியைக் காண்பதற்குத்
தென்றிசைக்கோ னென்னதவஞ் செய்தானோ?—வென்றிதிகழ்
ஆடரவாளா நீறணிதோளா ஆதிரைநாளா மாதுமணாளா
தோடவிர்காதா மாகடவூரா சொல்.

தென்ற லுலவுந் திருக்கடவூ ரெம்பெருமான்
மன்றல் செறிந்தே மதுவூறும்—கொன்றைக்காப்
பொன்பரவுந்திண் கொங்கையிரண்டும் புண்படநொந்தும் அன்ப
அன்புதிரண்டு பெண்கொடிநெஞ் சஞ்சும். [மிகுந்தும்

பரிலனுக் காவன்று பகடேறி வந்தெதிர்த்த
காலனுக்குக் காலா கடவூரா—மேலோர்
கரும்புகொண்டங்கெதிர்த்துவந்தங் கசன்பொருஞ்செஞ்சரங்கள்கண்டு
மருண்டுநெஞ்சங் கலங்குமென்றன் மான்.

தொண்ட ருடன்கூடித் துதித்திரண்டு கண்ணாரக்
கண்டு தொழுவேனோ கடவூரா—பண்டோர்
அழுதிருக்குஞ் சிறுகடத்தன்றெழுமுனக்கன் பரைமருட்டும்
அமனையெற்றும் பரிபுரச்செந் தாள்.

என்று தொழுவேன் எளியே னெளிமூரலும்
கொன்றையணி தென்கடவூர்க் கோமானே—துன்றும்
கனற்பொறிக்கட் பகட்டிலுற்றுக் கறுத்தடெற்குத் திசைக்குளூரத்
தனைச்சினத்திட் டுதைத்தபத்மத் தாள்.

பற்றிப் பணிந்து பரவ வரந்தருவாய்
கற்றைச் சடையா கடவூரா—வெற்றிநெடுஞ்
கொண்டலொக்குங் கண்டசத்தங் கொண்டெதிர்த்தங் கங்கருக்கும்
சண்டனைக்கண் டன்றுதைக்குந் தாள்,

ஆற்றுமோ நெஞ்சத் தடங்குமோ கொண்டமையல்
கூற்றுதைத்த தென்கடவூர்க் கோமானே—மாற்றுயர்பொற்
கும்பமுலைத் திங்கணுதற் கொந்தளகக் கொம்பைவெறுத்
தம்புதொடுத் தங்கசன்விட் டால்.

சுடுமோ விளங்தென்றல் தோகையின்மே லம்பு
படுமோமெய் வாதைப் படுமோ—கடவூரா
நீரணங்கார் வேணிநம்பா நீலகண்டா மேனியின்பால்
ஆரணங்கார் காலசங்கா ரா.

மேகங் கவிந்ததுபோல் மேலெழுந்த காலனைக்கண்
டாகந் தளர்ந்துநெஞ்ச மஞ்சாமுன்—மாகடவூர்ப்
பூதநாதா வேதகீதா பூவிதாதா தேடுபாதா
மாதுபாகா காலகாலா வா.

உ

திருச்சிற்றம்பலம்

# அபிராமி அந்தாதி

## காப்பு

**தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை**
**ஊரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற**
**சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே**
**காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.**

இத்திருப்பாடலால்; எடுத்துக்கொண்ட நூல் இனிது நிறைவேறவும், என்றும் நின்று நிலை பெறவும்வேண்டி, விக்கினவிநாயகனை முன்னிலைப் படுத்தி 'அந்தாதி சிந்தையுள் நிலைபெறத் திருவருள் செய்க' எனவேண்டிக் கொள்ளுகின்றார்.

**இதன்பொருள்:–** மாலையாகவே பூக்கின்ற கொன்றை மலரையும், சண்பகமாலையையுமணிந்த ஆனந்தக் கூத்தருடைய இடப்பாகத்து, என்றும் நீங்காப் பெருங்காதலோடு எழுந்தருளியிருக்கின்ற சிவகாமித் தாயாருடைய மகனே! மேகம் போன்ற திருமேனியையுடைய கணபதியே! ஏழு உலகங் களையும் பெற்ற சீர்த்தியினை யுடைய அபிராமி

தேவியின் மீது பாடப்பெற்ற அந்தாதியானது எப்போதும் எனது சிந்தையுள் நின்று நிலைக்க உறுதியருளுக என்பதாம்.

'மைந்தனே! கணபதியே!! அபிராமி அந்தாதி சிந்தையுள்ளே நிற்கக் கட்டுரை' எனக் கூட்டுக.

'தாரமர் கொன்றை' என்றது கொன்றை மாலையாகவே பூத்தலைக்கருதி. இறைவனுக்கு அடையாள மாலையாதலின் இதனை முற்கூறினர். வண்டு மொய்க்காத தெய்வப் பூவாதலின் சண்பகம் இறைவற்குகந்ததாயிற்று. இயற்கை மாலையும் செயற்கை மாலையும் தரித்தவன் என்பார். 'தாரமர் கொன்றை' எனவும், 'சண்பகமாலை' எனவும் கூறினர்.

தில்லை சிதாகாசத்தலமானதாலும், அநாதி நித்ய பஞ்சகிருத்ய பரமானந்தத்தாண்டவம் செய்தருளுகின்ற தலமாதலானும், துரிய மூர்த்தியாகிய ஆனந்தக்கூத்தன் திருவுருவத்தினின்றே ஒலியுலகும் பொருளுலகும் தோற்ற முதலான ஐந்தொழிற்பாடுகளை அடைகின்றன ஆதலானும், சத்தி பராசத்தியாய் அவர் தொழிலாற்ற வன்மையளித்து நிற்பவளாதலானும் 'தில்லையூரர்தம்பாகத்து உமை மைந்தனே' என்றார். ஏழுலகத்தையும் கருவுறாம லுற்றுப் பெறாமற் பெற்று முற்றாமூலைக் கன்னியாயிருத்தலே அபிராமியின் சீர் என்பது விளக்கப் பெறுகின்றது. சீர் - மிகுபுகழ். அபிராமம் - அழகு;

அபிராமி - அழகி. தன்னிடம் ஒருமுறை பதிந்த மனம் பிறிதொன்றைச் சென்று பற்ருவண்ணம் தகைத்து நிறுத்தும் பேரழகே அபிராமம் எனப் பெறும். அதனையுடையவள் அபிராமி.

அந்தாதி-அந்தத்தை ஆதியாகவுடையது. ஒரு பாட்டின் இறுதி மற்ருெரு பாட்டிற்கு முதலாக வரத்தொடுக்கப்பெறுவது. ஆசிரியர் பதிகம்முதலிய ஏனைய பிரபந்தங்கள் வாயிலாகப் பாடிக் கனியாது அந்தாதியின் வாயிலாகக் கனிந்ததற்கு - கனிய வைத்ததற்கு ஒரு வாய்ப்பு இருத்தல்வேண்டும்; உலகமே அந்தத்தை ஆதியாகவுடையது; சங்கார காரணனுகிய பரமேசுரனை முதலாகவுடையது. ஆதலால் இகபரங்களைப் பற்றியுள்ள இன்ப உலகை அருள்வழிக் கண்டு காட்டுகின்ற ஆசிரியர் அந்தாதி முறையையன்றி வேறு எம்முறையைப் பின்பற்றக் கூடும். கூடாதென்க.

ஆன்மவியல்பற்றிய குணமாறுபாடு கூடிய காலத்தும் நீங்கலாகாது என்பார் ‘எப்போதும் நிற்கக்கட்டுரை’ என்ருர். காரமர்மேனிக் கணபதி என்றது நிறம்பற்றிய உவமையன்று. வேண்டிய கொடுத்தருளும் வள்ளன்மையாகிய தொழில்பற்றி யது என்க. காரமர் கணபதி மேனிக் கணபதி எனக் கூட்டுக. மேகமும் வள்ளன்மையில் விரும்பும் கணபதியென்றுமாம். கட்டுரைத்தல் - உறுதிகூறல்; வரந்தந்தருளல். அந்தாதி - ஆகுபெயர்.

தமது துன்பநீக்கத்திற்காகத் தோத்தரிக்கின்ற ஆசிரியரது பெருங்கருணைத்திறம் அந்தாதி நிற்கக் கட்டுரையே என்று எழுந்ததை யுன்னுந்தோறும் உன்னுந்தோறும் பாராயணஞ்செய்வாரும் 'நிற்கக் கட்டுரை' என்று வேண்டிக்கோடல்பட அமைந் திருப்பது அருள்வழிச் செல்லுகின்ற வாக்கின் அமைதியைக் காட்டுவதாகும்.

## நூல்

### திருமேனிவண்ணம்
### சிந்தையைப் பிணித்தமை கூறல்

**உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன**
**விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழித்துணையே. 1**

திருவருட் சத்தியின் நிறம் செம்மையாதலின் அதில் ஈடுபட்ட ஆசிரியர், ஒளியும் செம்மையும் உடைய பொருள்கள் எல்லாவற்றையும் ஒப்பிட்டு, அத்தகைய அபிராமியே துணை என்கின்றார்.

இ-ள்:- உதயசூரியனையும், மஞ்சாடிமலரையும், மாணிக்கத்தையும், மாதுளம் பூவையும், மின்னற் கொடியையும், குங்குமநீரையும் போன்றது என்று ஆகமங்களான் அறிவிக்கப்பெறுகின்ற திருமேனி யையுடைய அபிராமி தேவியே அடியேனுடைய கண்கண்ட துணை எ-ம்.

உதித்தஎன்னுது உதிக்கின்ற என்றது காட்சிக்குரியதாய் இளமலைங்காட்டி எழுகின்ற செஞ்சூரியனைக் கருத்தடைக்க என்க. உதிக்கின்ற என்று நூலைத் தொடங்குவதில் ஒரு தனிச்சிறப்பு உண்டு. பிரணவ பஞ்சாக்கரத்துள் 'உ'காரம் சக்தியட்சரமாதலானும், சிவமெனும் பொருளும் ஆதி சத்தியொடு புணரினே உதித்தல் நிகழும் ஆதலானும் என்க. உச்சித்திலகம் - மங்கலமகளிர் உச்சியிலணியும் குங்குமப்பொட்டுமாம். உணர்வுடைபோர் - மாணிக்கம் மதிப்பிடத்தக்க உணர்ச்சியுடையோர்; ஞானிகள். உணர்வுடையோர் மதிக்கின்றமாணிக்கமென்பது உவமைக்கும் பொருளுக்கும் சிலேடையாகப் பொருள்கொள்ளக் கிடத்தல்காண்க. கமலை - திருமகள். கடி - மணம். தோயம் - நீர். நூல்கள் யாவும் ஆன்மாக்களுடைய பரிபக்குவ நிலைகட்கு ஏற்ப அறிந்தொழுக அறிவிப்பனவாதலின் ஒளிக்குக் கதிரையும், நிறத்திற்குத் திலகத்தையும், பகல் இரவின்றி எப்போதும் ஒளிவிடுகின்றதன்மைக்கும் எல்லாராலும் பாதுகாக்கப்பெறுகின்ற பண்பிற்குமாக மாணிக்கத்தையும், மென்மைக்கும் செம்மைக்குமாக மாதுளம் பூவையும், மலர்மகள்போன்ற அதிகாரமலம் பற்றிநின்ருர் அறிவு விளக்கம் பெற்றுத் துதிக்கின்ற காலத்துத் தோன்றியும், ஏனைக்காலத்து அவர்களுக்கே மறைதலின் மின் கொடியையும், மணத்திற்கும் மென்மைக்குமாகக் குங்கும நீரையும் விதிப்பவாயின என்பதை உன்னவைத்த அருள் வாக்கின் திறத்தைச் சிந்தை

கொள்ளுக. 'விழுத்துணை' என்று பாடங்கொண்டு உண்மையான உலகத் துணைகள் யாவும் இன்பக் காலத்துப் பங்கு கொண்டு துன்பக் காலத்துச் சிறிது இரக்கங்காட்டி நீங்குவன; அபிராமி அன்னையன்றி என்றும் துணையாய் இன்னலகற்றுவாள் என்பதை அறிவிக்க எழுந்தது என்று உரைப்பாரும் உளர். அம்மையின் நிறம் செம்மையென்பதைத் திருமந்திரமாலையும் 'செம்பவளத் திருமேனிச் சிறுமியை' என்று காட்டும்.

### எல்லாம் அவளென அறிந்தின்புற்றது

**துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்**
**பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்**
**கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்**
**அணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே. 2**

இது எல்லாவகையான துணைகளும், வணங்கப்பெறும் தெய்வமும் வேதபாதபத்தின் எல்லா உறுப்புக்களும் அவளே என்பதையும், அவள் அடையாளங்களிற் சிறந்தன சிலவற்றையும் தெரிவிக்கின்றது.

இ-ள்:- துணையும், தெய்வமும், வேதமாகிய மரத்தின் கிளை, தளிர், வேர் ஆகிய எல்லாம் பஞ்ச பாணங்களையும், கருப்பு வில்லையும் பாசத்தையும், அங்குசத்தையும் திருக்கரத்துத் தரித்த திரிபுரசுந்தரியேயாக இருத்தலை அறிந்தோம் எ-ம்.

துன்பக்காலத்துத் தேடப்பெறுதலின் துணை. எல்லாக்காலத்தும் அஞ்சியாயினும் அன்புபட்டாயினும் வழிபட இன்பம்பயத்தலின்வழிபடுதெய்வம். குற்றம்பொறுத்து மறக்காது இன்பமே பயத்தலின் பெற்றதாய். விதிவிலக்குகளைக் காட்டி நல்வழிப் படுத்தலின் வேதங்களின் சாகை. ஞானம் பயத்தலின் வேதசிரசாகிய உபநிடதம். ஒலி மூலமாய் வேதங்களுக்கு உணவு, நீர் முதலியவற்றைக் கொடுத்துப் பாதுகாத்தலின் வேர். இங்ஙனம் தேவி பலவாற்றானும் பயன்படுகின்றாள் என்பது உணர்த்தியவாறு. பதிகொண்ட வேர் - பூமியில் (நெஞ்சில்) பதிதலைக்கொண்டவேர்; பிரணவம். திரிபுரசுந்தரி - திரிபுரை என்னுஞ் சக்கரத்துள் விளங்குபவள். திரிபுரமாவன தேவி சக்கரத்துள் சந்திரகண்டமும், சூரியகண்டமும், அக்னி கண்டமுமாம். திரிபுரை தான் அபிராமி. "நல்குந்திரிபுரை..........அபிராமி அகோசரி, புல்குமருளும் அப்போதந்தந்தாளுமே" என்ற திருமந்திரம் காண்க.

## அறிந்ததும் செறிந்ததும் பிறிந்ததும் பேசியது.

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தே னின்னன்பர் பெருமையெண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே. 3

இப்பாடல் யார்க்கும் கிட்டாதபேறு தனக்குக் கிட்டியதையும், திருவடிக்கண்ணே எப்போதும்

நீங்காது செறிந்ததையும், அதனால் தீயர் சேர்க்கை பிறிந்ததையும் அருளிச்செய்கிறது.

இ-ள்:- திருவே! பாச பசு ஞானமுடையவர்களால் அறியமுடியாத 'பரமரகசியமாகிய' தேவி மந்திரத்தை அறிந்தேன். அறிந்துகொண்டதும் பிறவிக்கு அஞ்சிப் பராசத்தியாகிய உன் திருவடியில் இடையீடு இன்றிக்கே புகலடைந்தேன். ஆதலால் உன்னடியார் பெருமையைச் சிறிதும் எண்ணிப்பாராத - நரகில்விழ இருக்கும் பாவிகளைப் பிறிந்தேன் எ-ம்.

அறிந்துகொண்ட ஆனந்தப்பெருக்கால் அறிந்தேன் மறையை என முற்றுவாக்கியமாக அருளிச் செய்தார். எவரும் அறியாமறையென்றது மந்திரம் பதிஞானங் கைவரப்பெற்ற முற்றவமுடையார்க்கு அன்றி ஏனையோர்க்கு எளிதாகக் கிடைக்காத அருமைப்பாடுபற்றி. மறையை யறியச் செய்த தவத்தினும், அறிந்ததைக்கொண்டு திருவடிக்கண் செறியும் தவம் அடியேற்கு மிகுந்தது என்பது. எடுத்த இப்பிறவியில் வினைப்புலி துரத்த, புலக் காட்டில் பொறிவேடர் அலைக்க, நோயுங் கவலையும் ஆகிய விடர்முள் குத்த அலைந்தும், மீட்டும் பிறந்தும் வரும் பெருந்துன்பங்கட்கு அஞ்சிப் புகலிடம் திருவடியே என்று அடைந்தேன் என்கின்றார். அடியார் பெருமை எண்ணுமைக்கு அவர்கள் கருமமே காரணம் என்பார் கருமநெஞ்சால் என்றார். மறிந்தே விழுநரகு - மடங்கிவிழுதற்கேதுவாகிய நரகு. மனிதரைப் பிறிந்தேன் என்க.

## இறைவனுநீயும் எழுந்தருள் என்றது.

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. 4

இதனால் ஆன்ம விளக்கங்கொண்ட அனைத்துயிர்களும் வழிபடுந் தேவியை நோக்கி, இறைவனும் நீயும் என்புத்தியிலே நித்தியவாசம் செய்கவென வேண்டிக்கொள்கின்றார்.

இ-ள்:- மனிதர்களும் தேவர்களும் முனிவர்களும் தலைவணங்கித் தொழுகின்ற திருவடியினையுடைய அபிராமியே! கொன்றைமாலையையணிந்த சடையின்மேல் பிறைமதியையும், பாம்பையும், கங்கையையும் தரித்திருக்கின்ற சிவபெருமானும் நீயும் என்புத்தியில் என்றும் நின்று நிலவுவீர்களாக எ-ம்.

மனிதர் துன்ப இன்பங்களில் மயங்கியவர்கள்; தேவர் இன்பங்களிலேயே மயங்கியவர்கள்; முனிவர் விருப்பு வெறுப்பின்மையால் இரண்டிலும் மயங்காதவர்கள்; இதனை விளக்கவே 'மாயா முனிவர்' என விசேடித்தார். சிலர் மரணமில்லாத முனிவர் என்றுரைப்பர். மரணமில்லாமை அமரர்க்கும் உண்டாதலின் முனிவர்க்கு மட்டும் அவ்வடை

கொடுத்தமையிற் சிறப்பின்மையறிக. மாய்தல் - மயங்கல். மனிதரும் தேவரும் தத்தம் இகபர சுகத்திற்காகவும், கிடைத்த சுகம் நீடுநிலைபெற வேண்டியும் வணங்குவர்; முனிவர் திருவருட்பேறு வாயிலாகமுத்திமங்கையைக்கூட வேண்டி வழிபடுவர் என்று உணர்த்துமுறையில் 'சென்னி குனிதரும்' என்றார். கோமளம் - அழகு. அழகிற்குள்ள மறு பெயர்கள் யாவும் அபிராமியைக் குறிப்பனவே. இறைவன் பகைப்பொருளாகிய மதியையும், பாம்பையும் ஒருசேர வைத்திருக்கின்றார் என்பது அவை பகைநீங்கி வாழ்கின்றன என்பதாம். அருள் வேண்டி நிற்கின்ற அடியேனுள்ளத்து இருவீரும் எழுந்தருளவேண்டுமென்பது தோன்றப் 'புனிதரும் நீயும் என் உள்ளத்துப் பொருந்துக' என்கின்றார். பகீரதன் கடுந்தவஞ்செய்து கொணர்ந்த கன்னி ஆதலின் கங்கை பகீரதி என்றழைக்கப்பெறுவள்.

## திருவடிப்பேறு

**பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்**
**வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோன்**
**அருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேல்**
**திருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே. 5**

இப்பாட்டு, திரிபுரையே! மனோன்மணி! நின் திருவடி என் தலைமேலாக விளங்குகின்றது; யான் பெற்ற பேறென்னே! என்று வியந்தமை கூறு கிறது.

இ-ள்:- அடியேன் விரும்பியவாறு புனிதரோடு புத்தியிற்பொருந்திய திரிபுரை! மனோன்மணி! இறைவனுண்ட நஞ்சையும் அமுதாகச் செய்த அம்பிகை!! நெஞ்சத்தாமரையில் விளங்குகின்ற அபிராமி!! சிதாகாச ரூபி!! நின்திருவடி என் சென்னிமீது விளங்குகின்றன எ-ம்.

மூப்புரை; புரம் - உடல். முப்புரம் - மூவுடல். அவை தூலம் சூக்குமம் காரணம் என்பன. முப்புரை - அம்மூவகை உடலினும் வியாபித்திருக்கும் பிரோதான சக்தி எனவுமாம். செப்பு உரைசெய்யும் புணர்முலையால் - கிண்ணத்தை உவமையாக உரைக்கும் இணைந்த தனங்களால். வஞ்சி மருங்குல் - கொடிபோன்ற இடையையுடைய. மனோன்மணி - மனதில் உன்முகமாய் இருப்பவள். நஞ்சினுடைய தீமையைப் போக்கியதோடன்றி நலமும் உண்டாக்கிய வன்மையுணர்த்த 'நஞ்சமுதாக்கிய அம்பிகை' என்றார். தாமரைமேல் விளங்கும் சுந்தரியாயினும் வலிய என் தலையில் திருவடி விளங்கச்செய்தது நஞ்சமுதாக்கிய நல்லருளைப்போன்றது என்பதனை அறிவித்தவாறு.

## நினைவும் செயலும் நீயே என்றது

**சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே**
**மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே**
**முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே**
**பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே. 6**

இந்தப் பாடலால், என்னுடைய திரிகரணங்களும் நின் வழியே நிற்கின்றன என்கிறார்.

இ-ள்:- செம்மேனிவாய்ந்த அபிராமிதேவியே! தேவரீருடைய திருவடி எனது முடிக்கண்ணது. மந்திரம் மனதில்தியானப்பொருளாய்நிலைபெற்றது. அடியேன் அன்பர் கூட்டத்துப் பேசுவன யாவும் தேவரீரது பெருமையையும் பூசைமுறையையும் அறிவிக்கும் ஆகம பத்ததியாம் எ-ம்.

பொன்-அழகு. என்சென்னிக்கு நின் அடி, முடிபோல அழகு செய்கின்றது என்பார் பொன் திருவடித்தாமரை என்றார். மந்திரம் - நினைப்பவரைக் காப்பது என்னும் பொருளதாகலின் மனத்தின் மன்னி நிற்கின்றது; விட்டகலாது என்பதாம். சிந்தூரம் - குங்குமம். மூன்னிய அடியார்-இடைவிடாத தியானத்திலுள்ள அடியார். முறைமுறை என்றது இடைவிடாமல் என்றபடி. பரமாகமபத்ததி - அம்மை வழிபாட்டிற்குரிய சிவாகமபத்ததி. யாமளவேத பத்ததி என்பாருமுளர். பன்னியது - பலகாற் சொல்லிச் சொல்லி இன்புற்றது.

## ஆவிக்கடைக்கலம் வேண்டல்

**ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்**
**கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனும்**
**மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கி யென்றும்**
**துதியுறு சேவடி யாய்சிந் துரானன சுந்தரியே.** 7

இப்பாட்டால் பிறப்பிறப்பில் தடுமாறும் தமியேனும் பரமுத்தியடையக் கருணைபாலித்தருள்க என வேண்டிக்கொள்கின்றார்.

இ-ள்:- தாமரையை உறைவிடமாகக்கொண்ட பிரமனும், பிறையணிந்த பெருமானும், திருமாலும் வணங்கித் துதிக்கின்ற திருவடியையுடையவளே! சிந்துரத் திலகம் பொருந்திய திருமுகச் செவ்வி பெற்றவளே!! மத்திட்ட தயிரைப்போலக் கலங்குகின்ற எனது உயிர் தளர்ச்சியற்ற சிவகதியிற் சேரும்வண்ணம் திருவுளம் பற்றவேண்டும் எ-ம்.

மத்துறுததியென்றிருக்கவேண்டியது ததியுறு மத்தின் என மாறிநின்றது செய்யுளாதலின்-வினைமத்தால் காலக்கயிற்றால் உயிர் அலைப்புண்ணுமாதலின் 'ததியுறு மத்திற் சுழலும்' என்றார். "மத்துறு தண்தயிரிற் புலன்தீக்கதுவக் கலங்கி, வித்துறுவேனை விடுதிகண்டாய்" என்றது மணிவாசகம். தளர்விலதோர்கதி- வீடு. "சிவம் சத்திதன்னையீன்றும் சத்திதான் சிவத்தை யீன்றும்" என்பது சிவஞானசித்தியாராதலின் சிவபெருமான் சத்தியை வணங்குவராயினர் என்க. சிந்துரானனம் - சிந்துரப்பொட்டணிந்த திருமுகம். சுந்தரி - அபிராமி. உயிர்க்கலக்கம் போக்கி உயர்கதியருளுக என வேண்டியவாறும்.

## சிந்தையிற் சேவடிகண்டு செம்மாத்தல்

**சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்**
**வந்தரி சிந்தூர வண்ணத்தி னண்மகி டன்றலைமேல்**
**அந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்**
**கந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளென் கருத்தனவே.** 8

வீரமும் கருணையும் சேர விளங்கும் பெருமாட்டியின் திருவடி மனத்திருக்கும்போது என்ன குறை என்கிறார் இப்பாட்டில்.

இ-ள்:- அபிராமி எனது தந்தையாகிய சிவபெருமானுக்குத் துணைவி; அநாதியேபற்றி வரும் பாசங்களையெல்லாம் எளிவந்த கருணையால் வலியவந்து அழிப்பவள்; செந்நிறத்தையுடையவள் மகிடாசுரன் சிரத்தின்மீது நின்று எம் தீமையைக் கெடுப்பவள் நித்ய கன்னிகை; பிரமகபாலந்தாங்கிய கையிணையுடையவள். இத்தகைய பெருமாட்டியின் திருவடி என் சிந்தையில் உள்ளன ஆதலால் எனக்கு என்ன குறை? எ-ம்.

தாயென்னாது எந்தை துணைவி என்றது புனிதரும் நீயும் புந்தியிற்பொருந்துகஎன வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப. பாசத்தொடர் - பிரவாகநாதியாய்த் தொடர்ந்து ஆன்மாக்களைப் பிணித்து நிற்பது. வந்து அரி என்றது அறியாமையால்தான் அடையுந் தரத்தினனல்லன் என்பதைத் திருவுள்ளத்தடைத்து, சென்று பயன்தரும் வாய்க்கால்

போலத் தாமே இரங்கி வலியவந்து நீக்கியருளல் வேண்டும் என்பதாம். அந்தரம் - கேடு. அரி - நீக்குபவள். கம் - தலை. தரி - தரிப்பவள். அழியாத கன்னிகை - என்றுமழியாத கன்னித்தன்மையை யுடையவள். 'அகிலாண்டகோடி யீன்ற அன்னையே, பின்னையுங் கன்னியென மறை பேசும் ஆனந்த ரூப மயிலே' (தாயுமானவர்பாடல்) என்பதும் கருதத்தக்கது.

## காட்சி வேண்டல்

**கருத்தன் வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்**
**பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்**
**திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பும்**
**முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே. 9**

தானைக் கருத்திற்கண்ட களிப்பால் ஆசை மேலும் உந்த, அழும் பிள்ளைக்குப் பாலருத்திய தாய்மையில் நீங்காத தனபாரத்தோடும், வில்லம் போடும் திருப் புன்முறுவலோடும் எழுந்தருளிக் காட்சியும் வழங்கவேண்டும் என வேண்டிக்கொள் கின்றார் இப்பாடலில்.

இ-ள்:- பரம பிதாவான சிவபெருமானுடைய கருத்தினும் கண்ணினும் விளங்குவனவும், மேரு மலையைப்போலப் பருத்தனவும், அழுத பிள்ளைக்கு பால் அளித்தனவும் ஆகிய தனபாரங்களும், அவற்றின்மீது வெள்ளருவி வீழ்ச்சிபோலக் கிடந் தலையும் முத்துமாலையும், திருக்கரத்து வில்லும்

அம்பும், மயிலிறகின் அடிக்குருத்துப்போன்ற புன் முறுவலும், நீயுமாக அம்மையே! எழுந்தருளிக் காட்சி வழங்கவேண்டும் எ-ம்.

கருத்தன என்பதற்கு மூகங் கருத்தன என்றுமாம். மாரனை வென்ற வீரனாகிய சிவபெருமானுடைய கண்ணுங் கருத்தும் பிணித்த பெருமையைக் குறித்தவாறு.

அழும் பிள்ளை - திருஞானசம்பந்தப் பிள்ளை. சரவணப்பொய்கையில் அழுத அறுமுகப் பிள்ளையுமாம். தாய்க்குள்ள அருளைத் தனபாரத்தால்தான் அறியலாமாதலின், 'அருள் கூர் தனபாரம்' என்றார். முருந்து - முருத்து என்று விரித்தல் விகாரம் பெற்றது. உறுப்புக்களாகிய தனபாரம் மூரல் முதலியவற்றோடு நீயும் வந்து முன்னிற்கவென உறுப்பியையும் சேர்த்து உம்மை கொடுத்து எண்ணியது, குறித்த உறுப்புக்களும் அம்மையைப் போலவே தனித்து அருள் வழங்குந் தன்மை நோக்கி. இதனால் மனக்காட்சியிற்கண்ட அம்மையைப் பொறிக் காட்சியினும் காண விழைந்தமை புலனாகும்.

### என்றும் வணங்கும் நிலையறிவித்தது

**நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை**
**என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமரையின்**
**ஒன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்**
**தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே. 10**

இதில் அங்ஙனம் காட்சி வேண்டற்குக்காரணம் எத்தொழிலைச் செய்கின்றபோதும் திருவடியையே தியானப் பொருள் தோத்திரப் பொருள்களாகக் கொண்டுள்ளேன் என்பதை விண்ணப்பிக்கின்றார்.

இ-ள்:- எழுதாக் கிளவியாகிய வேதத்திற் பொருந்திய அரிய பொருளே! அருளே! உமையே! இமவானுக்கு மகளாகவும் அன்றவதரித்தவளே! அழியாத முத்திக்கண் ஆன்மாக்களால் எய்தப் பெறும் சிற்சுகரூபியே!! அடியேன் நிற்றலாதிய தொழில்களைச் செய்கின்ற காலத்தும் நின்னையே நினைக்கின்றேன்; என்றும் வணங்குவதும் வாழ்த்து வதும் உனது மலர்ப்பாதங்களையே. ஆதலால், உனக்கு என்முன்னிற்கக் கடமையும் எனக்குக் கேட்க உரிமையும் உண்டுகண்டாய் எ-ம்.

எண்ணும்மைகள் வினையோடுவந்தன. பயிற்சிக் காலத்துப் பத்ததிப்படிப் பயின்றுவந்தேன்; முறுகி யெழுந்த அன்பின் விளைவு இங்ஙனம் எத் தொழிலைச் செய்யினும் நின்னையே ஏத்தச்செய் கின்றது என்பதாம். அன்பின் முதிர்விற்கு ஆகமமில்லையல்லவா! வேதப்பொருளாக விளங்கு பவள் பராசத்தியாதலின் 'மறையின் ஒன்றும் அரும்பொருள்' என்றார். "அருளது சத்தியாகும் அரன்தனக்கு" ஆதலின் 'அருளே' என்றார். 'அன்றும் பிறந்தவளே' என்றது பிறப்பிலியாகிய நீயும் கருணைப்பெருக்கால் பிறந்து காட்டினை

என்பதாம். முத்தியானந்தம் என்பது பற்றற்ற முத்தியிற் பற்றப் படுவதாகிய சிவத்தோடு ஒன்றியகாலத்துளதாம் சிவரசானுபவத்தானிகழும் மகிழ்ச்சியே.

## திருவடிப் பெருமைகூறல்

**ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்**
**வானந்த மான வடிவுடை யாள்மறை நான்கினுக்குந்**
**தானந்த மான சரணார விந்தந் தவளநிறக்**
**கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே. 11**

ஐம்பெரும் பூதவடிவான அபிராமிதேவி அடிமலரே சிவபெருமானுடைய முடி மாலையாக விளங்குகின்றது என்பதை இப்பாடலில் புலப்படுத்துகின்றார்.

இ-ள்:- ஆனந்தமாய், ஆனந்தத்துள் தோய்ந் திருக்கின்ற எனது அறிவாய், அறிவில் நிறைந்து அண்ணிக்கும் அமுதமாய், மண்ணாதி வான் அந்தமாகவுள்ள பஞ்சபூதங்களின் வடிவமாய் உள்ள அபிராமிதேவியினது மறைகளின் முடிவாக விளங்குகின்ற மலரடிகள், திருவெண்காட்டை அழகிய ஆடரங்காகக்கொண்டு நடிக்கின்ற சிவபெருமானுடைய திருமுடிக்கு மாலையாக விளங்குகின்றன எ-ம்.

வடிவுடையாள் சரணாரவிந்தம் எம்பிரான் முடிக் கண்ணியது என்று முடிக்க. ஆனந்தம்

என்பது பயன். அறிவு என்பது நுகர்வோன். நிறைந்த அமுதம் நுகர்பொருள். நுகர்வோனும் நுகர்பொருளும் அதன்பயனுமாகிய அனைத்தும் அம்மையே என்பார் 'ஆனந்தமாய் அறிவாய் அமுதமாய்' என்றார். நுகர்வோன் நுகர்பொருள் பயன் என முறையிற்கூறாது மாற்றிவைத்தது ஆனந்தா திசயத்தான் என்க. அன்றிச் சிறப்புப்பற்றியுமாம். எல்லாம் அவளாய் இருக்க எப்படிச் சொன்னால் என்ன? என்பதூஉமாம். வானந்தமான வடிவு என்றது ஒடுக்கமுறைபற்றி. எல்லாவற்றி னிலக்கணங்களையும் அறிவித்துவரும் வேதங்களும், எந்த ஒரு எல்லையில் முடியாமல் நின்றுவிடுமோ அந்த எல்லை அம்மையின் திருவடி என்பது 'மறை நான்கினுக்கும் தானந்தமான சரணாரவிந்தம்' என் பதாற் குறிக்கப்பெறுகின்றது. தவளநிறக் கான்- திருவெண்காடு. திருவெண்காட்டிலும் ஆனந்தக் கூத்தப்பெருமானுக்குத் திருச்சபையுண்டு என்பது ஊன்றி நினைத்தற்குரியது. இங்ஙனமன்றி வெண் ணிறமான இடுகாடு என்பாரும் உளர். அது ஆய்தற்குரியது. கண்ணி - தலையில் அணியப்பெறு மாலை.

## புண்ணியம் வியத்தல்

**கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி**
**பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா**
**நண்ணிய துன்னை நயந்தோரை வையத்து நான்முன்செய்த**
**புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. 12**

தாயே! நினது இணையடிக்கு என்றும் நீங்கா அன்பு பூண்டமைக்குக் காரணமாக, யான் செய்த புண்ணியம்தான் யாது? அதனை அறிவித்தருள வேண்டும் என்கின்றார் இப்பாடலில்.

இ-ள்:- ஏழு உலகங்களையும் பெற்ற உலக மாதாவே! அடியேன் இம்மையிலே சிந்தித்தது உன் புகழே. படிக்கின்றயாவும் உனது திருநாமங் களே. நெஞ்சம் நெக்குருகி நினைத்து அன்பு பூண்டது உன் திருவடித்தாமரைகளில். உன்னையே தியானப் பொருளாகக் கொண்டுள்ள அன்பர் களையே இராப்பகலாக அடைந்தது. இத்தகைய நற்காரியங்களிலேயே என்மனம் நாட நான் பழம் பிறவிகளிற்செய்த புண்ணியம் எது? அதனை அறிவிப்பின் அதனையே இன்றும் செய்து என்று நீங்கா அன்பு பெறுவேன் என்பது குறிப்பு எ-ம்.

கண்ணுதல்-அடிப்பாடாக (தழும்புபடக்) கருது தல். அலைந்துபடும் என்மனத்தைப் பிணித்து ஒரு வழிப்படுத்தியது அம்மையின் புகழ். அதன் விளை வாக யான் படிப்பனயாவும் அம்மையின் பெயர் களே யாயின. நான் மறக்கினும் நாச் சொல்வதா யிற்று என்பதாம். அதன் பயனாகப் பாத மலரில் கனிந்த பத்தியுண்டாயிற்று! அதனால் அன்பர் கூட்டுறவு கிடைத்தது என்று படிப்படியான வளர்ச்சியை அறியச்செய்தவாறு.

இங்ஙனமன்றிப் பகலிரவா நண்ணியது உன்னை எனக்கொண்டு இரவுபகலற்ற நிலையில் சதா தியானம் செய்தது உன்னையென்றும்; நயந்து ஓரவையத்து நான் முன்செய்த புண்ணியம் ஏது எனப் பாடங்கொண்டு இங்ஙனம் விரும்பியாராய உலகத்து அடியேன் முன்செய்த புண்ணியம் யாது என்றும் பொருள் கோடலும் ஆம்.

## புறந்தொழாப் பெருமை பேசுதல்

**பூத்தவ ளேபுவ னம்பதி ளைன்கையும் பூத்தவண்ணம்**
**காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு**
**மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே**
**மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே. 13**

அம்மையே! அருட்பிரகாசத்தை அளித்த உன்னையன்றி வேறொரு தெய்வத்தையும் வழிபடக் கூடுமோ! என்று தன் உறுதியை இப்பாடலில் புலப்படுத்துகிறார்.

இ-ள்:- பதினான்குலகத்தையும் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடுபவளே! இறைவனுக்கு மூத்தவளே! திருமாலின் தங்கச்சியே! பெரியதவத் திருமேனியுடையவளே! உன்னையன்றி வேறொரு தெய்வத்தை வழிபடலாமா? வழிபடின் எவ்வளவு நன்றிகெட்ட தன்மையும், அறிவின்மையுமாம் என்பது குறிப்பு எ-ம்.

உயிரவை யவைதம, பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவியும், உலகுகள் நிலைபெறும்வகை நினைவொடு மிகும் அலைகடல்நடு அறிதுயிலமர் அரியுருவு இயல்புடனும், உயிரவை அவைமுழுவது மழிவகை நினைவொடு முதலுருவு இயல்புடனும் எழுந்தருளி இறைவன் பிரமனாதியர் படைத்தலாதி தொழிலியற்றச் செய்யும்போது இறைவியும் அந்தந்த நிலையில் ஜனனி முதலிய மூன்று சத்திபேதங்களாய் இறைவனையே மருவிநின்று அம்மூன்று தொழிலை இயற்றுவளாதலின் 'புவனம் பதினான்கையும் பூத்தவளே, காத்தவளே, கரந்தவளே' என்று கூறினார். உயிர்களைக் காத்தற்கும் அவைசெய்த வினைக்கீடாக வரையறுக்கப்பெற்ற கால வெல்லைக்கேற்பவே காத்தல் வேண்டுமாதலின், 'பூத்த வண்ணம் காத்தவளே' என்றார். பூத்தவண்ணம் - தோற்றுவித்தமுறைப்படி. உற்பத்திக்கிரமத்தில் சத்திதத்துவத்தினின்று சதாசிவதத்துவம் தோன்றுதலின் 'கறைக்கண்டனுக்கு மூத்தவளே' என்றார். "தவளத்த நீறணியும் தடந்தோளண்ணல் தன் னொருபால் அவள் அத்தனும் மகனும் தில்லையான்" என்னும் திருக்கோவையாரானும், "கனகமார் கவின்செய்மன்றில் அனகநாடகற்கு எம் அன்னை மனைவி தாய் தங்கை மகள்" என்ற குமரகுருபர சுவாமிகள் வாக்கானும் அறியலாம். அன்றிக் கங்கையாகிய இளையாளைக் கொண்டமையின் கறைக்கண்டனுக்கு மூத்தமனைவி என்றுமாம்.

நான்காம்வேற்றுமை முறைப்பொருளில்வந்தது. புண்ணிய முற்றுப்பெறுங்காலம்வரையில் அதிகாரம் பெற்று, புண்ணியம் ஒழிய விழுபவர்கள் ஆதலின் அவர்கட்கு மூப்பு நரை திரை முதலியன இல்லை என்பார் 'மூவாமுகுந்தன்' என்றார். "செங்கண் மால் திருத்தங்கச்சியே" என்பது இதனை வலியுறுக்கும். மூவா இளையவள் என்று கூட்டுவாரும் உளர். வந்திப்பதே ஏகாரம் ஈற்றசையன்று; வினைப் பொருளில் வந்தது. தவள் - தவத்தள். அத்து கெட்டது.

## அருமையைக் கூறி எளிமைக்கு வியத்தல்.

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே. 14

அவரவர்களுடைய பக்குவநிலைக்கு ஏற்பத் தேவர்கள் வந்தித்தல் முதலியன இயற்றுவாரா யினும் அம்மையே! நின்னருள் தரிசிக்கின்ற எம் மனோர்க்கே எளிதிற்கிடைக்கின்றது. இது என்ன வியப்பு! என்கின்றார்.

இ-ள்:- எம் தலைவியே! தேவர்களும் அசுரர் களும் உன்னை வந்திக்கின்றார்கள். பிரமனும், திரு மாலும் தியானிக்கின்றார்கள். அழியாத பரமா நந்த வடிவாகிய சிவயோகியர் உன்னைத் தம்மனத் துள் தளைப்படுத்திக் கட்டிவைத்திருக்கின்றார்கள்

அங்ஙனமாக இப்பூமியில் ஆன்மாக்களுக்கு மட்டும் சந்திக்க எளிதாகின்றாய். உனது கருணையிருந்தபடி என்னே! எ-ம்.

வந்தித்தல் - மெய்யின் தொழில். சிந்தையின்றியுஞ் செய்தொழில் நிகழும் ஆதலின் தேவாசுரர்கள் பரிபக்குவமிலராய் வந்திப்பாராயினர். அவர்களை விட முதிர்ந்த பக்குவிகள் நான்முகனும் திருமாலும் ஆதலின் சிந்திக்கத் தக்கோராயினர். சிந்தனை நிகழ்வழி செயல் தானே நிகழும் ஆதலின் சிந்திக்கவும் வந்திக்கவும் வல்லராயினர் என்பது. பரமாநந்தர் - கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்தில், அரும்புங் கந்தமுமாகிய ஆனந்தத்தை, கரும்புங் கைத்துத் தேனும் புளித்ததோர் இன் சுவைத்தாகிய ஆனந்தத்தை அனுபவிக்கின்ற சிவயோகியர். உள்ளம் என்கின்ற கூடத்தில் உணர்வெனுங் கயிற்றால் பந்திக்க அவர்களால்தான் இயலும். இந்நிலையினை விளக்கவே சிவஞானியாகிய மாணிக்கவாசகனார் "சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே" என்று வீறுபேசுதல் காண்க. இஃதறியாதார் பரமானந்தர் சிவனெனப் பொருள் கொண்டு பந்தித்தற்கு நயங்காண கில்லாது இடர்ப்படுவர். தேர்ந்துதெளிக. சிவஞானியர் சிந்தையைவிட்டு அவர்கள் விடுவித்தாலன்றி அம்மை செல்ல இயலாது என்பார் 'பந்திப்பவர்' என்றார். எவ்வளவு உரிமை சிவஞானியர்க்குண்டு என்பதையுன்னுக. சந்தித்தல் - நேர்படல்; தரிசித்தல். மக்கள் சந்திப்

பாராயின் உடனே தண்ணளி எளிதாகின்றது என்னே வியப்பு! என்பதாம்.

## கருணையை விழைவார் காணும் பேறுகள்

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

அம்மையின் அருளைப் பெற்றோர் இம்மை மறுமை வீடு என்ற மூன்றையும் எய்துவார்; இது துணிவு என்றருள்கின்றார்.

இ-ள்:- பண்களுக்கும் இனிமையைக் கொடுக்கின்ற சொற்களையும், தெய்வமணங் கமழும் திருமேனியையும் உடைய யாமளையாகிய பசுங்கிளியே! கருணைபெற வேண்டிக் கணக்கில்லாத தவஞ் செய்தோர் இம்மையில் அரசசெல்வத்தை மட்டுமோ அடைவார்; மறுமையில் இந்திர பதவியையும் எய்துவர். அம்மட்டோ? பின் அழியாத முத்தியின்பத்தையும் அடைவர். அவர்க்கு எய்தலாகாத பதவி எது? ஒன்றுமில்லை எ-ம்.

செல்வமோ பெறுவார்; ஓகாரம் இழிவு சிறப்புப்பொருளில் வந்தது. மதி வானவர்தம் விண்ணளிக்கும் செல்வம் - எல்லாரானும் மதிக்கப் பெறுகின்றதாகிய இந்திரச் செல்வம். வினைப் போகங் கழிக்கவந்தவிளைவாகலின் அரசபோகமும்

இந்திரபோகமும் அழியும் என்பார், வினைகழன்ற விளைவாகிய முத்தியை 'அழியா முத்தி' என அறிவித்தார். "அறந்தழுவு நெறி நின்றோர்க்கிகம் போகம் வீடளிக்கும் அம்மை" (திருவிளை) என்பதும் காண்க. யாமளை - சியாமளை என்பதன் திரிபு. பச்சை நிறமானவள் என்பதாம். யாமளம் என்னும் வேதத்தாற் குறிக்கப்பெறுபவள் என்பதுமாம். பக்தி பஞ்சரசுகமாதலின் 'பைங்கிளியே' என்றார்.

## கருணையின் வியப்பு

**கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்**
**ஒளியே யொளிரு மொளிக்கிட மேயெண்ணி லொன்றுமில்லா**
**வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி *விரிந்தவம்மே**
**அளியே னறிவள விற்கள வான ததிசயமே. 16**

ஞானிகள் மனத்து விளங்கியும் விளங்காமலும் இருக்கின்ற நீ, ஆகாய முதலான பூதங்களாக விரிந்த நீ, எளியேன் அறிவிற்கு எட்டியது யாருக்கும் அதிசயப்படுவதொரு செய்தியாம் என்று அருளுகின்றார்.

இ-ள்:- கிளியே! நெருங்கிய உறவினராகிய ஞானிகளின் மனத்தே இருந்து, பின்னர் மேலும் மேலும் ஓங்கி ஒளிவிடுகின்ற அறிவொளியே! அங்ஙனம் விளங்குகின்ற அறிவொளிக்கு ஆதாரமாக இருப்பவளே! ஆராய்ந்து நோக்கில் இவ்விரு

---

*விளைந்த - பி. ம்.

நிலையுங் கடந்து இவற்றுள் ஒன்றுமாகாத பர வெளியே! அங்ஙனம் சூக்கும வடிவியாயினும் தூலமாகிய ஆகாயமுதலாக விரிந்த அம்மையே! இரங்கத்தக்க எளியேனது சிற்றறிவின் அள வினதாகத் தாம் அகப்பட்டது என்ன வியப்பு! கருணையின் மலிவு என்பது குறிப்பு எ-ம்.

கிளைஞர்-தமக்கு யாரும் உறவில்லாத அம்மைக் குறவான ஞானிகள். கிடந்து என்ற சொல் லாற்றல் 'நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்' என்றாற்போலத் தன்வசம் அன்றிக்கே கிடத்தல் என்பதாம். பந்திப்பவர்களாதலின் அவர்கள் நெஞ் சத் திருந்தமையைக் கிடந்தென்றார். கிளர்ந்து - அவர்கள் யோகக்கனல் கனற்ற ஒருகாலைக் கொருகால் மேலோங்கி. ஆதேயமாகிய ஒளியா யிருந்ததோடன்றி ஆதாரமாகிய இடமாயும் இருக்கின்றாள் என்பார் 'ஒளிக்கிடமே' என்றார். ஒளியும் ஒளிக்கிடமும்போலப் பேசப்பெற்றாலும் ஆராயின் அருவாகிய அறிவாகிய பரவெளியாகி விளங்குகின்றாள் என்பார் 'ஒன்றுமில்லாவெளியே' என்றார். பெருமையைச் சிறுமையில் அடக்கிக் காட்டுவது அதிசயமாயிற்று.

## பதியையும்வென்ற பண்பு

**அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்**
**துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி**
**பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்**
**மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே. 17**

ஒப்பில்லாத உருவழகை யுடையாளாகிய அபிராமிதேவி, காமனையும் வென்ற வீரனாகிய சிவபெருமான் தன் அறிவழிய வாமபாகத்தை வவ்வினாள்; அவள் வெற்றி இருந்தபடி யென்னே! யென்கின்றார்.

இ-ள்:- எல்லாரும் வியக்கத்தக்க வடிவை யுடையவள். ஆயிரம் இதழுடைய தாமரையாகிய தெய்வத்தாமரை முதலிய யாவும் போற்று முகச் செவ்வி வாய்ந்த இமயவல்லி; தன்னைத் துணையாகக் கொண்ட இரதி நாயகனாகிய மன்மதன் வெற்றி யானது தோல்வியாகும்படி, யோகத்திருந்த காலத்து விழித்த பெருமானுடைய அறிவானது வற்றிப் போம்படியன்றோ இடப்பாகத்தை நீ கவர்ந்துகொண்டது எ-ம்.

அதிசயம் என்பது முன்னும் பின்னும் உண்டாகமுடியாத பொருளால் விளைவது. அம்மையின் திருமேனி யழகும் அத்தகையதாதலின் அதிசயமான வடிவாயிற்று. அரவிந்தமெல்லாம் என்றது பொற்றாமரை முதலிய தெய்வத் தாமரைகளையும் உளப்படுத்தி. சய்யவல்லி என்றது தொகுத்தல் விகாரம் பெற்றுச் சயவல்லியாயிற்று. துணை இரதிபதியென்றது இறைவன் போகியாயிருந்து உயிர்க்குப் போகத்தைத்தருதல் சத்தியோடு கூடியன்றி யல்லது நிகழாமையின் பராசத்தியைப் பெருந் துணையாகக்கொண்டு இருக்கின்றான் மன்மதன் என்பதை விளக்கிநின்றது. பார்த்தவர் - மதனை

விழித்தெரித்த சிவபெருமான். மதிசய மாக என்றது புத்தி குறைய. சயம் - க்ஷயம் என்பதன் சிதைவு. தலைவியைக்கண்ட காலத்துத் தலைவன் கல்வியறிவு முதலியன குறைதல். இங்ஙனமன்றி, துதி சய வானன சுந்தரவல்லி, மதிசயமாக என்ப வற்றிற்கு வெற்றியென்றே பொருள் காண்பர் சிலர். திரிபந்தாதியில் நான்கு அடியிலும் வந்த ஒரு சொல்லுக்கு நான்கு பொருள் படவைத்தலும், ஒரே பொருள் தோன்ற வையாமையும் தொல்லோர் மரபு ஆதலின் அவ்வுரை ஆராயத்தக்கது.

## காலன் வரும்போது காக்கவேண்டுதல்

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்கும்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே. 18

அர்த்தநாரீசுவர வடிவத்தில் எழுந்தருளிவந்து இயமன் வருகின்ற காலத்துக் கண்ணெதிர்ப் பட்டுக் காத்தருளவேண்டும் என்கிறார் இப்பாட்டில்.

இ-ள்:- அங்ஙனம் கவர்ந்த பாகத்தினை யுடைய பரமேசுரனும் தேவரீரும் மகிழ்ச்சியோ டிருக்கும் வடிவழகும், கல்யாணசுந்தரத் திருக் கோலமும், அடியேனுடைய மனத்தில் வஞ்சகம் தொலையத் திருவருள் புரிந்து ஆட்கொண்ட திருவடியுமாக எழுந்தருளி, கொடிய காலன் எனது

உயிரைக் கொள்ளைகொள்ள வருகின்றபோது வெளிநிற்கவேண்டும் எ-ம்.

இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும் செவ்வியென்றது (உமையொரு பாதியனாகி) அர்த்தநாரீச்சுரராக இருக்கும் நிலையை உணர்த்திற்று. மணக் கோலம் - கல்யாணசுந்தரக் கோலம். அவ்வியம் - வஞ்சனை; மாயையில் அழுத்திக்கிடந்த மயக்கம். பொற்பாதம் அருளாதலின் விளக்குப்புக விருள் மாய்ந்தாங்கு மாயை மாய்ந்தது என்பார் 'அவ்வியம் தீர்த்து ஆண்டபாதம்' என்றார். அவ்வியம் - ஆணவம் என்பாரும் உளர். ஆணவம் உயிரைப் பற்றி நிற்பது; சிந்தையாகிய கரணத்தைப் பற்றியதன்று. காலனைக் காய்ந்த தலைமாதலின் காலன் வரும்போது காக்கவேண்டுகிறார். வெளி நிற்கவே என்றது அக்காலத்து அடியோனால் தேடி அலைய வாய்க்காது; ஆதலால் தேவரீரே வெளி வந்து கருணையினால் கலந்தாரைக் காத்து நிற்க வேண்டும் என்பதாம்.

## ஆனந்தாதிசயம்

**வெளிநின்ற நின்றிரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சும்**
**களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே**
**தெளிநின்ற ஞானந் *திகழ்கின்ற தென்ன திருவுளமோ**
**ஒளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே. 19**

---

*ஞானத் திருவின்றதென்ன - பி. ம்.

இவ்வளவு மகிழ்ச்சிக்கும், தெளிந்த ஞானத்திற்கும் காரணம் உணர்த்தினலன்றி யுணரேன் என்கின்றார்.

இ-ள்:- நவ கோணங்களில் உறைகின்ற தலைவி! உன்னைத் தரிசித்த கண்களும், மனமும் அடைந்த ஆனந்தவெள்ளத்திற்கு அளவேயில்லை. அம்மட்டோ! உணர்வரிய மெய்ஞ்ஞானம் உள்ளத்துத்திகழ்கின்றது இதன் காரணம் யாதோ! எ-ம்.

ஒளிநின்ற கோணம் ஒன்பது-தெய்வ ஒளி நிலைபெற்ற நவ கோணங்கள். நவகோணங்களாவன: முதலில் ஒரு திரிகோணமும், அதன் அட்டகோணமும், அதன்மேல் ஒரு தசகோணமும், அதன்மேல் சதுர்தச கோணமும், அதன்மேல் அட்ட தளமும், அதன்மேல் சோடச தளமும், அதன்மேல் விந்துத் திரயமும், அதன்மேல் சதுரஸ்ர திரயமுமாம். இவற்றுட் சிவகோணம் நான்கு; சக்தி கோணம் ஐந்தாம். சிவகோணம் நான்கும் கீழ்நோக்கியும், சக்தி கோணம் ஐந்தும் மேனோக்கியும் புணர மேற்கூறிய நாற்பத்துமுக் கோணமும் உற்பத்தியாமென அறிக. இந்நவ கோணங்களிலும் தேவி விசேஷமாய் வீற்றிருப்பள் என்பதறிக. புறக்கருவியாகிய கண்ணும் அகக்கருவியாகிய நெஞ்சும் அளவில்லாது களிக்கின்றன என்பார் 'களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை' என்றார். தெளிநின்ற ஞானம்-தெளிவு நிலைபெற்ற ஞானம்; அது சிவஞானம்.

உருவத்தைக்கண்ட எனக்கு ஆனந்த வெள்ளத்தையும், அடிஞானத்தையும் அளிக்கும் திருவுளக் கருத்து எதுவாகும்; கரையற்ற அருளேயாகும்; பிறிதின்று என்பது குறிப்பு.

### உறைவிடம் யாதென உசாவல்

**உறைகின்ற நின்றிருக் கோயிலின் கேள்வ ரொருபக்கமோ**
**அறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுத**
**நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ்ச மோவென் றனெஞ்சகமோ**
**மறைகின்ற *வாரிதி யோபூர ணாசல மங்கலையே.** 20

சிவபெருமானுடைய இடப்பாக முதலியவற்றோடு என் நெஞ்சத்தையும் ஒப்பக்கொண்டு உறைகின்ற பெருங் கருணை என்னே! என வியக்கின்றார்.

இ-ள் :– குறைவின்றி நிறைந்த நித்தியமங்கலையே! நீ உறைகின்ற திருக்கோயில் உன் கணவராகிய சிவபெருமானது இடப்பாகமோ! எல்லாராலும் உரைக்கப்பெறுகின்ற வேதத்தின் அடியாகிய பிரணவமோ! அல்லது அதன் சிரமாகிய உபநிடதமோ! அமுதம் நிறைந்திருக்கின்ற சந்திரனோ! தாமரையோ! அடியேன் மனமலரோ! மறைதற்கிடமாகிய பாற்கடலோ! எது? உணர்த்தியருளவேண்டும் எ-ம்.

கூறப்பெற்ற இவ்விடங்களில் எல்லாம் முறையே பராசத்தியாக, பிரணவ ரூபிணியாக,

---

*வாருணியோ - பி. ம்.

பரஞான ரூபியாக, சுவையாக, ஒளியாக, கலைமகளாக, அபிராமியாக, திருமகளாக விளங்குதலின் நீ விளங்காத இடம் ஒன்றில்லை. யாதலால் நீயே உரை என்கின்றார். கஞ்சம் - வெண்தாமரை. பூரணம்-நிறைவு. நிறைவு, இயற்கையே நிறைவும், குறைந்து பின் ஆன நிறைவும் என்று இருவகை உண்டு. அம்மையின் நிறைவு இயற்கையே நிறைவு. சிவஞானி "குறைவிலா நிறைவே"என்பர். மற்றொரு வள்ளல் "எஞ்சாத பூரணமாய்" என்பர். "பரிபூரணம்" என்பர் தாயுமானவர். அசலம்-சலிப்பில்லாதது. மங்கலை - மங்கலமுடையவள். எல்லாங்கூடி பரிபூரண நித்யகல்யாணி என்பது பொருள்.

## காட்சியிற் கனிதல்

**மங்கலை செங்கல சம்முலை யாண்மலை யாள்வருணச்**
**சங்கலை செங்கைச் சகல கலாமயி ருவுகங்கை**
**பொங்கலை தங்கும் புரிசடை யோன்*புடை யாளுடையாள்**
**பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 21**

உமாதேவியே, அபிராமி முதலிய எல்லாச் சக்திகளுமாய் இருக்கின்றமைகண்டு கனிகின்றார்.

இ-ள்:- பச்சைப் பெண்கொடியாகிய உமாதேவியே மங்கலை; சிவந்த கலசம்போன்ற தனத்தை உடையவள்; பார்வதி; கடற்கண்ணதாகிய சங்கு

*புலியூருடையாள் பி-ம்.

வளையல்கள் கிடந்தொளிவிடும் சிவந்த கையை யுடைய சகலகலாவல்லி; பொங்குகின்ற அலை தாவுகின்ற கங்கை தாங்கப்பெற்ற புரியாகிய சடையையுடைய இறைவனது இடப்பாகத்து இருப்பவள்; உயிர்கள் அனைத்தையும் அநாதியே அடிமையாக உடையவள்; பொன்னிறத்தை உடையவள்; நீலி; செய்யவள்; வெளுத்தவள் எ-ம்.

மங்கலை - அபிராமி. நீலி - துர்க்கை. செய்யாள் - இலக்ஷ்மி, வெளியாள் - சரஸ்வதி. பராசத்தியே அவசர பேதங்களால் ஐந்து நிறத்தோடு விளங்குகின்றாள் என்பதாம். அன்றி உமையே மங்கலையாகிய பிங்கலையாகவும், செங்கலசம் முலையாளாகிய செய்யவளாகவும், சகலகலாமயிலாகிய வெளியாளாகவும், மலையாளாகிய நீலியாகவும் விளங்குகின்றாள் என்று இயைத்துப் பொருள் காணலுமாம்.

## பிறவி வெறுத்தல்

**கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த**
**படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்**
**பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே**
**அடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே. 22**

தேவியைநோக்கி அடியேன் இறந்து பிறவா வண்ணம் தடுத்தாட்கொள்ள வேண்டும் என வேண்டிக்கொள்கின்றார்.

இ-ள்:- இளவஞ்சிக் கொடியே! பூங்கொம்பே! ஒன்றினும்பற்ருத அடியேனுக்குக் காலமல்லாத காலத்திற் பழுத்த கனிக்கு ஒப்பானவளே! வேதங் களின்மணமே! குளிர்ந்த இமயமலை பெற்ற பெண் யானையே! பிரமன் முதலான தேவர்கள் பலரையும் பெற்ற தாயே! அடியேன் செத்துப் பிறக்கா வண்ணம் வந்து ஆட்கொள்ளவேண்டும் எ-ம்.

காற்றுக்கும் ஆற்ருது அசைந்து ஆடுகின்ற இளவஞ்சிக்கொடியென்றது அடியார்கள் படுகின்ற அல்லலால் ஒரொருக்கால் விளையும் பெருமூச்சுக்கும் ஆற்ருது அசையுந் திருமனத்தள் என்பதைக் குறிக்க. அன்றி இடையின் மென்மை குறித்துச் சொல்லியதுமாம். கொம்பே பழுத்தபடியே எனக் கொண்டு ஏகாரம் அசையாக்கி கொம்பிற் பழுத்த கனிக்கு ஒப்பானவளே என்றும் உரைக்கலாம். வம்பே பழுத்த - காலமல்லாத காலத்தில் மாதுளை மா முதலியவற்றைப் பழுக்கச்செய்ய புகை முதலியன இடுதல் வழக்கு; அவ்வாறு பழுத்த என்பதாம். "வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு" என்ற மணிவாசகம் கருதுக. வேதம் பூவாஞல் அதன் மணம் ஞானம். இறப்புண்டேல் பிறப்பு உண்டாதலின் இறந்து இனிப் பிறவாமல் ஆட்கொள்ள அறிவிக்கின்ருர். "அடியேன் இனிப் பிறவாமல் வந்தேன்றுகொள்ளே" என்ற அப்பர் அருள்மொழியும், "இறவாமைவேண்டும், இறப்பு உண்டேல் மீண்டும் பிறவாமை வேண்டும்" என்ற அம்மையார் வேண்டுகோளும் கருதற்பாலன.

## குறிக்கோள் கூறல்

கொள்ளேன் மனத்தினின் கோலமல்லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளே யனைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே. 23

உலகுக்கு உள்ளும் புறம்பிலும், உள்ளத்திலும் விளைந்த தேனே! அம்மையே! அடியேன், பிற தெய்வம் பேணுமையும், நின்னன்பரல்லார் நேசம் கொள்ளாமையும், பிறசமயம் புகாமையும் ஆகிய குறிக்கோளுடையேன் என்கின்றார்.

இ-ள்:- அகன்றமூவுலகினுள்ளும், அவற்றின் புறம்பும், அடியேனுடைய இருதயகமலத்திலுமாக இருந்து நன்கு விளைந்த தேனே! மெய்யடியார் களித்தற் கேதுவாய களிப்பே! அருளத்தக்க அடியேனது கண்ணுள் மணியே! உன்னுடைய அழகிய உருவையன்றி வேறோருருவத்தை என் மனத்துக் கொள்ளேன்; உன்னடியார் கூட்டத்தை எஞ்ஞான்றும் பிரியேன்; அருட்சமயமாகிய இதனை விடுத்து மருட்சமயமாகிய பிறவற்றிற் புகுதேன்; இதுவே என் குறிக்கோள் எ-ம்.

இம்மூன்றும் என்கடன் எனவே நின்கடன் எஞ்சியுள்ளது அதுதான் காத்தருளவேண்டும் என்பதாம். உலகுக்கு உள்ளே யென்றது உடனுயிருத்தலையும், புறம்பே என்றது வேறாயிருத்

தலையுமுணர்த்திற்று. களிப்பூட்டும் கள்ளாகவும், அதனால் விளைந்த களிப்பாகவும், இருப்பவள் அம்மையே என்றது. கண்மணி யென்றது அன்பர்கள் எங்கு நோக்கினும் எதை நோக்குகினும் அம்மையின் உருவன்றிக் காணும் பொருள் வேறின்மையின் என்க. "கண்ணுட் கருமணியே மணியாடு பாவாய்" என்ற தாண்டகம் எண்ணுக.

## அருள் பெற்றதாலாய வீறு.

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

அபிராமிதேவியே! தேவரீர் திருவடிமலரைத் தொழுதபிறகு வேறுயாரையும் எதன் பொருட்டும் பணியேன் என்று வீறுகிளத்துகின்றார்.

இ-ள்:- மாணிக்கமே! அதன் ஒளியே! அம்மணிகளான் ஆகிய அணியே! அணியப்பெறும் அவ்வணிகளுக்குள்ள அழகே! உன்னிடம் அடைக்கலம் புகாத அறிவீனர்க்குப் பிணியாய் இருப்பவளே! அங்ஙனம் உண்டான பிணிக்கு மருந்தாயிருந்து தீர்ப்பவளே! தேவர்கள் யாவர்க்கும் பெருவிருந்தே! திருவடிமலரைத் தொழுதபிறகு வேறுயாரையும் பணியேன் எ-ம்.

மணி-பொருள். ஒளி-அதன் குணம்; அணி-பொருள்; அழகு-அதன் பண்பு. ஆகவே பொருளாகவும் அதன் குணமாகவும் இருந்து மக்கட்குத் தனது சமவாய சம்பந்தத்தை யுணர்த்தி நிற்கின்றாள் என்பதாம். அப்பர் சுவாமிகட்கு அளித்த சூலைநோய்போல அணுகாதவர்க்குப் பிணியாய் இருந்து துன்பந் தந்து வினைக்கழிவு செய்தும், உண்மை உணர்ந்து அடைக்கலம் புகுந்தவிடத்துப் பிணி நீக்கும் மருந்துமாகி இருந்தும் அருள்புரிவள்.

### தன் தவங் கிளத்தல்

**பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க**
**முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கும்**
**அன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே**
**என்னே யினியுன்னை யான்மற வாமனின் றேத்துவனே. 25**

அபிராமிதேவியே! அனேக பிறவிகளில் அடியார்வழிபாடு செய்ததின் பலனாக நின்னையே வழிபடப்பெற்ற எனக்குக் குறை யாதொன்றும் என்கின்றார்.

இ-ள்:- முத்தொழில் செய்யும் முதன்மையுடைய மால் பிரமனுருத்திரர் ஆகிய மூவர்க்குந் தாயே! மண்ணுலகுக்கு அபிராமியென்னும் பெயரோடு எழுந்தருளியிக்கும் தேவாமுதமே! அடியேன் உண்மையடியார் பின்பாகவே திரிந்து, வழிபாடுகள் பலவுஞ் செய்து, தொல்லைப் பிறவி தொலைக்கப்

பழம் பிறவிகளிலேயே தவஞ்செய்துகொண்டேன். ஆதலால் இப்பிறவியில் தேவரீரை மறவாமல் வழிபட்டுக்கொண்டேயிருக்கின்றேன். இனி என்ன குறையுண்டு? எ-ம்.

பால் பிலிற்றும் பசுவின்பின்னல் தொடரும் கன்றுபோல அருள் பிலிற்றும் அடியார் பின்னல் திரிந்தேன் என்றார். "முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்.........மறவாமனின்று ஏத்துவனே" என்பது "யானேயோ தவஞ்செய்தேன் சிவாய நமவெனப் பெற்றேன்" என்றதை நினைவூட்டுதல் காண்க. உன்னடியார் தாள்பணிந்து ஆங்கு அவர்க்கே பாங்கான எமக்கு என்ன குறை! என்று கூறுதல்காண்க.

## அருளின் உயர்வு அறிவித்தல்

**ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்தும்**
**காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு**
**சாத்துங் குழலணங் கேமணந் நாறுநின் றாளிணைக்கென்**
**நாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே. 26**

அடியவர்களை ஆக்கவும், அளிக்கவும், அழிக்கவும் வல்லராக ஆக்கும் அருட்பெருக்கின் முன்னே என் புன்மொழி திருச்செவி யேற்றதும் நகையாகுமா? என்கின்றார்.

இ-ள்:- கடப்ப மலரணிந்த கூந்தலையுடைய அபிராமி! உன்னைத் துதிபாடும் அடியவர்கள்

பதினான்கு உலகத்தையும் படைத்தும், காத்தும், அழித்தும் திரிகின்றார்கள். அங்ஙனமாகத் தெய்வ மணங்கமழும் திருவடிகட்கு எனது புல்லியநாவிற் றங்கிய இம் மொழிகளும் ஏறியது நகைப்பை விளைப்பதாகுமா! ஆகாது எ-ம்.

என் புன்மொழி தேவியின் திருவடி சம்பந்தத் தாலே எல்லாவல்லமையும் உடையதாகும்; அதனைக் கூறிய அடியேனும் அடியார்கள் எய்திய நிலையை எய்தக்கடவேன் என்பதுட்கோள். ஏகாரம் வினா. வியப்பளிப்பதாகும் என்பது விடை.

## அருணலம் வியத்தல்

**உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு**
**படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே**
**அடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலால்**
**துடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே. 27**

அபிராமிதேவியே! நீ, மும்மலக்காட்டுள் மயங் கித்திரியும் எனக்கு அறிவூட்டி அன்புகொடுத்து. அடிசூடும் பணியையும் படைத்தாய்; இத்தகைய நின்னருளைப்பற்றிச் சொல்லுவதியாது? என்கிறார்.

இ-ள்:- சுந்தரி! தாமரைபோன்ற பாதங் களைச் சிரத்திற்கு அணியாகச் சூடிக்கொள்ளும் பணி எனக்கே உரியதென்று ஒப்படைத்தீர். என்மனத்து ஒட்டிக்கிடந்த அழுக்குகள் எல்லா வற்றையும் திருவருளாகிய தேவ கங்கையைக்

கொண்டு கழுவித் தூய்மையுறுத்தினீர்; உண்மை யன்பை உண்டாக்கினீர்; மாயாத வஞ்சப்பிறவியை மாய்த்தருளினீர்; இவ்வண்ணஞ் செய்த தேவரீர் திருவருள் எத்தன்மையது என்று சொல்லிப் புகழ்வது. இவ்வாறு பல்லாற்ருனும் அருள்வழங்கிய நீரே! அருள் நலத்தை வியக்கும் ஆற்றலையும் தர வேண்டும் எ-ம்.

வஞ்சப் பிறவியை உடைத்தனை என்பதால் வஞ்சனைக்கிடமாகிய கிரவுஞ்சமலையைப் போன்றது பிறவி என்பதும், குமரன்வேலைப்போன்றது அம்மையின் அருள் என்பதும் பெறவைத்தார். உள்ளம் உருகுதலாவது நெக்கு நெக்கு நினைத்தல். அழுக்கு - காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம் முதலா யின. புனலாற்றுடைத்தனை என்றது இருந்த சுவடுந் தெரியாதபடி துவரத்துடைத்தாய் என்ப தாம். ஏது என்று - எத்தகையது என்று.

## அடிதொழுவார் அடையும்பேறு

**சொல்லும் பொருளு மெனநட மாடுந் *துணைவருடன்**
**புல்லும் $பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்**
**அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசும்**
**செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே. 28**

அபிராமிதேவியின் அன்றலர்ந்த பூப்போலும் திருவடியைத் தொழுவார்க்கு இம்மையில் அரச

* துணைவரிடம் பி - ம்.

$ புலிகுழற் பி-ம்.

போகமும், தவநெறியும், பரமுத்தியும் கிடைக்கும் என்றருளுகிறார்.

இ-ள்:—சொல்லும் பொருளும்போல ஆனந்தக் கூத்தருடன் ஒன்றியிருக்கின்ற ஆனந்தவல்லித் தாயே! தேவரீருடைய அன்றலர்ந்த பூப்போலுந் திருவடியை இரவுபகலின்றி ஏத்துகின்ற அடியார்கட்கு எப்பகைவர்களாலும் அழிக்கமுடியாத அரசும், மறுமைக்கு ஆகும் தவநெறியும், சிவநெறியும் ஆகிய மூன்றும் சித்திக்கும் எ-ம்.

நடம் ஆடுந் துணைவர் - பஞ்சகிருத்திய நடனஞ் செய்யும் நடராஜப்பெருமான். புல்லுதல்-தழுவுதல். இறைவனோடு இறைவி புல்லியிருக்கின்ற தன்மைக்குச் சொல்லையும் பொருளையும் உவமைகாட்டினார். "சொல்வடிவாய் நின்னிடம் பிரியா இமயப் பாவைதன்னையும்சொற்பொருளான உன்னையுமே" எனத் திருவிளையாடற்புராணத்தும் காண்க. புதுமலர்த்தாள்-அன்றலர்ந்த பூப்போலுந் தாளாதலின் அருட்டேன் மிகுதியும் ஊறும் என்பதாம். அம்மை பூங்கொடி; அடிகள் மலர் என்ற இயைபும் காண்க. அவர்க்கே என்றது பிறர்க்கு இல்லை என்பதுபடநின்றது. ஏகாரம் பிரிநிலை. அழியா அரசு - விட்டில், கிளி, யானை; வேற்றரசு, தன்னரசு, பெரும் பெயல், காற்று என்பவற்றால் அழியாத அரசு. தவநெறி-தவஒழுக்கங்கள். இம்மைக்கும், மறுமைக்கும், முத்திக்கும் வேண்டுவன நல்குவது அம்மையின் அடிகளேயாம்.

## திருமேனிச் சிறப்பு தெரித்தது

**சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா**
**சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்**
**முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த**
**புத்தியும் *புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29**

சித்தி முதலாகிய ஐந்துபயனுமாகி யளிப்பவள், ஆன்ம போதத்துளே வியாபித்து நிற்கின்ற அபிராமிதேவியே என்கிறார்.

இ-ள்:- சித்திகளும், சித்திகளையெல்லாம்அருள் கின்ற தெய்வமாக விளங்குகின்ற பராசத்தியும், பராசத்தி ஏனையசத்திகளாகத் தழைத்தற் கேது வாய பரசிவமும், பரசிவத்தை நோக்கித் தவஞ் செய்யும் சித்தாந்த ஞானிகள் அடையும் பரமுத்தியும், அப்பரமுத்திக்கு வித்தும், அந்த வித்திற்கும் வித்தாக யோகநிலத்தில் முளைத்தெழுந்த சிவஞானமும் ஆகிய எல்லாம், அடியேனது ஆன்மபோதத்துள்ளும் வியாபித்துநின்று அடியேனைப் பெத்த காலத்தும் முத்திக்காலத்தும் பாதுகாக்கும்வடிவினை உடையையாகிய நீயல்லவா? எ-ம்.

சித்தி - அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசித்துவம், வசித்துவம் என்ற எட்டுமாம். இவற்றின் இயல்புகளைத் திருமந்திரம் மூன்றாந்தந்திரத்துக் (31—60) காண்க. அம்மையே சித்திதருந் தெய்வமாதலைத் "தெரிதரு

---

* புத்தியி னுள்ளருள் பூரிக்கும் புரத்தை - பி. ம்.

சாம்பவி கேசரி சேரப், பெரிய சிவகதி பேறெட்டாம் சித்தியே" என்ற திருமந்திரம் உணர்த்தும். கேசரி - ஒரு யோகவகை. "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" ஆதலால் சத்தி தழைக்கும் சிவம் என்றார். முத்திக்கு வித்தும் வித்து - முத்திநிலத்திற்கு விதைக்கப்பெறும்விதை என்றுமாம் வித்தும் வித்து - பெயரெச்சத்தொடர். புரத்தை - திருமேனியையுடையாய். புரம் - சரீரம்.

## தன்வசமறுதல்

**அன்றே *தடுத்தென்னை யாண்டுகொண் டாய்கொண்ட தல்ல**
**நன்றே யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுள்[வெள்கை**
**சென்றே விழினுங் கரையேற் றுகைநின் றிருவுளமே**
**ஒன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே. 30**

அடியேன் என்னசெய்தாலும் பொறுத்து ஈடேற்றுகையே உன்கடமை என்றருளுகின்றார்.

இ-ள்:- ஒன்றாயும், பலவாயும், அருவாயும் நிற்கும் அபிராமியே! அறியாக்காலத்திலேயே அடியேனைத் தடுத்தாண்டுகொண்டாய். ஆட்கொண்ட நீயே இன்றைக்கு என் குற்றங்கள் கண்டு 'இனி வேண்டாம்' என்று கூறுதல் உனக்கு நல்லதல்ல. நான் என்ன தீமைதான் செய்தாலும், நடுக்கடலிற் போய் வீழ்ந்தாலும், 'அறிவிலி செய்தான்' என்று கரையேற்றுவதே கடமையாதல் வேண்டும் என் செயல் ஒன்றுமில்லை எ-ம்.

* தனித்தென்னை பி - ம்.

அன்றே என்றது ஆட்கொண்ட தலைக் காலத்தைச் சுட்டி நின்றது. தலைவியாகிய உனக்கு, கொண்டதைக் கொள்ளவில்லையெனத் தள்ளுவது அழகன்று என்பதாம். என் செயினும் என்பது விலக்கப்பெற்ற குற்றங்களை அறிந்தே செய்தேன் ஆயினும் என்பது விளக்கிநின்றது. ஒன்றே என்றது சிவம் ஒன்றான காலத்து அங்கியிற் சூடுபோலவேறன்றிக் குணகுணியாகி ஒன்றியிருந்த நிலையை. பலவே என்றது நாதனுக்கு ஏற்ப நவந்தரு பேதமாகி நின்ற நிலையை. அருளென்றது ஞானவடிவாகி நின்றநிஷ்கள நிலையை. இப்பாடற் போக்கு "அன்றே என்றனுவியும் உடலும்" என்ற மணிவாசகத்தை மனத்து ஆக்குவது. அதன் முடிபைப்போன்றே மீண்டும் "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்பது கருதத்தக்கது.

## ஆட்கொண்டதிறம் அறிவித்தல்

உமையு முமையொரு பாகனு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
அமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே. 31

அர்த்தநாரீசுரராக அருட்கோலங் கொண்டு எழுந்தருளிவந்து ஆட்கொண்டார். ஆதலால் ஆண்டான் கட்டளையன்றிப் புறம்போகேன் என்றருளுகின்றார்.

இ-ள்:- உமாதேவியும் சிவபெருமானுமாக ஒரே உருவில் வந்து ஒன்றுக்கும் பற்றாத புழுத் தலைப்பட்டநாயினும் கடையேமாகிய எம்மையும் தமக்கே யன்புசெய்யப் பணித்தார். ஆதலால், இனி ஆராயக் காலமும் கிடையாது. நாம் பெற்ற பேறு இதுவாக; இனி எம்மைப்பெறுந் தாய் ஒருத்தியும் இல்லை; மாதராசையும் இனிப் போதும்; வேண்டாம் எ-ம்.

உமை, உமா என்பதன் திரிபு. உயிர்களைக் காப்பவள் என்னும் பொருளது. இனி ஓ+மா உமா எனக்கொண்டு அம்மா! (தவம்செய்ய) வேண்டாம் என்று அன்னை தடுத்தமையால் வந்த பெயரென்பாரும் உளர். உமையென்று தொடங்கி யவர் மீட்டும் இறைவனைக் குறிக்கின்ற காலத்து உமையை விட்டுக் குறிக்கமுடியாமல் 'உமையொரு பாகர்' என்றே குறித்தலால் அம்மையின் அருட் பதிவு காண்க. எமையும் உம்மை இழிவுசிறப்பு. இவ்வாசிரியரை யாட்கொண்ட முறை அர்த்த நாரீச்சுர வடிவமாகக் கனவிடைவந்து என்பது கடவூரிலும் கர்ணபரம்பரையாக வழங்கப்பெறுதல் உன்னுக. சமையம் - காலம். ஆட்கொண்ட பிறகு ஆராய்ச்சி கூடாமைமாத்திரமே யன்றி ஆனந் தாநுபவத்திற்கு இடையீடாகவுமிருத்தலின் ஆராய நேரம் ஏது என்பதாம். சமையம் என்பதற்கு கொள்கைகள் என்பாரும் உளர். ஆண்டான் குறிப்படி நெறிப்பட்டேனாதலின் இனி எனக்குப்

பிறப்பில்லை என்று துணிந்தவர் தாயுமில்லை என்றார். அமையுறு தோளியர் - மூங்கிலை ஒத்த தோள்களையுடைய பெண்கள். மாதர் ஆசையும் போதும் என்றது, இனி அதற்கும் புத்தி நாடாது; நேரமும் இல்லை; அது இதுபோன்ற இன்பமும் ஆகாது என உளத்தடைத்து உரைத்ததாம்.

## இதுவுமது

**ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்**
**பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்**
**வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட**
**நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே. 32**

தாமே வலியவந்து திருவடி தீட்சைசெய்து ஆட்கொண்ட பேருபகாரத்தை எங்ஙனம் சொல்லித் துதிப்பேன்; 'ஆனந்தம் அகங்கொண்டு வெளி வருகுதில்லை' என்கின்றார்.

இ-ள்:- பரமேசுரன் பக்கலில் எழுந்தருளி இருக்கின்ற அபிராமியே! கங்குகரை காணவியலாத ஆசையாகிய கடலிலகப்பட்டு, கருணையற்ற காலன் கையிலுள்ள பாசத்தினால் வருத்த இருந்த என்னை உன்னுடைய பாதம் என்கின்ற மணம்பொருந்திய தாமரைமலரைத் தலைமேல் தாமே வலியவந்து சூட்டி ஆட்கொண்ட பெருங்கருணையைப் பற்றி என்ன சொல்லுவேன்; சொல்ல இயலாது எ-ம்.

ஆசைக்கோரளவில்லையாதலின் ஆசை கடல் என உருவகிக்கப்பெற்றது. தன்னிடம் வீழ்ந்தாரை வெளிக்கிளம்பவிடாது மறிக்கும் ஆற்றலதாதலான் 'அகப்பட்டு' என்றார். அந்தகன் - அந்தத்தை (இறுதியை)ச் செய்பவன்; யமன். 'இளையர் என்னான் முதியோர் என்னான்' ஆதலின் அருளற்ற அந்தகன் ஆயினன். அல்லற்பட இருந்தேனை என்றது தன்னுடைய பண்டைய நிலை. குறித்து தலைக்குப் பேரழகும் மணமுந் தந்ததென்பார் 'வாசக்கமலம் தலைமேல்வைத்து' என்றார். வலிய வைத்து என்றது அம்மையாரின் அருட் பெருக்கைக் காட்டி நிற்பதோடு ஆன்மாக்களின் அறியாமைப் பெருக்கையும் காட்டி நிற்கிறது. வேண்டாம் என்று மறுத்தும், விலகி யொழுகியுங் கூட வலியவைத்தாண்டாள் என்ற கருணை காண்க.

## இறப்பிற்கு அஞ்சி ஏத்துதல்

**இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க**
**அழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர்சித்தமெல்லாம்**
**குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே**
**உழைக்கும்பொழுதுன்னையேயன்னையேயென்பனேடிவந்தே.**

காலன் என்னைக் கடுகி யழைக்கின்ற காலத்துத் தாயே என்றழைப்பேன். அபயந்தந்து ஓடிவந்து காத்தருளவேண்டும் என்றருளுகின்றார்.

இ-ள்:- உலக பிதாவாகிய சிவபெருமானுடைய உறுதியான சித்தத்தையும் குழையச்

செய்கின்ற கலவைச் சேறப்பிய குவிந்த தனங்களை யுடைய அபிராமியே! பல பிறவிகளில் யான் செய்த வினைகளில் பிராரத்த வினைக்கீடாகக் காலன் என்னை நடுங்க அழைக்கின்ற காலத்து எழுந்தருளி அபயந்தரவேண்டும். நான் வருந்துகின்ற காலத்து, பரபரக்க வந்து தாயே என்று அழைப்பேன் தவறாது வந்து காக்கவேண்டும் எ-ம்.

காலனும் நெறியன்றி அழைக்கமுடியாது என்பார் 'வினைவழியே யடுங் காலன்' என்றார். காலன் அழைக்கச்செய்த தீமையும் அடியேனுடையதே என்பது கருத்து. அழைப்பது நேர்மையானாலும் நடுங்க அழைப்பது அவன் கொடுமை. அதினின்று காக்கவேண்டும் என்கின்றார். அன்றிக், காலன் என்னைப்பார்த்து நடுங்கும்படியாக அழைக்கின்ற காலத்தும், பயப்படாதே என்றருள்செய் என்றுமாம். மார்க்கண்டனை நடுங்க வதைத்த காலத்து இறைவனால் உண்டான பழம் புண் அவன் மனத்தைவிட்டகன்றது இல்லையாதலான் இப்போது இறைவியாகிய நீ சொன்னால் அவன் நடுங்குவான் என்பது கருத்து. அத்தர் சித்தத்துறுதி, உன் குவிமுலைமுன் நில்லாதென்பார் 'குழைக்குமுலை' என்றார். 'அஞ்சல் என்பாய் என வேண்டியும் கடமைதவறி வாளாவிருந்து விடின், அவன் என்னை வருத்துகின்றகாலத்து நான் சும்மா இரேன்; ஓடி வந்து தாயே எனக்

கத்துவேன்; அப்போது காத்துத்தான் ஆக வேண்டும் என்பது கருத்து.

### அம்மை எழுந்தருளும் இடங்கூறல்

**வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகம்**
**தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுமுகமும்**
**பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொன்**
**செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே. 34**

அபிராமியம்மை, அடைக்கலம் புகுந்த அடியார்க்கருள்வழங்கித் திருமாலின் மார்பு முதலிய இடங்களில் திகழுவள் என்கின்றார்.

இ-ள்:- அம்மை, அடைக்கலம் என்று வரும் அடியார்களுக்கு விண்ணுலக இன்பத்தை வழங்கிப், பிரமனது நான்குமுகங்களிலும், திருமாலின் தேன் ஒழுகுந் துளபமாலையோடு கௌத்துபமணி யணிந்த மார்பத்திலும், சிவபெருமானுடைய இடப்பாகத்திலும், பொற்றாமரை மலரிலும், விரிகின்ற கிரணங்களையுடைய சூரியமண்டலத்திலும், சந்திரமண்டலத்திலும் விரும்பிச்சென்று இருந்தருள்செய்வள் எ-ம்.

இங்ஙனம், சதுர்முகத்தில் எழுந்தருளுங் காலத்துக் கலைமகளாகவும், ஆகத்து எழுந்தருளுகின்றபோது திருமகளாகவும், பாகத்தெழுந்தருளுங்கால் பார்வதியாகவும், சூரிய சந்திரர்களிடம் தேசஸ்வினியாகவும் எழுந்தருள்கிறாள். இதனை "வேதியர்க ளயனவில் விஞ்சை மகள் என்றும்,

சீதரன்றன் மணிமார்பிற் செழுங் கமலை என்றும், நாதரிடத்தரிவையென்று நாட்டுவரெண்ணடங்கா, ஆதிபரன் மூலபரை யாமளையுண் மயக்கால்'' என்பதாலும் அறியலாம்.

'வானுலகந் தந்து தான்போயிருக்கும்' என்றதால் திருக்கடவூரே நித்யவாசம் செய்யுந் தலம் என்பதும், ஏனையவைசென்று தங்குமிடங்கள் என்பதும் குறிப்பித்தவாறும். பரிவொடு - வருத்தத்தோடு என்றும் பொருள் கொள்ளலாம். அங்ஙனங் கூறுங்கால் சதுர்முகம் முதலான இடங்களில் இருக்கின்றகாலத்துச் சரணம் புகுவாரும், அருள் பெறுவாரும் இல்லாமையால் அவ்விடங்கட்கு வருந்திச்செல்லும் எனவும், திருக்கடவூரில் விரும்பி யிருக்கும் எனவும் கொள்க.

## பெருப்பேறு பெற்றமை வியத்தல்

**திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடி *சென்னிவைக்க**
**எங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்தவிண்ணோர்**
**தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்**
**வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே. 35**

அம்மையே! நினது திருவடி சூட்டப்பெற்ற இந்தப் புண்ணியம் யாருக்குக் கிட்டும் என்று தன்தவம் வியக்கின்றார்.

*சிந்தைவைக்க எ - ம்.

இ-ள்:- அலைகளோடு கூடிய பாற்கடலுள் சேஷ சயனத்தின்மீது அறிதுயில் அமர்ந்த அபிராமியே! பிறைமதியின் மணங்கமழுகின்ற நினது சீறடியை எங்கள்தலைமேல் தாமே வலிய வைத்தருளத்தக்க ஒருதவம் எங்கட்கும் வந்ததே! எண்ணிறந்த தேவர்களுள் யாருக்காவது இந்தத் தவம் கிட்டுமோ! எ-ம்.

சிவபெருமான் தலையில் புலவி வெறுப்புக் கொண்டு ஊடல்தணியச் சூட்டப்பெற்றது; எம் தலையில் 'இவன் உய்யட்டும்' என்ற அருட்பெருக் கோடு சூட்டப்பெற்றது. ஆதலால் அடிசூடும் தவம் அவருக்கும் அடியார்களாகிய எங்கட்குமே உரித் தாகும்; மற்றத் தேவர் வெற்றுத் தேவரே.

பகவு-பிளவு. மணி அணைமேல் துயில் கூரும் என்றது விஷ்ணுவை அதிட்டித்து நின்று இயக்கும் சத்தியாக இருக்கின்ற நிலைபற்றி.

### அருளின் இயல்பை அறிவிக்கவேண்டுதல்

**பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்செய் [யும்**
**மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத்**
**திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்றன்**
**அருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே. 36**

காரணகாரியத் தொடர்பாக, ஆன்மாக்கட்குப் பயன்தரும் அருளை - அதன் தன்மையை யான்

அறியகிற்றிலேன்; தேவரீரே அறிவிக்க வேண்டும் என்கின்றார்.

இ-ள்:- பொன் வெள்ளி முதலிய பொருளே! அப்பொருளால் எய்தப்பெறும் இன்பமே! பொருளால் போகத்தை எய்தச்செய்யும் அருளே! போகத்தை நுகர்தலால் வரும் மயக்கத்திலிருந்து எழுந்த தெளிவே! தாமரையாகிய ஆசனத்தில் எழுந்தருளியிருக்கின்ற அபிராமியே! அடியேன் மனத்தில் வஞ்சத்தால் விளையும் இருள் சிறிதும் இல்லையாம்படி, எங்கும் ஒளியோடுகூடிய பராகாசமாக இருக்கச்செய்கின்ற உனது அருளை எவ்வியல்பினது என்று நான் அறிகின்றிலேன் எ-ம்.

முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியுமாதலின், இன்பத்திற்கு இன்றியமையாத பொருளாக முற்கூறினர். பின் பொருளால் விளையும் போகமாகக் கூறினர். பின் ஆன்மாக்கள் அப் போகத்தின்கண் அழுந்துங்காலத்து அறிவு இழந்து போகமே தானாய்த் தானே போகமாய் இருக்குமாதலின் மருளாகக் கூறினர். எதிலும் அதிகமாக மருண்டகாலத்துத் தெளிவு தோன்றுமாதலின் தெளிவாகப் பிற்கூறினர். பொருள் முதலானவற்றிலிருந்து தோன்றுகின்ற எல்லாம் அம்மையே என்பது இதனால் குறிக்கப்பெற்றது. ஏதும் என்பது ஒரு சிறிதும் என்னும் பொருளது. ஒளியின்முன் இருள் நில்லாதவாறுபோல, ஒளி

வெளியாகி இருக்கும் அருள்முன் வஞ்சத்திருள் மாய்ந்தது என்க.

## அம்மையின் அணிமுதலியன அறிவித்தது

**கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன**
**மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்**
**பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்**
**திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே.** 37

நாயகன் எத்திறம் நாயகி அத்திறம் என்னும் உலக மொழிக்கு மாறுகச் சிவபெருமான் திகம்பரராய் இருக்கத் தேவரீர்மட்டும் பட்டும் பணியும் புனைவது என்னே! என்று பழிப்பதுபோலப் புகழ்கின்றார்.

இ-ள்:- எட்டுத் திக்கையும் ஆடையாகத் தரித்த பெருஞ் செல்வனுகிய சிவபெருமானுடைய இடப்பாகத்திற் சேர்ந்திருக்கும் அபிராமிதேவியே! தாம் கையின்கண் அணிவது கருப்பு வில்லும் புஷ்ப பாணமும். செந்தாமரை மொட்டை ஒத்த தனங்களின்மீது அணிவது முத்துமாலை. பாம்பின் படத்தினைப்போன்ற நிதம்பத்தின்மீது அணிவது நவரத்தினக் கோவையாகிய மேகலையும் பட்டாடையும். இது என்னே விபரீதம்! எ-ம்.

மெய் ஆகுபெயராய்த் தனத்தைக் காட்டிற்று. திருவுடையான் என்பது குறிப்புமொழி. கைக்கு முதலிய நான்காம் வேற்றுமை யுருபுகள் ஏழாம் வேற்றுமைப்பொருளில் வந்தன.

## உலகவர்க்கு உணர்த்துதல்

**பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்**
**தவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்**
**துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையாள்**
**அவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே. 38**

உலகீர்! மறுமையில் வானுலக ஆட்சியை நீங்கள் விரும்பினால், இம்மையில் எங்களுடைய அபிராமியையும் அமுதகடேசனையும் வழிபடுங்கள்; என்று ஆணையிடுகின்றார்.

இ-ள்:- உலகிலுள்ளீர் பவழக்கொடியைப் போலச் சிவந்த திருவாயையும், குளிர்ந்த புன் முறுவலைச் செய்கின்ற வெள்ளிய பற்களையுமே துணையாகக்கொண்டு, சங்கரனைத் துவண்டுபோகும் படிச் சண்டையிட்டு, உடுக்கைபோன்ற இடையையும் வருத்துகின்ற இரண்டு தனங்களையுடைய அபிராமிதேவியைப் பணியுங்கள். அமராவதியை அரசாளவேண்டுமாயின் எ-ம்.

பவழக்கொடி செம்மையானது; அதைக் காட்டிலும் வாய் சிவந்ததென்பார் 'பழுத்த செவ் வாய்' என்றார். பழுத்த - தன்னிலையில் முதிர்ந்த. காதல்வெப்புக்கொண்ட கணவர்க்கு அது தீர்க்கும் மருந்தாய் முறுவல் இருந்தது என்பார் 'பனி முறுவல்' என்றார். நகை - முதனிலைத் தொழிலாகு பெயர். மேருமலையின் தென்பக்கத்து எழுதிய விளக்குப்போல யோகநிலையில் இருந்து காட்டிய

எங்கள் பெருமான்முன் மன்மதன் முதலியோர் வில் அம்புகொண்டு சென்றும் தோற்கவும், அபிராமி செவ்வாயும் தவள நகையும் கொண்டு நிலை தளரப் பொருதது வியப்பினும் வியப்பாம். அங்ஙனம் வெற்றிகண்ட அபிராமியைப் பணிந்தால் அமராவதி ஆளுதற்குப் பகையில்லை பயமில்லை. கண்டீர் என்பது முன்னிலை யசை. துணையா, பொருது சாய்க்கும் முலை எனக்கூட்டுக.

## தன் குறை அறிந்து தயங்கல்

**ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்**
**மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்**
**மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கள்**
**மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே. 39**

தேவி! அடியேன் உன் அனுக்கிரகத்தால் எல்லாத் துணையும் பெற்றிருந்தும் ஈடேறாதது என் குறையே என்று கவல்கின்றார்.

இ-ள்:- திரிபுரங்கள் அழியத் திருமாலாகிற அம்பைத் தொடுத்த வில்லாளியாகிய இறைவனது இடப்பாகத்து எழுந்தருளியிருக்கின்ற அபிராமியே! அடியேனை ஆளுவதற்குத் தேவரீருடைய திருவடித் தாமரைகள் இருக்கின்றன. காலனிடமிருந்து தப்புவதற்குக் கடைக்கண் நோக்கு இருக்கின்றது; இவற்றைத் துணையாகக்கொண்டு மேற்போதலுக்கு முடியாதது எனது குறையேயாம்; அம்மையினது அருட்குறை அன்று எ-ம்.

ஆளுதல் - குடிகளுக்கு வந்த துன்பத்தை நீக்கு தலும், இன்பத்தை ஆக்குதலும் என்ற இருவகைத் தாம். அடியேனுடைய பாசப் பிணியைத் தறித்துப், பிறவி நோயைக் கெடுத்துப், பேரின்ப நிலையைக் கொடுக்கின்ற ஞான ஆட்சிக்குத் திருவடித் தாமரை இருக்கின்றது என்றார். மரணபயம் முற்றத் துறந்தார்க்கும் உளதாதலின் அதனைப் போக்க அருள்விழி துணையுண்டு என்றார். இந்த இரண்டு துணையையும் கொண்டு மேலேறுதல் என் செயலாய் இருக்க, அது மாட்டாமை என் குறையேயாம்.

## புண்ணியத்தை வியந்தது

**வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்**
**பேணுதற்கெண்ணியவெம்பெருமாட்டியைப்பேதைநெஞ்சிற்**
**காணுதற் கண்ணிய எல்லாத கன்னியைக் காணுமன்பு**
**பூணுதற்கெண்ணியவெண்ணமன்றேமுன்செய்புண்ணியமே.**

தேவர்கள் யாவரும் வந்து வணங்குகின்ற தேவியைத் தரிசிக்கும் பேற்றினைத், தம் பழம் புண்ணியத்தால் அடைந்தேன் என்கிறார்.

இ-ள்:- நெற்றியிற்கண்படைத்தவளும், தேவர் கள் யாவரும்வந்து வணங்கி வழிபடுதற்கு எண்ணிய எம் தலைவியும், பேதைமையுடைய நெஞ்சில் காணு தற்கு முடியாத கன்னிகையும் ஆகிய அபிராமி தேவியைத் தரிசிக்க வேண்டும் என்று, அன்பு

கொள்ளுதற்குக் காரணமான எண்ணமல்லவா பல பிறவிகளில் யான்செய்த புண்ணியமாவது எ-ம்.

நுதல் - நெற்றி. வாள் - ஒளி. சென்ற திருப் பாட்டில் அமராவதி ஆளுகைக்கு அவளைப்பணிமின் என்றாராதலின் விண்ணவர்யாவரும் தம் பதவிகளில் அகலாது இருக்கக், கடவூருக்குவந்து பணிய விரும்பு கின்றாரென்பதை. 'விண்ணவர்யாவரும் இறைஞ்சிப் பேணுதற்கு எண்ணிய' என்பதாற் குறிப்பிடுகின் றார். பேதை நெஞ்சு - மலத்தால் மறைப்புண்ட ஆன்மாவின் மனம். காணுதற்கு - பாசஞான பசு ஞானங்களைத் துணையாகக்கொண்டு காணுதற்கு. அண்ணியள் - அணுக்கத்தில் உள்ளவள்.

## நெஞ்சறிவித்தல்

**புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்**
**கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தால்**
**நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்**
**பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே. 41**

மனமே! இறைவி இறைவனோடுவந்து அருள் வழங்குவதற்கு நாம் பலகோடி புண்ணியம் செய்திருக்கின்றோம் என்று நெஞ்சிற்கு அறிவிக் கின்றார்.

இ-ள்:- மனமே! கருங்குவளைக் கண்ணியாகிய அபிராமிதேவியும், சிவபெருமானும் நமக்கு அருள்

வழங்குவதற்காக ஒன்றுசேர்ந்து இங்கே எழுந்தருளிவந்து, அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரிந்து, நமது முடிமேல் திருவடி சூட்டப் புண்ணியம் செய்திருக்கின்றோம் அல்லவா எ-ம்.

அபிராமியின் கண்கள் எப்பொழுதும் கருணைத் தேன் வழிதலின் உவமை தேடிய ஆசிரியருக்கு எல்லாவகையானும் புதுப்பூங்குவளைதான் பொருந்துவதாயிற்று. நம் காரணத்தால் நண்ணி என்றது கைம்மாறு இல்லாக் கருணை மிகுதியைக் காட்டுகிறது. அடியார்கள் நடுவிருக்கப்பண்ணி என்றது "அடியேன் அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்" என்ற மணிவாசகத்தை நினைவூட்டுகின்றது. செய்தனமே என்பதில் ஏகாரம் தேற்றம்.

## அம்மையின் ஆற்றல் வியத்தல்

**இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து[வ்**
**வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை**
**நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்**
**படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே. 42**

இறைவனுடைய வலிய நெஞ்சையும் ஆட்டுவித்த இறைவி அபிராம சுந்தரியே என்கின்றார்.

இ-ள்:– அகன்று, பருத்து, விம்மி, இணைந்து, இறுகி, வேண்டுங்கால் இளகி, முத்துவட மணிந்து இருக்கின்ற கொங்கையாகிற மலைகளைக்கொண்டு,

கல்லினும் வலிய கணவர் நெஞ்சை ஆடும்படிச் செய்த வெற்றிகொண்ட வீரமாது யாரெனில், பாம்பின்படம் போன்ற அல்குலினையும், குளிர்ந்த மொழியினையும் உடைய வேதச் சிலம்பைத் தரித்த அபிராமியே எ-ம்.

'இடங்கொண்டு............ கொங்கைமலை' என்ற பகுதி "கச்சற நிமிர்ந்து, கதிர்த்து முன்பணைத்து எய்த்திடைவருந்த எழுந்து புடைபரந்து ஈர்க்கிடை போகா இளமுலை" என்ற மணிமொழியோடு ஒருபுடை ஒத்து இருத்தல் காண்க.

### செம்பாகத்திற்கேற்ற சிறப்பறிவித்தது

**பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொல்**
**திரிபுர சுந்தரி சிந்துர மேனிய ளைமைநெஞ்சில்**
**புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை**
**எரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே. 43**

இறைபாகமாகிய வலப்பாகத்தைப் போலவே இடப்பாகம் விளங்குகின்றது என்று, கண்டு காட்டுகிறார்.

இ-ள்:- வேதச் சிலம்பணிந்த அடிகளையும் பாச அங்குசங்களையும் உடையவளும், பஞ்சபாணங்களை யுடையவளும், சிவந்த திருமேனியையுடையவளும் ஆகிய இனிய சொற்களையுடைய அபிராமி தேவி, மனத்தால் தீமையே எண்ணுகின்ற முப்புராரிகள் அஞ்சும்படியாக வளைத்த மேரு

வில்லைத் திருக்கரத்தில் ஏந்திய அழல்வண்ண வண்ணராகிய இறைவனது செம்பாகத்து இருப்பவளாவாள் எ-ம்.

இடப்பாகத்து அம்மை பாசம் அங்குசம் பஞ்ச பாணம் முதலிய ஆயுதங்களைத் தாங்கிச் செம்மேனியாகத் திகழ்கின்றாள். வலப்பாகத்து இறைவனும் மலைவில் ஏந்தி செந்நிறத்தோடு திகழ்கின்றார் என்பது இணைத்து நோக்கற்குரியது. தீமை நெஞ்சில் புரிபுரவஞ்சர்-பொன் வெள்ளி இரும்பாகிய மூன்று கோட்டைகளைக்கொண்டு நகரை அழிக்கும் தீமையைச் செய்கின்ற கமலன், கமலாக்கன், வித்யுன்மாலி என்கின்ற மூவரும். செம்பாகம்-நடுப்பாதி.

## உறுதிகிளத்தல்

**தவளே யிவளெங்கள் சங்கர ஞர்மனை மங்கலமாம்**
**அவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினுல்**
**இவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாம் [செய்தே.**
**துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு**

அம்மை இறைவனுக்கு மனைவியாகவும் தாயாகவும் ஆயினள்; அன்றித், தேவருக்கு இறைவியும் ஆயினள். ஆதலால் வேறுதெய்வத்தைத் தொழுது வீண்போகேன் என்கிறார்.

**இ-ள்:**— தவத்தைச் செய்பவளாகிய இவள் எமது இறைவனுக்கு மனைவியும் ஆவள். அந்த

பராசக்தியே அவருக்குத் தாயும் ஆவள். ஆகையால் இவளே எல்லாக் கடவுளர்க்கும் மேலான இறைவி யும் ஆவாள். ஆகலான் இறைவிக்கு மேலாம் தெய்வம் உண்டென்று எண்ணித் தொண்டுசெய்து துவளமாட்டேன் எ-ம்.

தவள் என்பதில் அத்துச்சாரியை வேண்டிய வழி இல்லையாயிற்று. சங்கரன்-எல்லா உயிர்கட்கும் சுகத்தைத் செய்பவன். மனைமங்கலம் என்பதனை மங்கலமனையாம் என்று மாறிக்கூட்டுக. "மங்கலம் என்பது மனைமாட்சி" "மனைக்குவிளக்கம் மடவார்" ஆதலின் மங்கலமனை என்றார். இவள் என்ற அண்மைச்சுட்டு குணதத்துவத்து உச்சியிலிருக்கும் உமாதேவியை உணர்த்தும். அவளே என்னும் சேய்மைச்சுட்டு மேலுள்ள சாதாக்கிய தத்துவத் திலிருக்கும் மனோன்மணியை உணர்த்தும். உற்பத் திக் கிரமத்தில் அவள் (மனோன்மணி) ஸ்ரீகண்ட ருத்திரருக்கு அன்னையாதலும், இவள் (உமை) மனைவியாதலும் பொருந்துமாறு அறிக. "சக்தி தான் சிவத்தை ஈன்றும்" என்னும் சிவஞான சித்தித் திருவிருத்தம் இக்கருத்தை நன்குவிளக்கும். "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே" என்று மணிவாசகப் பெருமான் சிவத்தைநோக்கி கூறுதல்காண்க. செய்யத்தகாத இடத்தில் தொண்டுசெய்தால் பயன் கைகூடினும் களைப்பு உண்டாம்; செய்யத்தக்க இடத்தில் செய் தால் களைப்பு உண்டாகாது என்பார் 'துவளேன்' என்றார்.

## பொறுத்தருளவேண்டுதல்

**தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ [றே.
மீண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்**

ஞானிகள் செய்யும் மறத்தையும் அறமாகக் கொள்வதுபோல யான்செய்யும் மறத்தையும் 'அறியாமையாற் செய்தது' என்று அறமாகக் கொள்ளவேண்டும் என்கிறார்.

**இ-ள் :—** அபிராமிதேவியே! தேவரீருக்குத் தொண்டு செய்யாமலும் திருவடியைத் தொழாமலும் துணிந்து தமது இச்சைப்படி நடந்தவர்கள் முன் உண்டோ? இல்லையோ? அவ்வாறே அடியேனும் விதிவிலக்குகளை அறிந்து செய்தால் 'அது வஞ்சகமோ அல்லது நான் செய்யத தவம்தானே;' அதைப்பற்றி அடியேனுக்கு ஒன்றும் தெரியாது. அகங்கரித்துச் செய்தாலும் பொறுத்துக் கொள்வதே நல்லது; வெறுப்பது தேவியினுடைய பெருந்தன்மைக்கு நல்லதல்ல எ-ம்.

ஆன்மாக்களது கடமை அன்னைக்குத் தொண்டு செய்தலும், பாதம் தொழுதலுமாம். அவற்றைச் செய்யாத அடியார்களில் சிலர் செய்த தீமைகளையும் நன்மையாகப் பாவிக்கும் அம்மையின் தன்மை அறிந்து செய்தேன் அது செய்தவமோ? கைதவமோ? அறியும் ஆற்றலும் எனக்கு இல்லை.

மிண்டு - அகங்காரத்தால் செய்யும் அநீதி. செய்தாலும் என்ற உம்மை செய்யலாகாது என்ற எதிர்மறைப் பொருளில் நின்றது. "நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கரையன்........குற்றம் செயினும் குணமெனக்கருதும் கொள்கை கண்டு நின்குரைகழல் அடைந்தேன்" என்ற சுந்தரர் தேவாரமும் "பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்ற திருப்பால்லாண்டும் இக்கருத்தை வலியுறுப்பனவாம்.

## இதுவும் அது

**வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்**
**பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு**
**கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே**
**மறுக்குந்தகைமைகள்செய்யினும்யானுன்னைவாழ்த்துவனே.**

வெறுப்பனவே செய்யினும் விரும்பிக் கொள்ளுதல் அம்மையின் அருட்பெருக்கிற்கு அறிகுறியாம் என வாழ்த்துகின்றார்.

இ-ள்:- பாற்கடலினின்றும் எழுந்த புதிய விஷத்தைஉண்டதால், கறுத்த கண்டத்தையுடைய இறைவனின் இடப்பாகத்து எழுந்தருளியுள்ள அபிராமியே! நீ வெறுக்கும் காரியங்களையே அடியேன் செய்யினும், எங்களைப்போன்ற தம் அடியவர்களை உயர்ந்தவர்கள் பொறுத்துக்கொள்வது புதியது அல்ல; தேவரீர் என்னதான் மறுத்தாலும் யான் தேவரீரை வாழ்த்தியே தீருவேன் எ-ம்.

புதியதன்று என்று கூறிய ஆசிரியர் 'விடம் உண்டு கண்டங்கறுத்தான் இடப்பாகம் கலந்த பொன்னே!' என்று கூறியருளியது அம்மை வெறுக்கும் விடத்தையும் விரும்பும் அமுதமாக்கிய செயல் உடம்பொடு புணர்த்தலாகக் காட்டப்படுகிறது. கணவர்க்காயின் அதுவும் செய்யலாம், அடிமைக்காயின் ஆகாது என்று மறுத்தாலோ யான்மட்டும் அடிமைக்குரிய கடமையினின்று சிறிதும்தவறேன் வாழ்த்துவேன் என்பது எவ்வளவு நயமான உட்கிடக்கை! 'மறுக்கும் தகைமைகள் செய்யினும் வாழ்த்துவனே' என்றது "துடைக்கினும்போகேன்" என்ற அப்பர் சுருதியையும், "விடுவேனல்லேன்" என்ற மணிவாசகத்தையும் நினைப்பூட்டுதல் காண்க. "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்" என்பது சிவஞானபோதம்.

## அநுபூதியிற் களித்தல்

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகல்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

உலகவர்களைப் பார்த்து ஒளிமண்டல மத்தியிலே அபிராமிதேவியை யான் ஞானக்கண்ணாற் கண்டேன்; நீங்களும் காணுங்கள் என்று அருளுகின்றார்.

இ-ள்:— பேரானந்தப் பெருங்கடலில் திளைத்து வாழும்படியாக, இணையற்ற பொருளான அபிராமியைத் தரிசித்தேன்; ஒருவர் விரும்புவதற்கு அல்ல; ஒருவர் என்னைப்பற்றிப் பேசுவதற்காக அல்ல; இது உண்மை. அந்தப்பொருள் கடலாற் சூழப்பட்ட ஏழுலகங்கட்கும், எட்டுமலைகட்கும் அப்பாற்பட்டது. இராப்பகலாகச் சுற்றிவரும் சூரியசந்திரர்களுக்கு நடுவிலே கிடந்து ஒளிர்வது. அதனைக்கண்டு இன்புறுங்கள் எ-ம்.

ஒன்று - இணையற்றதாகிய ஒரு பொருள்; அது அபிராமி. எண்ணுகுபெயர். கண்டுகொண்டேன் என்பது காணுதற்கு நெடுங்காலம் முயன்றதும், காணுதற்கு அருமையானதும், கண்டபின் விடாப்பிடியாகப் பற்றியதும் ஆகிய கருத்துக்களை உள்ளுறுத்து நிற்கின்றது. கண்டு மனத்தேகொண்டேன் எனக் கூட்டுக. இதனை நான் வெளியிட்டுச் சொல்லுவது 'யான்பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்பதேயன்றி என்னை ஒருவர் விரும்புவதற்காகவோ என்னைப்பற்றி எல்லோரும் பேசுவதற்காகவோ அல்ல என்பது விளக்கம். சோதி மண்டலவாசினியாக இருத்தலால் சுடர்க்கு நடுவே கிடந்து சுழல்கின்றது என்றார்.

## அநுபூதிப் பயன் அறிவித்தல்

**சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்**
**படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்**
**இடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ**
**குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே. 48**

அபிராமியை நினைத்து ஒரு கணப்பொழுதேனும் சிவயோகத்திருப்பவர் பின் பிறவி எய்தார் என்று அருளிச் செய்கின்றார்.

இ-ள்:- ஒளிவிடுகின்ற பிறைச்சந்திரன் பொருந்திய சடாமுடியையுடைய சிவமாகிற செம்பவள மலையிலே படர்ந்திருக்கின்ற மணமுள்ள பசுங் கொடியாகிய அபிராமியை மனத்தின் கண்ணே பதித்து, துன்பத்தைத்தொலைத்து இமைப்பொழுதாவது இருப்பவர்கள், குடலும் நிணமும் இரத்தமும் பொருந்தும் குடிலை மீட்டும் எய்தார்கள்; அதாவது பிறவி இல்லை எ-ம்.

குன்றுஎன்றது சிவபெருமானை. உருவக அணி, ஒன்றிப்படர்தல்-இறுகத் தழுவுதல். இமைப்போது இருப்பார் என்பது - இமைப்போதாயினும் இருப்பார் என உம்மை தொக்கது. குரம்பை - கூடு. ஈண்டுஉடல். குரம்பையில் எய்துவரோஎன முடிக்க.

## அச்சத்தால் அரற்றல்

**குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட**
**வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்**
**தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்.**
**நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே. 49**

கூற்றுவன் கொல்லவருகின்ற காலத்து அம்மையே! அபயந்தந்து காக்கவேண்டும் என்கின்றார்.

இ-ள்:- யாழின் நரம்பைப் பொருந்திய நாத வடிவாய் இருக்கின்ற நாயகியே! இவ்வுடலாகிய குடிலில் குடிபுகுந்த இந்த உயிர், விதியினால் இயமனுக்கென்று வரையறுக்கப்பட்ட காலத்தை அடைந்து கலங்கும்போது, அபயம் கொடுத்து, அரம்பை முதலிய தெய்வச் சேடியர் சூழ எழுந்தருளிவந்து, அஞ்சாதே! என்று அருளவேண்டும் இதுவே யான் வேண்டுவது எ-ம்.

கூற்றுக்கு இட்ட வரம்பு-யமனுக்கென்று வரையறுக்கப்பட்ட இறுதிக்காலம். மறுகுதல்-புலன் ஐந்தும் பொறிகலங்கி அறிவழிந்திட்டு ஐமேலுந்தி அலமருதல். நரம்பை அடுத்த இசை, செவியூடு நுழைந்து உளத்தை உருக்கி ஒருவழிப் படுத்துமாறுபோல, அம்மையும் கண்வழிப்புகுந்து கருத்துள் ஊன்றி ஒன்றுவித்தலாலும் இசை வடிவாய் நின்ற நாயகி என்றார் என்றுமாம்.

## நாமங்கூறி இன்புறல்

**நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச**
**சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு**
**வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்**
**றாயகி யாதி யுடையாள் சரண மரணமக்கே.** 50

நாயகி நான்முகி முதலாயின, அவசர பேதங்களால் அம்மை அடைந்த திருநாமங்கள்; ஆதலால் அவற்றைக்கொண்டு அடியார்களுக்கு அருளும் பெற்றியை அறிவிக்கின்றார்.

இ-ள் :- இறைவி, சரஸ்வதி, நாராயணி, கைத் தாமரையின்கண் புஷ்ப பாணங்களைத் தரித்தவள், சாம்பவி, சங்கரி, சாமளை, நல்லபாம்பை மாலையாகக் கொண்டவள், வாராகி, சூலத்தை உடையவள், மாதங்கி இத்தகைய சிறப்புத் திருநாமங்களைப் பெற்றஅபிராமிதேவியினது திருவடிகளே நமக்குப் புகலிடமாம் எ-ம்.

நாயகி என்றது பராசக்தியையே குறிக்கும். அகிலாதி யுடையாள் என்று பாடம் ஓதுவாரும் உளர். மாதங்கி -மதங்ககுலத்தில் தோன்றியவள், மதங்க முனிவரின் புத்திரியுமாம். சாம்பவி - நிர்மல சிவசக்தி. சங்கரி-மனோன்மணி. நான்முகிமுதலான பரிவார சக்திகளையும் அபிராமியாகவே கூறியது இயக்க இயங்கும் உரிமைபற்றி.

### அடியார் எய்தும் பயன் அறிவித்தது

**அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கள்**
**முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே**
**சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்**
**மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே.** 51

பிரம விஷ்ணுக்களும் சரணம் புகும் அபிராமி தேவியின் அடியார்கள் பிறப்பு இறப்பு எய்தார்கள் என்று அருளுகின்றார்.

இ-ள் :- 'நம்முடைய மூன்று கோட்டைகளே நமக்கு உறுதியாம்' என்று எண்ணிச் சிவனருள்

பெருத திரிபுராதிகளுடைய பகைமை அழியும்படிச் சினந்த சிவபெருமானும், திருமாலும் சரணம் சரணம் எனும்படியாக நின்ற அபிராமியின் மெய் யடியார்கள், இவ்வுலகில் பிறப்பிறப்பை எய்தார் கள் என்றவாறு. இப்பிறவியிலேயே வீடடைதல் ஒருதலை எ-ம்.

அரணம் - பொன் வெள்ளி இரும்புகளால் ஆகிய கோட்டைகள். பொருள் - உறுதிப்பொருள். என்றது. அவர்கள் 'பொருளல்லவற்றைப் பொரு ளாகக்கொண்டு மருண்டார்கள்' என்பது அறி வித்தவாறு. சிவ விஷ்ணுக்களே சரணம் கூறுவார் களேயானால் தேவியினுடைய சிறப்பும் வல்லமையும் இருந்தவாறு என்னே எ்ன்பதாம்.

## அன்பர்க்குள்ள சின்னங்கள்

**வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை**
**பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த**
**ஐயன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு**
**செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. 52**

தேர் குதிரை யானை முதலிய அடையாளங் களைக்கொண்டு, இவர்கள் சென்ற பிறவியில் அபிராமியின் அன்பர் என்பதை அறிக என்று அருளுகின்றார்.

இ-ள்:— பிறை முடித்த பெருமானது திருமனை யாளாகிய அபிராமிதேவியினது அடித்தாமரை

களுக்கு அன்புபூண்ட தவத்தோர்க்கு உண்டான அடையாளங்கள் தேர், குதிரை, யானை, முடி, பல்லக்கு, பொன் மற்றுமுள்ள விலையுயர்ந்த ஆபரணங்கள் ஆகிய எல்லாம் எ-ம்.

இதனை அறிந்தேனும் அபிராமிதேவியின் திருவடிக்கு நீங்களும் அன்பு பூணுங்கள் என்பது குறிப்பு.

## சக்தியோக சாதனை கூறல்

**சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்**
**பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த**
**கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில்வைத்துத்**
**தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே. 53**

அம்மை அபிராமியினுடைய அழகைத் தியானித்துச் சிவயோகத்திருத்தலைக் காட்டிலும் சிறந்த தவம் இல்லை என்று அருளுகிறார்.

இ-ள்:— மிகச்சிறிய இடையிலே சாத்திய பட்டாடையையும், மிகப்பெரிய தனங்களிற் சாத்திய முத்தாரத்தையும், சாதிப்பூச் சூடிய கன்னங் கரிய கூந்தலையும், கருத்தில் வைத்துத், தனியேயிருந்து தியானிப்பாருக்கு இதுபோன்ற தவம் பிறிதில்லை இதுவே சிறந்தது எ-ம்.

சின்னஞ்சிறிய, கன்னங்கரிய, பென்னம் பெரிய, தன்னந்தனிய என்பன மரூஉ மொழிகள்.

மருங்கிலிருந்து குழல் இறுதியாக (ஆரோகண முறையில்) மேல்நோக்கிய முறையில் தியானிக்கச் சொல்வதை கூர்ந்து உளங்கொள்ளுக. பிச்சி - சாதிமுல்லைப்பூ. இது இத்தலத்திற்கு மிகச் சிறந்தது. மார்க்கண்டேயர் அமுதகடேசருக்கு அபிஷேகம் செய்விக்கக் கொண்டுவந்த தேவ கங்கையோடு வந்தது. இதுவே திருக்கடவூரின் தல விருக்ஷமுமாம்.

## அம்மையின் அடிகட்கு ஆற்றுப்படுத்தது

**இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு**
**நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவம்**
**கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலும்**
**செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54**

அபிராமிதேவியின் திருவடிகளைப் புகலடைந்த அடியவர்கட்கு என்றும் வறுமை இல்லை என வகுக்கின்றார்.

இ-ள்:- ஒருவரிடம் சென்று தரித்திரத்தைச் சொல்லித் தாழ்வுபட்டு நிற்கவேண்டாமென்று நினைப்பீர்களாயின், அடியேனைத் தவஞ்செய்யாத கீழோர்பால் ஒருக்காலத்தும் செல்லாதபடி அநுக்கிரகித்த அபிராமிதேவியின் திருவடிகளைச் சேருங்கள் எ-ம்.

இல்லாமை-வறுமை. கல்லாமை கற்ற என்பது சொல் முரண். செல்லாமை வைத்த என்பது தன் அநுபவம் கூறிற்று.

## கைம்மாறுவேண்டாக் கருணை கூறியது

**மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற(து)**
**அன்ன ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு**
**முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை**
**உன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றில்லையே.**

ஆசிரியர் அடிக்கடி உலகவரை நோக்கி, 'அபிராமி பாதம் சேர்மின்கள்' என்கின்றாரே; நாம் சேர்வதால் அம்மைக்கு ஆவதொரு பயனுண்டோ என்னும் அறிவிலிகளை நோக்கிப் பேரொளியும் பேரானந்தமுமே தம் வடிவாயுள்ள பெருயாட்டிக்கு அடியார்கள் நினைத்தாலும் நினையாவிட்டாலும் ஆவது ஒன்றில்லை; நாம் வணங்குவது நம் பொருட்டே யாம் என்று அருளிச்செய்கின்றார்.

இ-ள்:— ஆயிரம் மின்னல்கள் ஒருங்கு திரண்டு ஒரு வடிவாகிய திருமேனியை யுடையாள்; சிவ ஞானியர்களுடைய சிந்தையை மகிழ்விக்கும் ஆனந்தவல்லி; வேதங்களின் முதலாயும் நடுவாயும் முடிவாயும் எங்குமாயும் இருக்கின்ற இறைவியை நீங்கள் தியானித்தாலும் தியானிக்காவிட்டாலும் அவளுக்கு ஆவதொரு பயனில்லை எ-ம்.

ஆயிரம் என்றது பன்மைகுறித்து நின்றது. 'மின்னாயிரம் மெய்வடிவாகி விளங்குகின்றது அன்னாள்' என்றது, அம்மையின் திருமேனிக்கு ஒருபுடை ஒப்புக் கூறியவாறு. வேதம் முழுதிலும்

பராசக்தி வியாபித்திருத்தலின் முதல் நடு இறுதி எங்குமாய் என்றார். 'ஆரணகாரி' என்ற தக்கயாகப் பரணியும் நோக்குக. எல்லாரும் இறைவியினிடமே குறைவேண்டி நிற்றலின், இறைவி யாரிடமும் ஒன்றும் வேண்டுவது இல்லை என்பது விளக்கப்பெற்றது.

## அருளின் அருமையை வியந்தது

**ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்**
**நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்றன் நெஞ்சினுள்ளே**
**பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவார்**
**அன்றா லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே. 56**

அபிராமி என் அகத்து நின்று அருள் புரிகின்றது என்ன அதிசயம். இவ்வுண்மை அறிபவர்கள் திருமாலும் சிவபெருமானுமே! வேறு யாருக்கும் தெரியாதென்று விளக்குகின்றார்.

இ-ள்:- ஒன்றாய்த் தோன்றியும், பலவாய் விரிந்தும், உலகங்களெல்லாம் வியாபித்தும் அதனினின்று நீங்கியும் நிற்கின்ற அபிராமி என் நெஞ்சுள் நின்று நீங்காது அருள்செய்கின்றவாறு என்னே! இவ்வுண்மையை ஆலிலையிற் பள்ளிகொள்ளும் பெருமாளும், சிவபெருமானுமேயறிவர். வேறு யார் அறியவல்லார்? எ-ம்.

ஒன்றாய் என்றது - பொது வகையான் நிற்கும் சமஷ்டி ரூபத்தை. சமஷ்டி - பொது உரு. பலவாய்

என்றது மனோன்மணி, உமை, நாராயணி முதலிய சிறப்பு வகையான் நிற்கும் ரூபங்களை. வியட்டி என்பது வேறு பிரிந்தது. எங்குமாய் என்றது இறைவியின் வியாபகத்தை உணர்த்துவது. அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்றது வேருய்நிற்கும் நிலையை உணர்த்தியது. இது "ஒன்ருய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு" என்ற திருவாசகத்தான் விளங்கும்.

## ஆளுமாறும் இவ்வாருே என்றது

**ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லாம்**
**உய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பால்**
**செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்**
**மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே. 57**

முப்பத்திரண்டு அறமும் செய்யும் உன்னை வழிபட்டும் கூட, ஒருவரிடம் சென்று பொய்யும் மெய்யும் புகலவைத்தனையே; இதுவா அருள்? என வினவுகின்ருர்.

இ-ள்:- ஏகாம்பரநாதர் அளந்துகொடுத்த இருநாழி நெல்கொண்டு உலகமெல்லாம் ஈடேற முப்பத்திரண்டு அறமும் செய்த முதல்வியாகிய உன்னைப் போற்றியும், செந்தமிழ்ப் பாமாலைகளைச் சுமந்து, செல்வர்பால் சென்று, பொய்யும் மெய்யும் புகல வைத்தாயே இதுவா உன்னுடைய உண்மை அருள்?

நாழி - அரைப்படி. ஒருவர் என்றது குறிக்கத் தக்க குணநலம் எதுவும் இல்லாதார் என்னும் இழிவு தோன்ற நின்றது. செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை என்றது, தமிழின் செம்மையும் பசுமையும் எல்லார் சிந்தையையும் கவர்வதாய் இருக்க, இவர் சிந்தை கொண்டிலதே! என்று இரங்கிக் கூறியவாறு. பொய் என்றது செல்வரிடம் இல்லாத குணங்களை. இஃது, எடுத்த இவ்வுடம்பின்கண் நுகர்ந்துகொண்ட பிராரத்வ வினைக்கு ஏற்குமாயினும் நின்கருணைப் பெருக்குக்கு ஏலாது என்பதாம்.

## புகல் இல்லை எனப் புகறல்

அருணாம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையனல் லாய்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமுங் கராம்புயமும்
சரணாம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே. 58

இதய கமலத்து எழுந்தருளியிருக்கும் அபிராமி தேவியினது கண் முதலிய தாமரைகளே எமக்குத் துணை என்று அறிவிக்கின்றார்.

இ-ள்:- செந்தாமரையிலும் அடியேன் மனத் தாமரையிலும் ஒப்ப வீற்றிருக்கும் அபிராமியே! நினது கருணைவழிகின்ற கண்தாமரையும், முகத் தாமரையும், கைத்தாமரையும், திருவடித் தாமரையும் அல்லாது வேறொரு துணைகாணேன் எ-ம்.

அருணம் - சிவப்பு. சித்தாம்புயம் என்றது இதயம் எட்டிதழ்த் தாமரையாக இருக்கின்றதை உள்ளிட்டு. அமர்ந்திருத்தல் - விரும்பி எழுந்தருளி இருத்தல். தருணம்புயமுலை - தாமரையின் அலரும் பருவத்து அரும்புபோன்ற தனம். தையல் - அழகு. தையல் நல்லாள் - பேரழகி அபிராமி. தகைசேர் நயனம் - அன்பர்களின் வினைப்பக்குவத்திற்கு ஏற்ப அருள்வழங்கும் தகுதிசேர்ந்த கண்கள்.

## குற்றம்பொறுக்க வேண்டுதல்

**தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே**
**நெஞ்சம் பயில நினைக்கின்றி லேனொற்றை நீள்சிலையும்**
**அஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்**
**பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே. 59**

புதல்வர் செய்த குற்றத்தைத் தாய் பொருட்படுத்தாமைபோல, அடைக்கலம் புகுந்த அடியேன் அறிந்தே குற்றம் செய்யினும் பொறுத்தருள வேண்டும் என்கிறார்.

இ-ள்:- பஞ்சபாணத்தையும் கரும்பு வில்லையும் திருக்கரத்தில் ஏந்திய அபிராமிதேவியே. திருவடி அல்லது புகலிடம் இல்லாமையை அறிந்திருந்தும் உனது தவநெறியில் பயில நினையேன். தாயர், தான்பெற்ற பிள்ளைகள் என்னதான் அறியாதவர்களாக இருப்பினும் தண்டிக்க மாட்டார்களல்லவா?

ஒன்றையே பற்றிநிற்க உள்ளம் துணிவது, துணையாவது வேறொன்று இல்லாதபோதே ஆக லின், ஈதல்லது தஞ்சம் பிறிதில்லை என்பதை முற் கூறினர். அப்படி அறிந்துவைத்தும் அறிவீனத் தால் இழந்த இரக்கம் தோன்ற தவநெறிக்கே பயில நினைக்கின்றிலேன் என்று பிற்கூறினர். அம்மை கரும்பு வில்லையும் மலரம்பு ஐந்தையும் ஏந்திப், போகத்திருவுள்ளம் பற்றிலளாயின் மன்ம தன் தொழிலும் அதன் காரணமாகிய போகமும் நிகழாது என்பது விளங்கச் 'சிலை அம்பு இக்கு அலராக நின்றாய்'' என்றார். அறிந்து செய்த குற்றத்தைப் பொறுத்தல் நூல் துணிபு அன்றா தலின் தாய்மையை எடுத்துக்காட்டி அம்மையைக் குறை இரந்தார் என்க.

## அருளை வியத்தல்

**பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க**
**மாலினுந்தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்**
**மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு**
**நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே. 60**

இறைவன் திருமுடிமீதும், பிரணவ பீடங்கள் நான்கிலும் விளங்குகின்ற நினது திருவடியை அடியேனது நாற்றத் தலைமீதும் நாட்ட எண்ணிய நல்லருள் இருந்தபடி என்னே என்று வியக்கின்றார்.

இ-ள்:- பாலினும் இனிய சொல்லையுடைய பராசக்தியே! பிரமவிஷ்ணுக்களும் வணங்க நிற்கும் சிவபெருமானது கொன்றைமாலை யணிந்த சடையைக் காட்டிலும், வேதங்கள் தோத்தரிக்கின்ற பிரணவபீடம் நான்கினும், திருப்பாதமலர் சூட்ட அடியேனுடைய நாற்றம்பொருந்திய நாய்த்தலையானது மிகமேலானதோ எ-ம்.

மால் இனும் தேவர் வணங்க நின்றோன் - திருமாலும், மற்றுமுள்ள தேவரும் வணங்க நின்றோன் எனவும், திருமாலைக்காட்டிலும் ஏனைத் தேவர்கள் வணங்க நின்றோன் எனவும் பொருள்படும். திருமால் அதிகாரமலத்தாற் கட்டுண்டு மயங்கிநிற்பவராதலின் தாமே தலைவரென்ற முனைப்பு ஒருகாலைக்கொருகால் எழும்; அதனால் வணங்கக் கூசுவன் ஆதலின் அதிகாரமலம்பற்றாத தேவர்கள் அதனினும் நன்கு வணங்குவர் என்றதாம். வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் - பிரணவபீடம்; அவை ஸ்தூலப் பிரணவம், சூக்குமப் பிரணவம், காரணப் பிரணவம், மகாகாரணப் பிரணவம்எனப் பீடம்நான்காம். இதனை 'ஸ்தூலப் பிரணவம்' என்னும் திருமந்திரத்தால் அறிக. பாதம்வைக்க, தலை சாலநன்றோ என முடிக்க. சிவபெருமான்வேண்டிச் சூடினர்; வேதங்கள் கிடைக்கப்பெறாமையால் நெடுநாள் முயன்று இளைத்துச் சூடின; அடியேன் தலைமீது தாமே சூட்டினீர்! இவற்றுள் எது சிறந்ததென்று வியந்தவாறு.

## இதுவும் அது

**நாயேனையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து**
**நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னையுள்ளவண்ணம்**
**பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்**
**தாயே மலைமக ளேசெங்கண் மாறிருத் தங்கைச்சியே. 61**

*அபிராமியே! தேவரீரே வலியவந்து ஆட்கொண்டு சிவஞானத்தைவழங்கியதால் யான்பெற்ற பேறு எத்தகைத்து என்று வியக்கின்றார்.*

*இ-ள்:- தாயே பார்வதி! திருமால் தங்கையே! நாயிற்கடையேனையும் ஒரு பொருளாகக் கொண்டு விரும்பி எழுந்தருளிவந்து என்னினைவு இல்லாமல் நீயே ஆண்டுகொண்டாய்; அம்மட்டோ? சொற்பதம் கடந்த உன்னை உள்ளவாறு அறியும் தன்மையையும் உதவினை, எத்துணைப்பேறுகளைப் பெற்றேன்.*

*நினைவின்றி ஆண்டுகொண்டாய் என்பது ஆன்மபோதம் அழித்துச் சிவபோதம் அளித்து ஆட்கொண்டாய் என்பதாம். இதற்கு அம்மை நினைவின்றி மறந்தாற்போல் ஆட்கொண்டதாக உரைப்பாரும் உளர். நினைப்பும் மறப்பும் கடந்து உலவா இன்பம் ஆன்மாக்களை மருவிக்கும் பெருமாட்டிக்கு நினைப்பின்றி ஆட்கொள்ளல் நேரிதாகாது. பேயேன் -பேயைப்போல மயக்கும் மயங்கும் அறிவினையுடையேன்.*

## சிந்தையிற்சிறந்த பொருள் தெரிவித்தல்

**தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத**
**வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்**
**கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்**
**செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே. 62**

அபிராமி அம்மையின் திருக்கரத்தில் உள்ள கரும்பு வில்லும் பஞ்சபாணமும் என் சிந்தையை விட்டு அகன்றது இல்லை என்று தெரிவிக்கின்றார்

இ-ள்:- பொன்வில்லைக்கொண்டு திரிபுரத்தை அழித்து, யானையை உரித்துப் போர்த்த வீரனாகிய சிவபெருமான் திருமேனியிலே கொங்கைக்குறியை இடுவித்த பெருமாட்டியே! நினது தாமரைபோன்ற திருக்கரத்தில் விளங்குகின்ற கரும்பு வில்லும் மலரம்பும் அடியேன் சிந்தையைவிட்டு அகன்றதில்லை எ-ம்.

இறைவனுடையவீரத்தைவிளக்க மேருமலையை வில்லாகக் கொண்டதும், யானையை உரித்ததும், ஆகிய இரண்டு நிகழ்ச்சிகள் தெரிவிக்கப்பட்டன. உரி - தோல்; தொழிலாகுபெயர். கோகனகம் - தாமரை. செஞ்சேவகன் - அறப்போர்புரியும்வீரன்.

## அறிவிலார்க்கு அழிந்தது

**தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்**
**கூறும் பொருள்குன் றிற் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமயம்**
**ஆறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்**
**வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 63**

அபிராமியின் பெருமையை அறிவீனர்க்கு உணர்த்துவது பாறையில் அடித்த முளைபோன்ற தாம் என்று அறிவீனர்கள் நிலையைக் கண்டு இரங்கிக் கூறுகின்றார்.

இ-ள்:- அகச்சமயம் ஆறுக்கும் இவளே முதல்வி என்று அறிந்திருந்தும், வேறும் மெய்ச் சமயங்கள் இருப்பதாக மனத்து எண்ணித் தடுமாறு கின்ற வீணர்களுக்கு வீடுபேறு நிமித்தம் ஏதுக் களோடு யாம்கூறும் உண்மைப்பொருள்கள் யாவும் பாறையில் அடித்த முளைபோல சிதறிக்கெடும் எ-ம்.

சமயம் ஆறும் என்னும் முற்றும்மையை எச்ச உம்மையாகக்கொண்டு ஆறுக்கும் அப்பாற்பட்ட தான சைவசித்தாந்தத்தையும் கொள்ளுக. சிவம் நிர்விகாரியாக இருப்பச் சிவசக்தியே எல்லாவற்றை யும் நிகழ்த்தும் என்பது சைவநூற்றுணிபு. வீணர் என்றது சிவத்தின் தன்மையையும் சிவசக்தியின் தன்மையையும் பொதுவகையான் அறிந்துவைத் தும் சிறப்புவகையான் அறியாது கன்மவயத்தான் குதர்க்கம்செய்யும் ஏகான்மவாதிகள் முதலியோரை. அவர்களுக்குக் கூறும் உண்மைப்பொருள், ஏதுக்

களாலும் எடுத்தமொழியாலும் ஐயமகற்றுவதா யினும், அவர்களுக்குப் பயன்படாமை நோக்கி 'குன்றிற் கொட்டும் தறிபோல' என்றார். கொட்டுதல் - அடித்தல். இவ்வுண்மையை வள்ளுவர் 'காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான் கண்டானும் தாம் கண்டவாறு' என்பர். ஆகவே பாச ஞானத்தையே உண்மை ஞானமெனக் கொண்டு மயங்கும் அறிவீனர்களுக்கு அருட்பராசக்தியின் உண்மைகளை உபதேசித்தலாகாது என்பதாம்.

### உள்ளத்து உறுதிகூறல்

**வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு**
**பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்**
**பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்**
**காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே. 64**

அபிராமிதேவியே! தேவரீருக்கு அன்புபூண்ட நான் பிறதெய்வம் பேணேன்; தரிசியேன்; புகழேன்; என்று அருளிச்செய்கின்றார்.

இ-ள்:- அபிராமிதேவியே! நின்னிடத்து அன்பு பூண்டமையால், ஊன்பலியை விரும்புகின்ற சிறுதெய்வங்களிடத்து அன்புபூணேன். தேவரீருடைய புகழ்ச்சியன்றி வேறொன்றையும் மனத்திற் கொள்ளேன். நினது திருமேனியின் ஒளியை அன்றி மண்ணிலும், விண்ணிலும், திக்குகளிலும் எங்கும் காணேன் எ-ம்.

பூணுவனவும் பேணுவனவும் காணுவனவும் எல்லாம் நின்தே என்பதாம். சிறுதெய்வங்களுக்கு உயிர்ப்பலி இடுதல் வீண் என்பதை 'வீணே பலி கவர் தெய்வங்கள்' என்றதால் விளக்கி அருளினர். எல்லா இடங்களிலும் அம்மையின் ஒளியே கண்ணைக் கவர்ந்து விளங்குகின்றது என்பார் 'திருமேனிப் பிரகாசமன்றி வேறொன்றையும் காணேன்' என்றூர். பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிற்பது அம்மையினது ஒளியே என்று அறிவித்தபடி.

## வல்லபம் வியந்தது

**ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கம்**
**தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்**
**முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்**
**மகனுமுண் டாயதன் ருேவல்லி நீசெய்த வல்லபமே. 65**

மாரனை எரித்த வீரனுகிய சிவபெருமானுக்கு அறுமுகக் குழந்தை ஒன்று அவதரிக்குமானல் உனது வல்லமையைப்பற்றி என்ன சொல்லுவது என்று வியக்கின்றூர்.

இ-ள்:- விண்ணிலும் மண்ணிலும் உள்ளவர்கள் அனைவரும் காணும்படியாக, மன்மதனுடைய உடலை விழித்தெரித்த யோகமூர்த்தியாகிய சிவபெருமானுக்கு ஆறுமுகமும் பன்னிருகைகளையும் படைத்த பேரறிவோடு கூடிய பிள்ளை தோன்றியது; அம்மையே! நீ செய்த வல்லபம் அல்லவா?

ககனம்-ஆகாயம். வானம்-சொர்க்கம். ஆகாயம் என்றது ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றவர்களாகிய முனிவர்களையும் கந்தர்வர்களையும் தேவர்களையும் காட்டிற்று. காண என்றது இவ்வளவுபேரும் சாட்சியாக நின்று அறிய என்பதாம். தவப்பெருமாற்கு என்றது பிள்ளைப் பேற்றுக்குக் காரணமாகிய போகியாய் இருக்கின்ற நிலை இல்லாதிருந்தும் என்றதை விளக்கியவாறு. மூதறிவின் மகன் என்றது ஆறுநாட் குழந்தையாய் இருக்கின்ற போதே போர்செய்த வீரமும் பிரணவப்பொருளை உபதேசித்த பேரருளும் நோக்கி. அம்மையின் வல்லமையினாலேயே இறைவன் யோகத்திருந்தும் அறுமுகக்குழந்தை உண்டாயிற்று என்பதாம்.

## பொருளின் உயர்வுபற்றிப் போற்றவேண்டியது

**வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்**
**பல்லவ மல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு**
**வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த**
**சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே. 66**

அபிராமிதேவியே! என்னுடைய சொல் குறைபாடுடையதாயினும் தேவி மந்திரங்களாதலின் தோத்திரமாதற்கு இழுக்கில்லை என்கின்றார்.

இ-ள்:- அபிராமியே! உன்னுடைய எல்லை இல்லாத வலிமைகள் ஒன்றையும் அறியேன். திருவடித்தாமரைகளை அல்லது வேறொன்றிலும் பற்றிலேன். மேருமலையை வில்லாகக்கொண்ட இறைவன்

இடப்பாகத்து எழுந்தருளி இருப்பவளே! அடியேன் தொடுத்த பாமாலை வீணாயினும் இதில் அங்கங்கு விளங்குவது நின் நாமமந்திரங்களே. ஆகையால், இவைகள் உனக்கு விருப்பமான தோத்திரங் களாகும் எ-ம்.

வல்லபம் ஒன்று அறியேன் என்பதற்கு, கல்வி கேள்விகளாலாய அறிவாற்றல் என்று உரைப் பாரும் உளர். மலரடிச் செம்பல்லவம் என்றது மலரின் மென்மையையும், தளிரின் நிறத்தையும் உடைய திருவடி என்றதாம். வீற்றிருத்தல் - பிறி தொன்றற்கு இல்லாத அழகோடு இருத்தல். தொடுத்த சொல் அவமாதற்குக் காரணம் வினை என்பது உணர்த்துவார், வினையேன் என்றார்.

### அடி நினையாதவர் அடையாளம் கூறுகின்றது

**தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் றோற்றமொரு**
**மாத்திரைப் போது மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்**
**கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடோறும்**
**பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67**

வாழ்த்தி, வணங்கித், தியானிக்காதவர்கள் குல முதல் நலமெல்லாம்கெட்டுப் பிச்சைக்கும் பேதுறு வர் என்கின்றார்.

இ-ள்:- தோத்திரம் செய்து, தொழுது, மின் னலைப் போல் ஒளிவிடுகின்ற உன்னுடைய தோற் றத்தை ஒருமாத்திரைப் போதாவது மனத்தில்

தியானிக்காதவர்கள், தங்களுடைய வளப்பமும், குலமும், கோத்திரமும், கல்வியும், குணமும் ஆகிய எல்லாங் குன்றப்பெற்றுக் குடிசைகள் தோறும் திருவோட்டைக் கையிலே சுமந்து தெருவிலே திரிவர் எ-ம்.

தோத்திரம் - மொழித்தொண்டு. தொழுதல் - மெய்த்தொண்டு. தியானித்தல் - மனத்தொண்டு. மாத்திரைப்போது - கண் இமைக்கின்ற அல்லது கை நொடிக்கின்ற கால அளவு. வண்மை - கொடை என்று உரைப்பாருமுளர். குன்றி, நாள்தோறும் அழிந்து குடில்கள்தோறும் உழலாநிற்பர் என்பார் இவர்கள் வினைத்தடிப்பு நிரம்ப அளிக்கும் மாளிகையையும் அரண்மனையையும் கிடைக்கவிடாது என்பதை எண்ணி உழலாநிற்பர் என்றார். குடிசைகளில் இடுவார் இலராவார் என்பதாம். 'ஆற்றோடு தும்பை அணிந்தாடும் அம்பலவாணர்தமைப், போற்றாதவர்க் கடையாளமுண்டே இந்தப் பூதலத்தில், சோற்ருவியற்றுச் சுகமற்றுச் சுற்றத்துணியுமற்று ஏற்ருலும் பிச்சை கிடையாமல் ஏக்கற்றிருப்பர்களே' என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கை உன்னுக.

## அணைந்தோர் தன்மை அறிவித்தது

**பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பும்**
**ஊரு முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்**
**சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே**
**சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே** 68.

தன்மாத்திரைகள் ஐந்திலும், அவற்றின் காரிய மாகிய பூதங்கள் ஐந்திலும் கலந்திருக்கின்ற தேவி யின் திருவடிக்கு அன்பு பூண்டார் எய்தாதன இல்லை என்கின்றார்.

இ-ள்:- எங்கும்பரவுகின்ற மணமும், சுவையும், ஒளியும், பரிசமும், சத்தமுமாகிய தன்மாத்திரைகள் ஐந்தினும், அவற்றின் காரியமாகிய மண், தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயமென்ற ஐம்பெரும் பூதங் களிலும் பொருந்த வியாபித்திருக்கின்ற தலைவி சிவகாமசுந்தரியாகிய அபிராமசுந்தரியே! நினது சீறடியில் சேரும் தவமுடையாரைச் சேராத தனம் ஒன்றும் இல்லை எ-ம்.

சென்ற திருப்பாட்டில், அபிராமியின் அடியை அடையாதார் எய்தும் இன்னல் கூறினார். இப் பாட்டில் அடைந்தார் எய்தும் இன்பம் கூறுகின்றார். சுவைமுதலான பஞ்ச தன்மாத்திரைகளினின்று மண்முதலான பூதங்கள் தோற்றுதலின் காரணத் திலும் கலந்து காரியத்திலும் கலந்திருக்கின்ற அம்மையின் வல்லபம் உணர்த்தியவாறு. அன்றிப் பார்முதலாயின கந்தம்முதலாயினவற்றோடு ஒன்றி இருத்தற்கு, தேவிசேர்ந்திருத்தலே காரணம்என்று உரைப்பாரும் உளர். அஃது ஆராய்தற்கு உரியது. காரணமாகிய தன்மாத்திரைகளில் தேவி சூக்கும மாகக் கலந்திருத்தலையும், காரிய பூதங்களில் தூல மாய்க் கலந்திருத்தலையும் உளங்கொளச் செய்வது இச்செய்யுள்.

## இம்மைப் பயன்கள் இவையென்றது

**தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா**
**மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா**
**இனந்தரும் நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே**
**கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. 69**

*அபிராமிதேவியினது கடைக்கண்கள் எல்லா இன்பங்களையும் கொடுக்கும் என்று அருளுகின்றார்.*

*இ-ள்:— மேகத்தைஒத்த கரிய கூந்தலையுடைய அபிராமிதேவியினது கடைக்கண்கள்; தமது அடியார்களுக்குச் செல்வம்தரும். கல்விதரும். தளராத மனத்தைத்தரும். ஒளியோடு கூடிய தெய்வவடிவத்தைத்தரும். சூது இல்லாத சுற்றத்தையும், சூழலையும் கொடுக்கும். பிறநலங்களையும் கொடுக்கும் எ-ம்.*

*பொருளின் இன்றியமையாமையைக் குறிக்கத் தனந்தரும் என்பது முற்கூறப்பட்டது. அப்பொருளைத் தக்கவழியில் செலவிட்டுப் பாதுகாக்கும் பண்பிற்கு இன்றியமையாதது கல்வியாதலின் அதனைச்சாரக் கூறப்பெற்றது. செல்வமும் கல்வியும் இருப்பினும் காற்றாடிபோல ஒரு நிலையில் நில்லாது மனம் சுழல்வதாயின், பயன் சிறிதும் இல்லை என்பது உணர்த்த தளர்வறியா மனம் அடுத்துக் கூறப்பெற்றது. மனம் உறுதி நிலைத்த இடத்திலேயே தெய்வ ஒளி தோன்றுவதாதலின்*

11

அதனை அடுத்துத் தெய்வவடிவு கூறப்பெற்றது. தன்னலமும் இனப்பற்றும் சழக்குரையும் கொண்ட தீயோர் இனத்தால் எல்லாம் கெடுமாதலின் இறுதியாக வஞ்சமில்லா இனம் தரும் என்பது கூறப்பெற்றது. சிற்றறிவுடைய ஆன்ம இயற்கையில் உணர்ந்தனவாகிய இவை போக, உணரப்படாத இன்பங்களும் பலஉள; அவற்றை அறிந்து ஊட்ட வல்லவள் அவளே என்பார் எல்லாம்தரும் என்றார். அம்மையின்கொடை அவள்கடைக்கண்மீது ஏற்றிக் கூறப்பெற்றன; கருணைக்கு இருப்பிடம் அது வாதலின்.

## காட்சியிற்களிதல்

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அபிராமசுந்தரியின் அழகைக் கண்களிக்கக் கண்டேன் என்கின்றார்.

இ-ள்:- கடம்பவனத்தில் இனிய இசையாற் கனிந்தகுரலோடு ஒக்க எழுகின்ற வீணையும் அதனை ஏந்திய திருக்கரமும் தனங்களும் மண்ணுலகமுழுவதும் களிக்கச்செய்யும் பச்சை நிறமுமாக மதங்கர் குலத்தில் அவதரித்த பெருமாட்டியின் பேரழகைக் கண்களிக்கும்படிக் கண்டுகொண்டேன் எ-ம்.

படிப்பார்மனப்படத்து ஓவியம்தீட்டும் ஆசிரியர் கடம்பாடவியை எழுதிவீணை எழுதி வீணை ஏந்திய கைகளை எழுதி கைகளின் நடுவில் தனங்களை எழுதி திருமேனிமுழுதும் பச்சை நிறத்தால் தீட்டி மதங்கர் குலப் பெண்ணாக எல்லாரையும் தியானிக்கச் செய்கின்ற உபதேசமுறை அறிந்து இன்புறற்குரியது தான் கண்டு கொண்டேன் என்பது ஆன்மாக்களாகியநீங்களும் காணுங்கள் என்னும்குறிப்பினது.

## துணை இருக்கத் துன்பம் ஏன்? என்றது

**அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்**
**பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்**
**குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க**
**இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென்குறையே 71**

எல்லாவகையினும் உயர்ந்த அபிராமிதேவி துணை இருக்க, உனக்கு என்னகுறை? என்று நெஞ்சைப்பார்த்துக் கூறுகின்றார்.

இ-ள்:- பிறந்ததன்பயனை இழந்து வருந்துகின்றமனமே! அழகுக்கு ஒருவரும் ஒப்பாகாத பொற்கொடியும், வேதங்களில் பழகுதலால் சிவந்த திருவடித்தாமரை உடையவளும், இளம்பிறையை முடிக்கு அணிந்த அழகிய சாமளவர்ணத்தையுடையவளும் ஆகிய அபிராமிதேவியார் துணையிருக்க, உனக்கு என்னகுறை. இரங்காதே எ-ம்.

அருமறைகள் பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் என்பது வேதங்கள் பாதுகையாக இருந்து வருகையினலே சிவந்த பாதங்கள் என்பாரும் உளர். வேதங்கள் காடின்யமாகையினலே அதிற் பழகிச் சிவந்த என்றுமாம். வேதங்கள் சிலம்புகளாக இருக்கையினலே சிவந்த பாதங்கள் என்பதே சிறப்புடைத்து. சக்தனுக்கு உரிய பிறைமுடி சக்திக்கும் கூறப்பட்டது காண்க. பதாம்புயத்தாளாகிய கொம்பிருக்க உனக்குக் குறை என் இரங்கேல் எனக் கூட்டுக.

## குறைகாணும் குறிப்பொடு கூறல்

**என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கின்**
**நின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்**
**மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்**
**தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.72**

திருவடித்தாமரையைத் துதிப்பது என்கடன் யான் மீண்டும் பிறந்தால் அது யார்குறை? என்று அருளுகிறார்.

இ-ள்:- பெரிய ஆகாயத்திலே விளங்குகின்ற மின்னலும், ஒளியாலும் உருவாலும் குறைந்ததென்று காட்டி மெலிகின்ற இடையையுடைய அபிராமியே! இறைவன் தம்முடைய குறை நீங்கத், தனது சடைமேல் வைத்துக் கொண்ட

திருவடித்தாமரையை என்னுடைய குறைநீங்க யான் துதிக்கின்றேன். யான் மீண்டும் பிறந்தால் அது நின் குறையேயன்றி, யாருடைய குறையாகும்.

என்குறை-திருவடியை இவன் தொழவில்லையே என்கின்ற குறை. நின்குறை - வீடு பேறு அளியாத குறை. மின்குறை காட்டி - ஒளிச் சிறுமையாலும் தோன்றி உடனே மறைதலாலும், பருமனாலும் உண்டான குறை. தன் குறை - மாற்றாளாகிய கங்கைக்குத் தலையை இடமாகக் கொடுத்த குறை. இறைவியின் குறையானது மாற்றாள் மறைந்த, சடையின்மேல் உமைதத்தலால் நீங்கிற்று என்பதாம்.

## தியானமுறையைத் தெரிவித்தது

**தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பு**
**யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த**
**சேமந் திருவடி செங்கைக ணான்கொளி செம்மையம்மை**
**நாமந் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே. 73**

அபிராமிதேவியைத் தியானிக்கும் முறையும், காலமும், அடையும் பேறுகளும் அறிவிக்கின்றார்.

இ-ள்:- மாலை கடம்பு. படை மலர்ப்பாணம். வில் கரும்பு. வணங்கும்பொழுது வைரவர் வணங்கக் கூடிய அர்த்தயாமம். எங்களுக்காக வைத்திருக்கின்ற சேமநிதி திருவடிகள் செங்கைகள் நான்கு.

திருமேனியின் நிறம் செம்மை. பெயர் திரிபுரை. கண்கள் மூன்று. இவை அம்மைக்குரிய தியான முறையாம் எ-ம்.

பொழுது யாமமென்றது எல்லாம் ஒடுங்கி நிற்கும் திருவடி தீக்ஷைக்கு உரிய காலம் அது வாதலின்.

## மறுமைப்பயன் அறிவித்தது

**நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்**
**அயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்**
**பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொன்**
**சயனம் பொருந்து தமனியக் காவினிற் றங்குவரே. 74**

அபிராமியினுடைய திருவடியை வணங்குவதே பிறவிப்பயன் என்று கொண்டவர்கள் மறுமையில் இந்திரபோகத்தை எய்துவர் என்கின்றார்.

இ-ள்:- முக்கண்ணராகிய சிவபெருமானும், வேதங்களும், திருமாலும், பிரமனும் வழிபடுகின்ற அபிராமவல்லியின் திருவடித்தாமரைகளை வாழ்க்கைப் பயன் என்று கொண்டு வழிபடுகின்ற அடியார்கள்; மறுமையில் இந்திரராக அரம்பையர் ஆடவும், பாடவும், பொற்சயனத்தின்கண்ணே இருந்து போகிகளாய்க் கற்பகச்சோலையில் தங்குவார்கள் எ-ம்.

ஆசிரியர் இக்கருத்தை வலியுறுக்க அடுத்த பாட்டில் 'தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில்' என அனுவாத முகத்தால் கூறுதல் காண்க. அன்றித் தங்குவரே என்ற ஏகாரத்தை வினைப்பொருளில் கொண்டு இந்திரபதவி ஒரு பொருளாகாமையின் 'கொள்ளேன் புரந்தரன் மால் அயன்வாழ்வு குடி கெடினும்' என்றதை உட்கொண்டு தங்கார் என்று உரைப்பாரும் உளர். அது ஆசிரியர் கருத்தன்மை காண்க. அன்றியும், கட்டளைக்கலித்துறை இறுதி ஏகாரத்தான் முடியும் என்ற விதியும் அவ்வேகாரம் ஈற்றசையாயே இருக்குமென்ற வழக்காறும் மாறு படல் காண்க.

## சிந்திப்பவர்கள் சேர்கதி கூறியது

**தங்குவர் கற்பக தாருவி னீழலிற் றாயரின்றி**
**மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்**
**பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்**
**கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே. 75**

அவ்வாறு இந்திரபோகம் அடைவதே அன்றி, அதிபரிபக்குவிகளாகிய அடியார்கள் பிறப்பறுத்து வீடும் பெறுவர் என்று அருளுகின்றார்.

இ-ள்:- பெரிய மலைகளையும், உவர்க்கடலையும், பதினான்கு உலகங்களையும் பெற்ற அபிராமிதேவி யின் திருமேனியைத் தியானிப்பவர்களுள் கற்பக

விருக்ஷத்து அடியில் தங்குவார் ஒழிய, அதிதீவிர பக்குவிகளாகிய ஞானிகள் இடையறாது வருகின்ற பிறவியை நீக்கித் தமக்கொரு தாய் இல்லாமலே செய்துகொண்டு, தற்போத மிழந்து, திருவடிக் கண்ணேயே இருப்பர் எ-ம்.

இப்பாட்டில் காமியப்பயன் கருதும் அன்பர்கள் வழிபாட்டிற்கு இந்திரபதவியையும், ஞானிகள் செய்யும் நிஷ்காமிய வழிபாட்டிற்குப் பிறவி யறுத்துப் பேரின்பம் அருளலுமாகிய பயன்கள் அருளப்பட்டன. உந்தி - வயிறு. கொங்கு இவர் பூங்குழலாள் - மணம் மிக்க பூவை அணிந்த கூந்தலை உடைய அபிராமிதேவி. குறித்தவர் - உள்ளக் கிழியின் உருவெழுதி உயிராவண்ணமிருந்து உற்று நோக்குவார்.

## தான் அடைந்தபேறு கிளத்தல்

குறித்தேன் மனத்தினின் கோலமெல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றைமெ
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. [ய்யில்

அம்மையே! தேவரீரை இடைவிடாது தியானித்ததால் இயமன் வருகின்ற வழியையே அடைத்து விட்டேன் என்கின்றார்.

இ-ள்:- வண்டுகள் கிண்டுதலால் நறுந் தேன் ஒழுகுகின்ற நல்ல கொன்றைமாலை அணிந்த செஞ்சடைப் பெருமானது இடப்பாகத்தை அவருடைய திருமேனியிலிருந்து பறித்துக்கொண்டு, அதிற் குடிபுகுந்த, பஞ்ச பாணங்களைத் தரித்த பைரவியே உம்முடைய மேனி அழகு எல்லாவற்றையும் மனத்தில் தியானித்தேன். தேவரீரது திருவுள்ளக் குறிப்பை அறிந்துகொண்டு யமன் வருகின்ற நேர்வழிகளை அடைந்துவிட்டேன் எ-ம்.

'கோலம் எல்லாம்' எல்லாம் என்பது எஞ்சாமைப் பொருட்டு. குறிப்பறிந்து - கடைக்கண் நோக்கும், கருணைமுகமும், அஞ்சலென்றசொல்லும், அபய அத்தமும் முதலாகிய குறிப்புகளை அறிந்துகொண்டு. மெய்யிற் பறித்து என்றது இறைவனுக்கு உள்ள உரிமையையே வன்மையாகப் பிடுங்கிக்கொண்டு என்பதால் இறைவனின் வல்லபம் வெளிப்படுத்தப் படுகின்றது. தில்லை, திருக்கடவூர், காசி இம் மூன்று தலங்களிலும் இறந்தார்க்கு இயமவாதனை இல்லையென்பதும், அவர்கள் பாவிகளாயின் பயிரவரது திரிசூல முனையில் ஒரு கணப்பொழுது வருந்துவதே தண்டனை என்பதும் நூல் துணிபு ஆதலின் அபிராமி பயிரவரின் அருட்சத்தியாக இருக்கின்ற நிலையை அகத்துக்கொண்டு, 'பயிரவியே'! என்று அழைத்து, மறலி வருகின்ற வழி மறைத்தேன் என்கின்றார். 'நமனை அஞ்சோம்' என்ற அப்பர் அருள் வாக்கையும் ஈண்டு நினைவுறுக.

## திருப்பெயர்சொல்லி விருப்பமிகுத்தது

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

வேதத்தில் சொல்லப்பட்ட நாமங்கள் இவை என்று அருளுகின்றார்.

இ-ள்:- வேதத்தில் உள்ள பயிரவி முதல்வராகி ஈறாகச் சொல்லப்பட்ட பதினொரு திருநாமங்களைச் சொல்லி அடியார்கள் துதிப்பார்கள் என்கின்றார்.

பஞ்சமி - எங்கும் வியாபி, ஐந்து திருமுகங்களுடைய சதாசிவ மூர்த்தியின் சக்தி என்றுமாம். வஞ்சர் உயிரவி உண்ணும் சண்டி - வஞ்சகர்களாகிய மகிடன் போன்றார்களது உயிரை உணவாகக் கொள்ளுகின்ற கோபத்தையே வடிவமாக உடையாள் காளி - கருநிறம் பொருந்தியவள். ஒளிரும் கலா வயிரவி - ஞானப்பிரகாசத்தைச் செய்கின்ற கலைகளாகிற வயிர மேகலையை உடையவள். மண்டலி - ஒளி மண்டலங்களைத் தனக்கு உறைவிடமாகக் கொண்டவள். மாலினி - மாலையைத் தரித்தவள். செயிரவி நான்மறை - குற்றங்களை அவித்து ஒடுக்குகின்ற நான்கு வேதங்கள்.

## அனுவபங்காட்டி அறிவுறுத்தியது

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென் றனவிழிக்கே. 78

அபிராமிதேவியினது திருமுகத்தில் விளங்கும் முத்துக் கொப்பும், வயிரத்தோடும், கடைக்கண் நோக்கும், புன்னகையும் அன்றி வேறொன்றும் கண்களிற் படுவதில்லை என்று அருளுகின்றார்.

இ-ள்:- கிண்ணத்தையும், பொற் கலசத்தையும் போன்ற திருமுலையின்மேல் கலவைச் சந்தனத்தை அப்பிய அபிராமவல்லியினது திருமுகத்தில் தொங்குகின்ற முத்துக் கொப்பையும், வயிரத் தோட்டையும், கருணையால் மதர்த்த கடைக்கண்ணையும், பவளம் போன்ற செவ்வாயையும், அதில் விளங்குகின்ற புன்னகையினையும், என்கண்களில் எழுதிவைத்துக்கொண்டேன் எ-ம்.

விழிக்கே எழுதிவைத்தேன் என்றது அடியேன் கண்கள் அவற்றைத் தவிர எவற்றையும் பற்றுவது இல்லை என்பதாம். நீங்களும் அவ்வாறு செய்யுங்கள் என்று அறிவித்தவாறு.

## கருணைகண்டு கயவரை வெறுத்தல்

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

அபிராமியின் அருள் இருக்க கீழ்மக்களோடு நமக்கு என்ன சகவாசம் என்று கொள்ளக் கடவதும் தள்ளக்கடவதும் விதிக்கின்றார்.

இ-ள்:- அபிராமவல்லியின் வழியருள் இருக்கிறது. வேதவிதிப்படி வழிபட மனமும் இருக்கிறது. அவ்வழிகள் கிடக்க பழிகளிலே அழுந்தி, பாவங்களையேசெய்து, நரகக் குழியிலேயே விழுந்து கிடக்கும் கீழ்மக்களோடு நமக்கென்ன சகவாசம் எ-ம்.

தவத்துணை இருக்க அவத்துணை யேன் மேற்கொள்ளவேண்டும் என்பதாம். இத் திருப்பாடல் கேட்டவுடன்தான் அபிராமியம்மை அருள்செய்தாள் என்ற வரலாறு காணப்படுதலால் சிவஞானிகளின் சிந்தைநிலை அறியாத கயவரோடு உறவு என்ன என்று வெறுக்கின்றார். இவர் நிலை அறியாது இழித்துக்கூறிய ஒரு கூட்டத்தாரை உளக்கொண்டு எழுந்த உரை இது.

## ஆனந்தக்களிப்பு

**கூட்டிய வாவென்னைத் தன்னடியாரிற் கொடியவினை**
**ஓட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணம்**
**காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா**
**ஆட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே.** 80

*அபிராமியின் அனுக்கிரகத்தைப் பெற்ற ஆசிரியர், இருளை ஒளியாக்கிய ஆசிரியர் அபிராமி ஆட்கொண்டமையால் வளைந்த ஆனந்தத்தால் களிப்புற்று வியக்கின்றார்.*

**இ-ள்:-** *பொற்றாமரை மலரில் வீற்றிருக்கின்ற அபிராமிதேவி அடியார்கள் கூட்டத்துள் என்னை ஒருவனாக்கியதும், இருவினைகளை ஓட்டியதும், என்னிடத்து விரைந்து ஓடிவந்ததும், தன்னுடைய உண்மை வடிவத்தை நனவிலேயேகாட்டி அருளியதும், கண்ட என் கண்களும் மனமும் ஆனந்தக் கடலில் மூழ்குவிப்பதுமாக அடியேனை திருவருள் நாடகம் நடிக்கவைத்துவிட்டாள். என்னே வியப்பு எ-ம்.*

*அடியார்கூட்டத்துச் சேர்ந்தமையால் கொடிய வினை வலி ஒழிந்து விலகுமாதலின் அதனை முன்னும், வினையை ஓட்டியது பின்னுமாக உரைக்கப்பட்டது. பள்ளம் புகும் புனல்போல் வினை ஒழிந்த உள்ளத்து அம்மை விரைந்து எழுந்தருளுவள் ஆதலின் என்கண் ஓடியவா என்றார். பொறிக்காட்சிக்குப் புலப்படாத அம்மை, அருள்*

மிகுதியால் காட்டி அருளினமையை உள்ள வண்ணம் காட்டியவா என்றார். முதலிற் களிப்பது கண்ணும் அது சென்று உணர்த்தியவழிக் களிப்பது மனமும் ஆதலின் அம்முறைபற்றி வைக்கப்பட்டது. அம்மையின் அருள் வெள்ளம் இழுக்க அதன்வழி அலைப்புண்பவர் ஆதலின் ஆட்டியவா என்றார். நடமாட்டியவா என்பதனை ஆசிரியர் வரலாற்றோடு ஒட்டி எனக்கு அருள் வழங்கத் திருவுள்ளங்கொண்ட நீ அதற்காக இந்த நாடகத்தை ஆட்டிவைத்தாய் என்று உரைப்பாரும் உளர். சென்ற பாடலில் கருணைபெற்றதாய அநுபவம் இப்பாடலில் அறிவிக்கப்பெறுதல் காண்க.

## தன்வசமற்றமை சாற்றியது

**அணங்கே யணங்குகள் நின்பரி வாரங்க ளாகையினல்**
**வணங்கே னொருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ**
**டிணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்**
**பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே.81**

அபிராமிதேவியே! நின்னையும் நினது அடியாரையும் நின் அருள்வழியினின்று வணங்குவதல்லது வஞ்சகர் கூட்டுறவு கொள்ளேன் என்று அருளுகிறார்.

இ-ள்:- அபிராமிதேவியே! சக்திகள் நினது பரிவாரங்களாகையால், அவர்களை வணங்கவும் செய்யேன். வஞ்சகரோடு கூடேன் 'என்னுடையன யாவும் உன்னுடையனவே; எனக்கு ஒரு சுதந்திர

மில்லை' என்று இருக்கின்ற மெஞ்ஞானியரோடு மாறுபடேன். எனக்கு என்று ஒரு அறிவுமில்லை. எல்லாம் அடியேனிடத்து நீ வைத்த அருட் பெருக்கே எ-ம்.

**கங்கையுள் மூழ்கிய ஒருவன் கூவத்துள் குளிக்க விரும்பாதவாறுபோல** மற்ற சக்திகள் யாவும் உன்னுடைய திருவருள் விலாசத்தைச் சிறிதே பெற்று அருள் செய்வன ஆகலின் உன்னை வணங்கிய எங்களுக்கு அவர்களை வணங்கத் தேவையில்லை என்பதாம்.

எனது உனது என்று இருப்பார் சிலர் என்பதற்கு - எனது உனது என்று உரிமை பாராட்டி இருக்கும் உலகவர் என்றும் உரைக் கலாம். மிகுந்த உரிமையால் விளைவது பிணக்க மாதலின் உரிமை தனக்கில்லை என்பார் பிணங் கேன் என்றார்.

## ஆனந்தத்தழுந்தியது

**அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்**
**ஒளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுதொறும்**
**களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு**
**வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே. 82**

அபிராமியே! நின் திருவடியை இடைவிடாது தியானிக்குந்தோறும் கருவி கரணங்கள் கழன்று

பேரின்பம் மிகுவதால் அருள் உபாயத்தை மறப்பது எங்ஙனம் என்கிறார்.

இ-ள்:- வண்டுகள் மொய்க்கின்ற தாமரையில் எழுந்தருளியுள்ள அம்மையே உலகமுழுவதும் உன் ஒளியாகவே காணப்படுகின்ற திருமேனியை தியானிக்குந்தோறும் மனம் முதலிய அந்தக்கரணங்கள் களிப்பாகி, விம்மித், தத்துவக் கலைகள் எல்லாவற்றையும் தாண்டிப் பரவெளியாய்விடுமானல் இவ்வாறு அருள்செய்யும் உமது உபாயத்தை யான் எவ்வாறு மறப்பேன்.

அளியார் கமலமென்றது தாமரை என்ற பொதுமைநோக்கி. அளி - வண்டு. விம்முதல் - உண்டான களிப்பு அந்தக்கரணங்களின் அளவைக் கடந்து இருத்தலால் பொருமுதல். கரை என்றது ஈண்டு ஆனந்தானுபவத்திற்குத் தடையாய் இருந்த தத்துவச் சூழலே. வெளி - அதீதமாகிய பரவெளி.

## இறைவியைவணங்குவர் இந்திரராவார் என்றது

**விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமலம்**
**இரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்**
**பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியும்**
**உரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே.** 83

இ-ள்:- உன்னுடைய திருவடித்தாமரைகளில் அன்றலர்ந்த பூக்களை இட்டு, இராப்பகலாக வணங்க வல்லார், தேவர்களால் தொழப்படுகின்ற பதவி

யையும், அதற்கு அடையாளங்களாகிய ஐராவதத்தையும், தேவகங்கையையும், வலிய வச்சிராயுதத்தையும், கற்பகச் சோலையையும் உடையவர்கள் ஆவார்கள் எ-ம்.

வல்லார் உடையவர் என முடிக்க. அன்றி, உடையவரே வல்லார் எனக் கூட்டி, இந்திர பதவியை என்றும் நீங்காது பெறுபவர்களே இறைஞ்ச வல்லவர்கள் எனவுமாம்.

## பெற்ற பெருவளம் பெறுர்க்கு அறிவுறுத்தியது

**உடையானை யொல்குசெம் பட்டுடை யாளை யொளிர்மதிச்செஞ்**
**சடையாளை வஞ்சகர்நெஞ் சடையாளைத் தயங்குநுண்ணூல்**
**இடையாளை யெங்கள்பெம்மானிடையாளை யிங்கென்னையினிப்**
**படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84**

இ-ள்:- அடியேனை அனுதியே அடிமையாக் கொண்டவரும், செம்பட்டாடை யுடுத்தியவரும் பிறையை அணிந்த சடையை உடையவரும், வஞ்சகர் மனத்தில் அடையாதவரும், விளங்குகின்ற நூல் போன்ற இடையை உடையவரும், சிவபெருமானது வாமபாகத்து விளங்குபவரும், அடியேனை அவனிக்கண் மீண்டும் படையாதவரும், ஆகிய அபிராமிதேவியை உங்களையும் மீட்டும் படைக்காத வண்ணம் தியானித்துக்கொண்டே இருங்கள் எ-ம்.

உடையாள் - பராசத்தி; 'உடையாள் உன்றன்' திருவாசகம். ஒல்குதல் - மென்மையால் அசைதல். செஞ்சடையாள் என்றது செஞ்சடையானது சக்தி என்றே உணர்த்திற்று; அன்றி அம்மைக்குச் செஞ்சடை உண்டென்பது கருத்தன்று. வஞ்சகர் நெஞ்சு, அழுக்காறு அவா வஞ்சம் முதலிய அழுக்குச் செறிதலின் அங்குப் பொருந்தாள் என்பதை விளக்கிநின்றது. நுண் நூல் தயங்கு இடையாள் என மாற்றுக. இடை என்பது இடப் பொருளை உணர்த்திநின்றதோர் பெயர்ச்சொல். இடை - இடப்பக்கமும் ஆம். இச் செய்யுள் சொற் பின் வருநிலை அணி.

## உருவெளித்தோற்றம் உரைத்தது

**பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்**
**டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாம்**
**தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடையும்**
**வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே. 85**

பார்க்கின்ற இடங்களிலெல்லாம் பயிற்சி வயத்தான் அம்மையும், அவள் அவயவங்களுமே தோன்றுகின்றன என்று அறிவிக்கின்றார்.

இ-ள்:- அடியேன் பார்க்கும் திசைகள் தோறும் என்னுடைய துன்பங்களையெல்லாம் போக்குகின்ற அபிராமிதேவியினது திருமேனி யும், அதன் ஒரு கூறாகிய இடையும், தனங்களும்,

தனத்தின்மேல் விளங்கும் முத்துமாலையும் பாசாங் குசங்களும், புதுமலராகிய புஷ்ப பாணங்கள் ஐந்தும், கரும்பு வில்லுமே காட்சியளிக்கின்றன.

அன்பு மிகுதியால் இடைவிடாது தியானிப் பவர்களுக்குத் தியானப்பொருள் திரும்பும் திசைகள் தோறும் காணப்படுமாதலின் அம்மையைத் தியா னிக்கும் ஆசிரியர் தம் அநுபவத்தைக் காட்டி, அதனால் தியானிக்கின்ற நம்மவர்க்கும் தியான சாதனையின் அளவை அறிவிக்கின்றார்.

### உற்றகாலத்து உதவ வேண்டுதல்

**மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற**
**காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு**
**வேலைவெங்காலனென்மேல்விடும்போது வெளிநில்கண்டாய்**
**பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86**

திருவடியையும் திருக்கரத்தையும் கொண்டு காலன் வரும்போது காட்சி வழங்கவேண்டும் என்கின்றார்.

இ-ள்:- பால், தேன்பாகு இவற்றை ஒத்த மொழியினையுடைய அபிராமிதேவியே! பிரம விஷ்ணுக்களும் வேதங்களும் தேவர்களும் தேடும் படியாகநின்ற திருவடியையும், சங்கு வளையல்களை அணிந்த கையையும் தாங்கிக் காலன் சூலத்தை என்மேல் ஏவுகின்ற காலத்து என்முன் வெளிப்பட வேண்டும் எ-ம்.

அகப்படுதற்கு அரிய கரத்தையும் காலையும் கொண்டு வரவேண்டும் என்றதால் என்மீது மிகுந்த இரக்கம்காட்டவேண்டும் என்கிறார். கதித்த-மேலோங்கிய. கப்புவேலை - திரிசூலப்படை. உடலுக்கு உணவாகியும் மருந்தாகியும் உள்ள பாலை முன்னும், அறிவு விளக்கத்தையும் இதய வன்மையையும் தரும் தேனை அதன்பின்னும், சுவையான் மிக்குப் பொறி இன்பந்தரும் பாகை இறுதியிலுமாக அம்மையின் மொழிக்கு உவமித்தார். அம்மை ஆன்மாக்களுடைய பக்குவ நிலைகளுக்கு ஏற்ப உடற்சுவையும் உணர்வுச் சுவையும் பொறிச் சுவையும் பணிக்கின்றாள் என்பதாம். பணிமொழி - வினைத்தொகை. இயமனை உதைத்தற்குக் காலையும், அபயம் அளித்தற்குக் கையையும் கொண்டு வர வேண்டுமென்று வேண்டினார்.

## எளிவந்த கருணைக்கு இரங்கல்

**மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்றிரு மூர்த்தியென்றன்**
**விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை**
**அழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்**
**பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே. 86**

மனம் வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்ட அம்மையின் திருமேனி ஊனக்கண்களுக்கும் வெளிப்பட்டமையை வியக்கின்றார்.

இ-ள்: நெற்றிக்கண்ணால் மன்மதனை அழித்த சிவபெருமானது அழியாத விரதத்தையும் அழித்து

உலகம் எல்லாம் பழிக்கும்படி, இடப்பாகத்தைக் கொண்டு ஆட்சிசெய்கின்ற பராசத்தியே! வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத தேவரீருடைய திருமேனியானது, என்னுடைய ஊனக்கண்ணிற்கும் சிற்றறிவாற் செய்யப்படும் வந்தனை வழிபாட்டுத் தொழிலுக்கும் வெளிப்பட்டுநின்றது. இது என்ன வியப்போ. இத்தகைய உயர்ந்த திருமேனி ஒன்றற்கும் பற்றாத எளியேற்கும் வெளிவந்தது வியக்கற்பாலது எ-ம்.

தலைவர் அழியாவிரதம் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிய யோகநிலை. ஒருபாகங்கொண்டு ஆண்டது போகியாக ஆக்கியது.

## விடுதல் கூடாது என வேண்டுதல்

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பத்தருக்குள்
தரமன் றிவனென்று *தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன் றுசெற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே. 88

உன்னையே பரம்பொருள் என்று அடைந்தேன்; ஆதலால் தகாதவன் என்று தள்ளிவிடவேண்டாம் என்று வேண்டிக்கொள்ளுகிறார்.

இ-ள்:- திரிபுரங்களை எரிக்க மலைவில்லை வளைத்ததும், பிரமன் சிரத்தைக் கொய்ததுமாகிய திருக்கரத்தையுடைய சிவபெருமானது இடப்பாகத்தில் எழுந்தருளி இருப்பவளே. உன்னையே

பரம்பொருள் என்று எண்ணி அடைந்தேன். உன் அடியார்களுக்குள் 'இவன் தகுதி அற்றவன்' என்று தள்ளுதல் உமது தகுதிக்கு அடாது எ-ம்.

தரம் - தகுதி. தரியலர் - பகைவரான அவுணர் கள். வில்வாங்கியகை செற்றகை என தனித் தனிக் கூட்டுக.

## இறக்கும்பொழுது எளிது எய்தவேண்டல்

**சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்**
**துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற**
**உறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு**
**மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே.**

உடம்பொடு உயிருக்கு உண்டான நட்பு அற்றுப்போகின்றகாலத்துத் துரியாதீத சிவானந்த நிலையைத் தரத் தோன்றவேண்டும் என்கின்றார்.

இ-ள்:— பூக்களுள் சிறந்த கமலத்து வீற்றிருக் கும் திருமகளே! உயிரும் உடலும் உறவு அற்று அறிவும் மறந்துபோகின்ற அக்காலத்துச் சுவர்க் கத்தை அருளுகின்ற நின்கணவராகிய சிவ பெருமானும் நீயுமாகப் பாதமலர் சூட்டவும், துரியங் கடந்த சுகானந்த நித்திரையை நல்கவும் என் முன்னே வருதல்வேண்டும் எ-ம்.

சிறக்கும் கமலம் என்றது 'பூவினுக்கு அருங் கலம் பொங்கு தாமரை' ஆதலின். வைக்க, தர,

வரல் வேண்டுமென முடிக்க. துரியமற்ற உறக்கம் - சிவானந்தத்து அழுந்தி இருக்கின்ற அநுபோகாதீத உறக்கம். மறக்கும்பொழுது வரல்வேண்டும் என்றதால், வரின் மறவாமலே உயிர் உடம்பை விட்டு நீங்கும் என்பது குறிப்பிடப்பெற்றது.

## எய்தாத பொருள் இல்லை என்கின்றது

**வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்**
**திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்**
**பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு**
**விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. 90**

அமரர்களுக்கு அமுதத்தைப் பங்கிடுகின்ற அபிராமிதேவி என் மனத்து எழுந்தருளினதால் பொருந்தாத பொருள் இல்லை என்கிறார்.

இ-ள்:- வானுலகத்தோர்க்கு விருந்தாக அமுதத்தைப் பகிர்ந்து அளிக்கும் அபிராமிதேவி, யான் வருந்தாதபடி மனத்தாமரையில் தானே வலிய வந்து பழைய இருப்பிடமாக எழுந்தருளி இருந்தாள். அதனால் அடியேனுக்கு அடையக் கூடாத அருமையான பொருள் இல்லை எ-ம்.

வருந்தாவகை-வினைக்கு ஈடாகத் துன்ப இன்பங்களில் சுழன்று வருந்தாதபடி என்பதாம். பழைய இருப்பிடமாக இருந்தாள் என்பது அடிப்படப் பழகிய இடத்தில் அஞ்சாது ஐயுறாது புகுமாறு போலப் புகுந்து என்றும்நீங்காது இருந்தாள்

என்பதாம். ஒரு பொருளும் என்பது இம்மை மறுமை இன்பத்திற்கு வேண்டிய பொருள்களும் செம்பொருளாகிய வீடும். புலவர் - தேவர், வேலை - பாற்கடல், மருந்து - அமுதம்.

## தொழுவாரைத் தொழுவார் எய்தும் பயன் சொல்லுகின்றது

**மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்**
**புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை**
**சொல்லிய வண்ணந் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்**
**பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே. 91**

இ-ள்:- மின்னற் கொடிபோன்ற மெல்லிய இடையையுடையவரும், சிவபெருமானால் தழுவப் பெற்ற தனங்களோடு கூடிய பொன் போன்றவரும் ஆகிய அபிராமிதேவியைத் தோத்தரித்து, வேதவிதிப்படித் தொழுகின்ற அடியார்களைத் தொழுகின்றவர்க்குப் பலவாத்தியங்கள் ஒலிக்க வெள்ளையானையை நடத்தும் இந்திரபதவியை அம்மை அளித்தருளுவர் எ-ம்.

விரிசடையோன் புல்லிய மென்முலைப் பொன்னனையாள் என்றது பெருமான் ஆரத்தழுவியும் பொற்சுணங்கு அகலாமையால் பொன் நிறத்ததாய் இருந்தது என்பதனை அறிவித்தவாறு.

## புறந்தொழாப் பெற்றி பேசியது

**பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்**
**இதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யாருெருவர்**
**மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்**
**முதத்தேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே. 92**

அபிராமிதேவியே! தேவரீர் வழியடிமை கொண்டவதனுல் புறச்சமயம் போகேன். புறச் சமயத்தவர் போன வழியிலுங்கூடப் பொருந்தேன் என்றருளிச் செய்கின்ருர்.

இ-ள்:– பெருமகிழ்ச்சியோடு கூடிய மும் மூர்த்திகள் முதலான தேவர்கள் யாவரும் வணங்கும் புன்னகையையுடைய பெருமாட்டியே! அளியேன் மனமானது பரிபக்குவமாகித் திருவடித்தாமரைகளி லேயே பற்றிநின்று, உமக்கு இதமான நெறிகளி லேயே யொழுக அடிமைகொண்டனே. ஆதலால் யான் புறச்சமயிகளின் கொள்கைகளில் மயங்கேன். அவர்கள் போன வழியை மிதித்தும் நடக்க மாட்டேன் எ-ம்.

என்னுடைய செயல்கள் எல்லாம் மடிய, அம்மைக்கு இதமான செயல் எதுவென்று ஆராய்ந்து நடப்பதிலே என் கருத்தைப் பதிவித் தாய்என்பார் 'இதத்தே ஒழுக' என்ருர். அடிமைக்கு ஆண்டவன் இதம் அன்றித் தன்னிதம் பேணல்

கூடாமையும் காண்க. ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்ட உத்தமக் கற்புடையாள்போல உனக்கு அடிமைப்பட்ட யான் வேற்று மதத்தில் மயங்கேன் என்றார். ஒருவர் என்றது நிலைமையறியாது இவரைக் குறைகூறிய சிவானந்தப்பேறு அறியாத 'அகம்பிரமாஸ்மி' கூட்டத்தாரை. வழியை மிதித்தாலும் பாதத்தூள் ஒட்டி அறிவை மயக்குமாதலின் வழிச்செல்லேன் எறார். முதம் -மகிழ்ச்சி. முதற்றேவர் என்று பாடங்கொள்வாரும் உண்டு.

## கற்பனை கடந்த கருணையுருவைக் காணவேண்டியது

**நகையே யிஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு**
**முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த**
**வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநாம்**
**மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே. 93**

இமவானுக்கு மகளாக அவதரித்தாள்; இவள் அவயவங்கள் இத்தகையானவை என்பதெல்லாம் வீண் கற்பனை பெருங்குற்றம். ஆதலால் இவளது' உண்மைத்தன்மையை நாடி யன்புசெய்யவேண்டும் என்கின்றார்.

இ-ள்:- உலகமாதாவாகிய அபிராமிதேவிக்குத் திருத்தனங்கள் தாமரை மொட்டுக்களே. கண்கள் மானே; இமவான் மகளென்று சொல்வதும் பெருங்

குற்றமே. அதனல் அம்மைக்குப்பிறவி உண் டென்று கூறுவதும் வீண் பொய்யே; இவை யெல்லாய் முடிந்த முடிவாகிய சைவசித்தாந்த சாஸ்திரத்து பதியியல் கூறும் பண்பறிந்து ஆரா யின் பெரும் சிரிப்புக்கிடமாகத்தானிருக்கும் எ-ம்.

உலகத்துப் புலவர்களாய் அம்மைக்குக் கண் காது தனம் முதலியனவற்றைக் கற்பித்து, மான் வள்ளை தாமரைமொட்டு முதலியவற்றை ஒப்பிட்டுத் திரிவதும், மலையரசன் மகளாகப் பிறந்தாள் என்று பேசுவதுமாகிய எல்லாம் பிதற்றுரைகள். உண்மைச் சாத்திரங்கள் அவள் கருணை வடிவத் தள் ஒளியுருவினள் என்று கூறும். அதனை ஆராய்ந்து அன்புசெய்யவேண்டும் என்று விளக் கியது.

## அடியார்தன்மை யறிவித்தது

**விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்**
**அரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து**
**சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்**
**தரும்பித்த ராவரென் றலபி ராமி சமயநன்றே. 94**

கண்ணீர் மல்குதல், மயிர்க்கூச்செறிதல், நாத் தழுதழுத்தல் முதலியன அபிராமியைத் தொழு மடியார்கள் தன்மைகளாம். இத்தன்மைகளை

யெல்லாம் பிறர்க்கும் அளிப்பவர்கள் அவர்கள். ஆதலால் அபிராமியை வழிபடுஞ் சமயமே நன்று. என்று அருளுகின்றார்.

இ-ள்:- இடையறாப் பேரன்புபூண்டு வழிபடுகின்ற அடியார்கள் அன்பு மிகுதியால் ஆனந்தக் கண்ணீர் நிறைந்து, உடல் முழுதும் மயிர் சிலிர்த்து அகம்கொள்ளாதே ததும்பிய ஆனந்தத்தை எய்திச் சீவபோதமற்றுப், புதுத்தேனுண்ட வண்டினைப் போலப் புதுக்களிப்பெய்தி, அதனால் மொழி தடுமாறித், தானடைந்த பேறுகளைப் பிறர்க்கும் கொடுப்பர் என்றால், அபிராமியை வழிபடும் இந்தச் சமயமே நல்லது எ-ம்.

விரும்பித் தொழும் அடியார் - விருப்பம் ஆன்மாக்களுக்குள்ள பொதுவியல்பு ஆதலின் அதனை நிலையில்பொருள்கண்மேற் செலுத்தாது அம்மைமீது செலுத்தித் தொழுகின்ற அருமையுடையார் என்பது விளக்கிநின்றது. களித்தவர்களுக்கு மொழி தடுமாறல் இயல்பாதல் காண்க. முன்சொன்ன எல்லாம் தரும் என்பதற்கு இவர் வரலாற்றை நினைவுருத்தி அடியார்கள் நினைவின்றி முன்சொன்ன எல்லாவற்றையும் பொருளுடையனவாகத் தரும் என்பாரும் உளர். அறிவழிதல் களிப்பெய்தல் முதலியவற்றை 'வாமசமயக் களி என்று குறை கூறிய சித்தாந்த விரோதிகள் கூற்று உண்மையன்று. இது சிவானந்தாநுபவச் சிறப்பு என்று உண்மையுணர்த்தியவாறு.

## குழைந்து முளைப்பறல்

**நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ**
**தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லாம்**
**அன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்**
**குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. 95**

தேவி! உடல் பொருளாவியெல்லாம் உனக்கே யளித்துவிட்டேன். நன்மைசெய்; தீமைசெய்; எல்லாம் நும்பாரம் என்று அருள்கின்றார்.

**இ-ள்:-** அழியாத குணமலையே! அருட்கடலே! இமவான் மகளாகிய பேரழகுப் பெருமாட்டியே! நன்மை விளைந்தாலும், தீமை விளைந்தாலும் நானறிவதொன்றுமில்லை. எல்லாம் உன் சுமையே! எனக்கென்று உடைமையான எல்லாவற்றையும் ஆட்கொண்ட அன்றைக்கே யளித்துவிட்டேன் எ-ம்.

இப்பாடல் முழுதும் 'அன்றேயென்றன்' என்ற குழைத்த திருவாசகத்தை மனத்துட்கொண்டு எழுந்தது. நான் அறிவது ஒன்றேயும் இலை - என்னுடைய வசம் அற்றுப்போனமையால் அறியும் ஆற்றலிலேன் என்பதாம். எனக்குள்ளன - ஆன்ம போதம் உள்ளகாலத்து, உடைமையாக எண்ணி யிருந்தஎன்னுடல், என்னுயிர் என்பொருள் என்ற மூன்றும். அன்றேயென்றது-நீயே விரும்பி அர்த்த நாரீச்சுரர் கோலத்தோடு எழுந்தருளிக் காட்சி

வழங்கிக் கருத்தழித்துக் குடிபுகுந்த அன்றே என்பது விளக்கிற்று. உரிமையிருந்தால் முனைப் பெழும் ஆதலின் அளித்துவிட்டேன் எனத் துணிவுப்பொருள் தரும் விடு விகுதிபெற்றது. குணக் குன்ருக, குன்றின் செல்வியாக நீயிருக்கும் பொழுது அடியேற்கு ஒரு துன்பமும் வராது என்பார் 'குணக்குன்றே! இமவான் பெற்ற கோமளமே' என்று அம்மையை யழைத்தார்.

## தொழுவார் எய்தும் பயன் சொல்லியது

**கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்**
**யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய**
**சாமள மேனிச் சகலக லாமயி றன்னைத் தம்மால்**
**ஆமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே. 96**

இயன்றவரை வணங்குவார் ஏழுலகுக்கும் அரச ராவர் என்பதருளுகின்ருர்.

இ-ள்:- செந்தாமரைப் போதகத்து வீற்றிருக் கும் கோமளவல்லியை, யாமளத்தின் கொழுந்து போல்பவளை, துன்பில்லாதாளை, எழுதுதற்கரிய கருத்த திருமேனியையுடைய எல்லாக் கலைகட்கும் உறைவிடமாகிய மயில்போன்றவளை, இயன்றவளவு தொழுபவர்கள், ஏழுலகிற்குந் தலைவர் ஆவார்கள் எ-ம்.

யாமளம் - சக்தி தந்திரங்களுள் ஒன்று. தான் துன்பற்றவரே தன்னை யடைந்தார் துன்பத்தை நீக்க முடியும்; ஆதலின், அக்குறிப்புக் கொண்டு தேவியை ஏதமிலாள் என்று கூறினர். அழகு எழுதுவோனுடைய கருத்திலும், கையிலும், துகிலிகையிலும் அடங்கிற்றிலதாதலின் 'எழுதரிய மேனி' என்றார். மயில் பல நிறங்களையுடையதாயினும் சாயலால் ஒற்றித்துநின்று, பித்தங்கொண்டார்க்குத் தெளிவுறுத்துதல்போலப் பலவிதமான கலைகளால் வேறுபட்டிருப்பினும் முடிவொன்ருய்க், கலங்கிய ஆன்ம அறிவைத் தெளிவித்தலின் 'சகல கலா மயில்' என்றார். பித்துண்டார் காலையில் மயிலைப்பார்த்தால் பித்தந்தெளியும் என்பது வைத்தியநூற்றுணிபு. தன்பெருமையெண்ணுது, ஆன்மாக்களின் இழிவுக்கேற்ப ஏற்று, அருள்செய்வள் என்பார் 'ஆமளவுந் தொழுவார்' என்றார்.

போற்றுவார் யார்? எனப் புகன்றது

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

சூரியன்முதல் காமனீருக எல்லாத் தேவரும் அம்மையைப் போற்றுவார்கள் என்றருள்கின்றார்.

இ-ள்:- சூரியன், சந்திரன், அக்னி, குபேரன், இந்திரன், பிரமன், உருத்திரன், திருமால், அகத்தியர், வேலன், கணபதி, மன்மதன் முதலாக முற்றுப்பெற்ற புண்ணியவான்கள் பலரும், அபிராமி தேவியை வணங்குவார்கள் எ-ம்.

இவர்களே வழிபட்டுப் பெரும்பயன் எய்தும்போது, நாம் வணங்கி உய்யவேண்டாமா என்று குறிப்பித்தவாறு. சாதித்த புண்ணியர் என்றதால் அம்மையைப் போற்றிப் புண்ணியம் சாதிப்பது அருமையானதுதான் ஆயினும் சாதித்தாற்பெறும் பயன்பெரிது என்றுணர்த்துகிறார்.

## பொய்யர் நெஞ்சிற் பொருந்தாமை விளக்கியது

**தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்**
**கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே**
**மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்**
**பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே. 98**

அபிராமியே! நின் கணவர் நினது திருவடிகளை வருடிச் சூட்டிக்கொண்டகாலத்து அவர் கையில் உள்ள தீயும், தலையிலுள்ள கங்கையும் கரந்தது எங்கே? என்று வினவுகின்றார்.

இ-ள்:- உண்மையன்பர் உள்ளத்திலல்லாது பொய்யன்புகொண்ட வஞ்சகர் நெஞ்சத்துப் புகவறியாத இளங்குயிலே! உனது திருவடித்தாமரை

யைத் தடவிக்கொடுத்துத் தலையிலும் சூட்டிக் கொண்ட நின் கணவர்க்கு கைக்கண்ணாகிய தீயும், தலையிலுள்ள கங்கையாறும் எங்கே ஒளித்து விட்டன எ-ம்.

உன் ஊடலைத்தணிக்கத் தீக்கையால் வருடி இருப்பின் செந்தாமரைத்திருவடி வதங்கி வருந்தி இருக்கும். கங்கைத்தலையில் உன் அடி பட்டிருப்பின் மாற்றாள்மேனி தீண்டிய அதனால் ஊடன் மிகுந் திருக்கும். ஆதலால், அவர் எங்கேயோ அவற்றை ஒளித்திருக்கவேண்டும். அது எங்கே? என்று உன்னைக்கேட்கிறேன் என்று தாய்க்கு உற்றது உரைக்கும் சேய்த்தன்மையில் இவர் நிகழ்தல் காண்க. அம்மையைக் குயிலாகக்கொண்டதாலும் புகவறியா என்ற வினையாலும் மெய்யன்பர் மனம் இளமரக்காவாகவும் பொய்யர்மனம் பாழுங்காடாக வும் இவராற் கருதப்பெற்றது என்பது புலனும்.

## ஐந்துநிறம் படைத்த அம்மையின் தன்மை அறிவித்தல்

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே. 99

அபிராமிதேவி இடங்கட்கு ஏற்ப ஐவகை நிறத்தோடு இருந்து அடியார்கட்கு அருள்வழங்குவார் என்கின்றார்.

இ-ள்:- கயிலாயபதியாகிய பரமேஸ்வரனுக்கு இமவான் அன்றைக்கு பெறாதே பெற்றுக்கொடுத்த பெருமாட்டி, கடம்பவனத்திற் குயிலாக இருப்பாள்; இமயமலையில் மயிலாக இருப்பாள்; வானமண்டலத்துச் சூரியனாக இருப்பாள்; தாமரையில் அன்னமாக இருப்பாள் எ-ம்.

குயில்-கருமை. மயில்-நீலம். வெயில்-செம்மை, அன்னம் - வெண்மை. இமவானளித்த கனங்குழையே என்றது பசுமையை உடம்பொடு புணர்த்திக் கூறியவாறு. ஆகவே அம்மை ஐந்து நிறத்தோடும் விளங்குகிறாள் என்பதை அறிவித்தவாறு. 'நிறங்களோரைந்துடையாய்' என்று மணிவாசகம் இறைவனுக்குச் சொல்லியதுய்த்துணரத் தக்கது. குயில் முதலியன காடு மலை முதலிய இடங்கட்குப் பெருவிளக்கஞ் செய்வனவாதலின் அம்மையும் அங்கங்குப் பெருவிளக்கம் செய்வர் என்பது குறிப்பித்தவாறு.

## நெஞ்சிலெப்போதும் நிலவுதல்கூறியது

**குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி**
**கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்**
**விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்**
**உழையைப்பொருதகண் ணுநெஞ்சிலெப்போதுமுதிக்கின்றவே.**

தேவியின் தியானமே என் சிந்தையுள் எப்பொழுதும் குடிகொண்டுள்ளது என்றருளுகின்றார்.

இ-ள்:- தளிர் விரவத் தொடுக்கப்பெற்ற கொன்றைமாலையின் மணங்கமழ்கின்ற திருத்தனபாரங்களையுடைய அபிராமிதேவியினது மூங்கிலை வென்றடக்கிய திருத்தோள்களும், கரும்புவில்லும், எல்லார்க்கும் ஆசையை விளைவிக்கும் புஷ்பபாணங்களும், வெள்ளிய புன்முறுவலும், மானையொத்த கண்களும் அடியேன் மனத்து எப்போதும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன எ-ம்.

இழையைப்பொருதது பசுமையாலும், தன்மையாலும், மென்மையாலும் வென்றடக்கியது. உதிக்கின்றவே என்று அந்தாதியாக உதிக்கின்ற செஞ்சுடர் நினைவு உண்டாக மண்டலித்தார்; அம்மையின் இவ்வயவங்களும் இளஞாயிறுபோலச் சிவஞான ஒளிதந்து சிந்தையில் நிற்கின்றன என்பதறிவித்தற்கு. அம்மை ஆண் பெண் இருபாலர்க்கும் விழைவுண்டாக்கும் கரும்பு வில்லையும், புஷ்பபாணத்தையும் தாங்கி நிற்பதாலேயே உலகம் இடையறாது வளர்ந்து வருகிறதென்பதாம்.

## நூற்பயன்

**ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்**
**பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்**
**காத்தாளை யங்கையிற் பாசாங் குசமுங் கருப்புவில்லும்[லையே**
**சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்**

இந்நூலைத் துணையாகக்கொண்டு அபிராமியைத் தோத்தரிப்பார்க்குத் தீங்கு இல்லையென்று தெரிவிக்கின்றார்.

இ-ள்:- எல்லா உலகங்களையும் பெருது பெற்றவரும், (அதனால்) உலகமாதாவும், மாதுளம்பூப் போன்ற செந்நிறத்தையுடையவரும், உலகமுழுவதையும் காப்பவரும், திருக்கரத்தில் தாமரையையும், அங்குசத்தையும், பாசத்தையும், கரும்பையும் தரித்தவரும், மூன்று கண்களையுடையவரும் ஆகிய அபிராமியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கும் இல்லை எ-ம்.

முக்கண்ணி என்பது சூரியகண்டமும், சந்திரகண்டமும், அக்னிகண்டமுமாக விளங்கும் திரிபுராசக்கரம். அதில் விளங்குபவள் ஆதலால் திரிபுரை என்றார். அங்குச பாசங்குசுமக் கரும்பு ... என, ஊகபாடங்கொண்டிடாப்படுவாரும் ... திரிபுரையைத் தொழுவார்க்குத் தீங்கேயில்லை எல்லாம் நன்மையே என்பதாம்.

அபிராமி அந்தாதி முற்றிற்று.